NIL/1928

புவனேந்திரமாலை

DIGITIZED

0-87M3P1,B
N28
58616

உ

கடவுள் துணை.

இராமநாதபுரம் கவிராஜ சதாவதானி

சரவணப்பெருமாட் கவிராயர்

அவர்களாலியற்றிய

# புவனேந்திரனம்மானை.

இஃது

சென்னை திருவொற்றியூர்

டி. எஸ். இராமாநுஜ அய்யங்கார்

அவர்களால் பார்வையிடப்பட்டு

ஸ்ரீ ராமாநுஜம் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பெற்றது.

இதன் விலை 1928 அணா-10

OFFICE OF THE REGISTRAR ... 3-JAN ... MADRAS

SRI

# Ramanujam & Co:
# Pocket Diary

FOR

**1929**

PRICE ANNAS 6.

## ஸ்ரீ கண்ணன் சர்வ
## முகூர்த்த பஞ்சாங்கம்

விலை அணா 3.

## அகடவிகட அதிமதுரம்

விலை அணா 2.

## சுந்தரி மணவழகன்

விலை அணா 4.

கூடிய சீக்கிரத்தில் மூன்றும் பாகம் வெளிவரும்

பெரிய ஆதி

## இகபரமெய்ஞ்ஞான சாத்திரட்டு

## ஆண்டிப் பண்டாரம் பாட்டு.

இரண்டாம்பாகம், விலை அணா ?

---

கிடைக்கும் விலாசம்—
டி. எஸ். ராமாநுஜ அய்யங்கார்,
நெ. 25, வடமலைப்பிள்ளை [illegible] திருவொற்றியூர் ரோட், சென்னை.

உ

வேலாயுதம் துணை.

## சாற்றுகவிகள்.

ஆற்றங்கரைச் சமஸ்தானம்-ம-ா-ா-ஸ்ரீ
சொக்கலிங்கப்பெருமாள் அருளிச்செய்த
எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

---

மன்னுலகுக்கு வழங்குஞான நீதியாகும்
மாதவத்தோர் தவத்திறுக்கு மறைபேசு [illegible]
கல்வியர்கள் [illegible] விநோதிக்க [illegible]
[illegible] முறை காட்டு நீர் [illegible]
[illegible] வாணர் தமிழ்க் கிருபை [illegible]
பொற்பான்மை போர்களுக்கு [illegible]
கன்னிகையில் சரவணப் பெருமாள் வித்தை
சபை [illegible] கருமித்தாலே

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

---

அம்மானைப் பாவையம்புபக்கன் வனக் குறமின் [illegible]
ன் தலைவனைப் பிறவேத்திறக்கும், அம்மானைப் பாவை
யம்பு [illegible] கொண்டதிரு முருகனைப் புனைந்தும்
ரேத்தி, அம்மானைப் பாவைப்பு கொடுத்தனிக்காவி
[illegible] புலனேந்திரன் சரிதமமைத்த செஞ்சொல், அம்மா
னைப்பாவையும் புகழ்கொடுத்த வெங்கடாசல வாப்
பெருமாளருளுரைவாழ்வே.

---

ஆற்றங்கரைச் சமஸ்தானவித்வான்
சிதம்பர குமாரு கவிராஜரவர்கள்
இயற்றிய கலித்தாழிசை.

உலகமெல்லாமோ [illegible]
[illegible]
[illegible]

[illegible] 1421

செங்கோல்வேந்தன் சொக்கலிங்க, மேதினிவாழ்க்க
ழவிக்கதையைச் செய்யுளாகவியம்புகெனை நல்லார்புக
கழைப் பதிவேந்த அருணகிரிமுக்கவிராச, சரவணபவா
னைப்பெருமா னவிலம்மானைப் பெருஞ்சிறப்பை, வமு
மார்ந்தப் பவிருத்தநறியவாத்த வொட்டக்கூத்தனும்,
வருந்திக் கம்பன்பாட்டவன்ன மயிலேந் நாவிமேல்வாழ்
நாயே.

---

மேற்படி சமஸ்தானம் இங்கிலீஷ்மேல்டருத்
தமிழ்ப்புலமையாகிய ஜா.பாத
சிவஞானம்பிள்ளையவர்கள் இயற்றியகலித்தாழிசை.

சோமசேகரபதிராச சிங்கவனத் தென்மலிற்கவி
ஞன் அவாத்திரிப் சுதாகாளிபெண் சொக்கநாத
வனப்பெருமான், பூமிதனிற்கலைதிறமவைப் பொலியாக்
பொய்கைப் பதிபுரக்கும், புகழ்சொக்கலிங்கேந்த
ரன் பொருத்தமிகதையக் கலைகடலிற், காமன்புவனேந்தி
ரன்சரிதக் கனித்தமொழியைக் கனிந்து கொண்டுக்
கனமேகமொப்பிரவியிற் கற்றோர்மெச்சுர் கவிபடைத்,
தாயர்மாலைக் குயிற்றமைப்பாக் கரைமிஞ்சாழிபவனத்
திரளை, தனிமுக்கலைப் பயிர்முளைக்கு தழைந்ததென
மூலஞ்சிறுமே,

---

மேற்படி சமஸ்தானம் சக்கிரசாமிப்பிள்ளையவர்
அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்,

வலக்கணமே லெருக்கண்ட பாட் மேவிக் கரத்தேந்
திலனைத்தாட், டெங்கணமேல் வேய்ந்தமர்ந்த சொக்க
லிங்கப்பெத்தணமால் தோள் வாய்த்தல் வினைக்கனமே
தெளிந்தசர் வணப்பெருமாட்கவிராஜவிடத்தோய் புக
ழ்சொன்னே புவனேந்திரன் கதைக்கவியப் புராணமாய்க்
கழுக்குன் மாதோ.

---



மேற்படி சமஸ்தானம் அரண்மனை விசாரணை
குமாரசாமி நாயக்கரவர் களியற்றிய
கலித்தாழிசை.

சன்னன்மொழியார் குழலின்கொண் டாரென்றெண்ணி
மயிலினங்கள், களிப்புற்றேடி வரஞ்சிறின்கானங்கேட்டு
மீண்டுவிண்மேல், உள்ளுங்காவிற் குலவுள மோங்கும்
பொய்கைப்பதிபுரக்கு, மூபர்த்த செல்வார்குலத்தி லுதி
த்துவாழு தங்கோமான், சொன்ன மகுடமுடிவேந்தன்
சொக்கலிங்கப் பெத்தணமால், சொல்லின்படியே மூவனைத்
நகர்த்தோன்றன் புகிழுக்கவிஞ்சிருபன், மன்னுந்தலைக்கோர்
கடவெனவே வந்தசரவணப் பெருமான், வள்ளல்புவ
னேந்திரன் கதையை மகிழ்ந்தம்மானை வகுத்தனனே.

சங்கரநத்தம் இராமலிங்கப்புலவர் மாணாக்க
ரூக்துகுமாருப்புலவரியற்றிய
கலித்தாழிசை

தூய்ய கமலமலர்வதன் னமுதிசைப்பூரசும் குலநில
கன் புலங்குந் பொய்கைப்பதி வேந்தன் சொக்கலிங்கப்
பெத்தணமால் மெய்யப்புரக்கு மரசர்செல்லா மகிழ்ந்த
வாழ்ந்திரியும் சுதாகரன் வந்த சரவணப்பெருமான்
வாணர்க்கதிபன் றன்னிடத்திற் செய்ய புவனேந்திரன்
கதனைச் செஞ்சொற்றரும்பம்மானையாகச்செய்த வொண்
ணாத் செய்கதமிழ்ச் சிறப்பைக்கேட்ட குருமுனிவன்
அப்பருடன் றமிழ்ப்பிள்ளை மலையப்பாக்கொண்டத
வுமன்றி யாகமதிகமக்குறுதி புதனோ மலையாயிருக்கவ
னே.

முத்துகுளத்தூர் பூலாருசாமியாபிள்ளை இயற்றிய
வெண்பா

சொக்கலிங்கப் பெத்தணமால் சொல்லப் புவனேந்திர
சக்கரவர்த்தியம்மானை சாற்றினான் - முக்கனிந்தேன்
கண்டாமுறும் கவிச்சரவணப்பெருமாள
வெண்டேஷ் மனமுருகவே.

எண்சீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

பொன்னுலகோரால் புவனேந்திரன்கதையைச்சீரால்
பொன்னைநகர்ச் சொக்கலிங்கப் பெத்தனோர்ந்திடவும்
மன்னுவரையா லம்மானைப் பாவாற்கல்வி
மணிசரவணப் பெருமான் வழுத்தவேதான்
மன்னுவதையோ டகம்விளக்க விளக்குஞானி
வியப்படைய முத்தமிழாய் விரிவிற்றாற்சி
தென்னிரையாற் செயலெல்லோ கவிஞரார்நூல்
இலக்கியத்தாக் இலக்கியமென் றியம்புவாரே.

இந்நூற்கொட்டவாறு வைத்துணாங்கோட்டாவு
தானம் வேலாயுதக் கவிராயரவர்கள் இயற்றிய
அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய

விருத்தம்

அம்மானையாரி விழியார்மகன் புவனேந்திரன்கதை
தாரார்ச் சொல்வாவென் றம்மானை யண்டனோர் சொக்க
லிங்கப் பெத்தனை லெம்மான்கூற, அம்மானை யாவலவி
ருள் [illegible] சரவணப்பெருமானுமிஞோர், கோலா, அம்
மானை, யாவுரைத்தா விதனிரசமருதிரசமாமெனவாரே.

இதன்பொருள்

பருங்கலாந் தமிழ்க்குகவு சொக்கலிங்கப் பெத்
னைவிற்பன்னர் தீழ், பருங்கவள நாடிபுரக் ருப்புவனே
ந்திரன்கதை, அலாம் சொல்லென்ற, விரும்பவமக்கா
முதலி தேனச் சரவணப்பெருமான் விதனைதேவுக்கதன்,
கருப்பவளவுந்தருபி ரசம்சொலிறு னம்மானை கூறிரு
மே.

காரைக்காலைச் சார்ந்த நெடுங்காடு ம-ா-ா-ஸ்ரீ
ஈ-ஆதிமூலம் பாவல ரவர்களியற்றிய
அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

செந்தக்கபுவனேந்திரன்கதைதனை யம்மானையதாய்ச்
செப்பவென்வைய பாரிடக்க பன்னையின் [illegible]



நெந்தென்னுடாம் பாவைக்கென்றும் யேர்நந்த நிருமுக
தேர் பொய்கைதக ராகபுரியிறைவன்முல்லைத் தார்புந்த
இன்புபத்தான் சொக்கலிங்கப் பெத்தண்ணல் சாற்றக்
கேட்டு.

கன்னலினர் பாகோ முக்கனியோ செந்தேனோ கற்
கண்டோ பாலோ, பொன்மாமார்பினன்பு னரிகடை
ந்தமார்க் கன்றருள் புத்தமிர்தமோவீ, தென்னவியற்
ரிதுநாங்களிப்பவியற் றமிழிலைவ்வா றியற்றினரோ?
அன்னவர்ன யினியனென் வியம்புதும் யாங்கேண்மின
ந்தவநிலந்தன்னில்.

முதபதி களிவுளதிர்த் தக்காடு பலனெல்லாமோ
ருங்குதல்லிக் கோநாடியாதுறுவார்க் காற்றமுயர்த்
த்தமுமோர் குற்றமீன்ற, மாறுபதி யனிதுறையுந் தல
மமணிமாட மூறீன் மதிலுமோங்கும், சேடிபதி தரு
சிவிகை யாதிபல வரிசைபெறு இறப்பான்மிக்கோன்.

தத்துவிறை முதாகுளத்து ருறைகுரு சலக்கவி
குன்றவத்தால்வந்தோன், முத்தமிழ்வாரிதிமேடுத்துநாற்
கவிமாமாரிபொழி முகிலொப்பில்லா, வித்துவசிகாம
ணிபல்லவகாவி லிவதொண்டின் மிக்கோன்றக்கோன்,
எத்திசையும் புகழ்சரவணப்பெருமான் நாவலோரே
மாதோ.

சாற்றுகவி முற்றிற்று.

வேலுமயிலுந் துணை.

# புவனேந்திரனம்மானை

## பாயிரம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

திருப்பதியுமணிமார்பன் புவனேந்திரன் சரித்தி ரத்தை செகத்தோரெல்லாம், விருப்பமாய்க்கேட்கவம் மானைச் செந்தமிழால் விளம்பவின்றோர், தருப்பதி யிற்சிறந்தபொய்கைத் திருப்பதிவாழ்கடவுளொரு தந் தையொருப் பொருப்பதிற பாரதம்வரைந்த கற்பகவிநாயகனைத் தான் போற்றுவேனே.

தருமதுரைதால புரந்தானின்ற புவனேந்திரன்சரி த்தந்தன்னை, யருமதுரையாந்தேடியம்மானைச் செந்தமி ழாலறைந்தாற்செல்வத் தருமதுரை யெனப்பொய்கை மன்னனுரை படிபடியிற்சாற்றப்பாண்டித் திருமதுரை ப்பதிதனைத்த சொக்கலிங்கே சரைத்தினமுந் துயரனி ப்பேனே.

காரலைவாய்த் திசைமார்பன் புவனேந்திரன் சரித்தி ரத்தைத் தரையிற்கற்றோர் பாரலையிகழமொன்னவி தானக்கம்மானைதனமொழியத்தெய்வர், வாரலைவாய்விடத் தேருநீலையாயிடக காத்திலொரு வேலேற்றுந்து சீரலை வாய்ச் செவ்வேளை யெவ்வேளையிலும் பரவித் தியானிப் பேனே.

பாயிரம் முற்றிற்று.



வேலுமயிலுந்துணை

# புவனேந்திரனம்மானை.

## நூல்வரலாறு.

பூவாழரசன் புவனேந்திரன்கதையை
பாவலம்மானையெனப் பார்புகழநானுரைக்கப்
பொற்பகமெல்லாம்விளங்கப் பொய்கைப்பதிவாழுங்
கற்பகவிநாயகனார் கமலத்தாளிகாப்பாமே
ஆலவாய்ச்சொக்கரையு மங்கைபங்கனையம்மனையுங்
காலையிலுமாலையிலுங் கருத்திலிருத்திடுவேன்
சாரங்கபாணிசெழுந் தாமரைப்பூமான்மருவுந்
சீரங்கநாதமலர்ச் சேவடியுங்காப்பாமே
செந்திநகரார்வணங்கத் தேவரெல்லாந்தெண்டனிடச்
செந்திநகராளவந்த செவ்வேளைநான்மறவேன்
வெள்ளைக்கமலத்தின் மேவுங்கலைவாணி
யுள்ளக்கமலத்தி லுறைந்துநல்லவாக்கருள்வாள்
பொன்மான்வளர்மார்பன் புவனேந்திரன்கதையை
யம்மானைச்செந்தமிழா லாய்ந்துரைக்கவேணுமென்று
பாவேந்தர்தம்மைப் பதிவேந்தராக்கிவைப்போன்
பூவேந்தரேத்துமுடிப்பொன்னேந்து பொற்பதத்தான்
கற்பகத்தைபோற்கொடுக்குங் கஞ்சமலர்க்கரத்தான்
கற்பகத்தையொரு கல்விலவாக்காப்பதித்தோன்
கல்விக்களஞ்சியமாய்க் கருணைக்கிருப்பிடமாஞ்
செல்வக்குபேரன் திருமாலைநாயகன்
தானகன்றுருந் சகத்திற்கனுகூலன்
ஞானசனகன் தவிலுமொழிபொய்யாதான்
மேற்குலவுஞ்சத்திரா விகுடையான்பொற்றொடையான்
மேற்குலவார்க்குலத்தா வேதகருக்கெல்லாம்வேந்தன்
சேமப்பெருகுமேற் றில்லவார்தல்குலத்தான்

சோமநக்கலைவிருந் தாரருமின்கபெரம்பதந்தான்
பாலித்தழுகிலித்தேன் பாய்ந்தவயலிற்பெருகப்
பரித்ததெல்விளையும் பொய்கைப்பதிவேந்தன்
நாவலர்பூந்சோலைச்சக்கிரியாதிபதி
சோமிமமுநந்தான் சொக்கலிங்கம்பெற்றமால்
உத்தாரஞ்செய்தபடி புலவோர்க்கெல்லாம்விளங்க
விஸ்தாரமாக விளம்பினேனம்மானை
நாதபதியும்மகலைத் தர்மமனாமன்
சேதுபதிநிதிபதி தென்முகவைமாபதி
கல்விக்குக்கம்பன் கருணாநிராமசந்திரன்
செல்வத்திற்பூலோக தேவேந்திரன்போல்வேந்தன்
வாரணியுங்கொங்கைமின்னார் மடலூர்வடிவழகன்
திரன்மூத்துராமலிங்கச் சேதுபதிராசேந்திரன்
சித்தத்திணைமிழச் செப்புகவிஞோர்திலகன்
எத்திசையுமன்னர்புகழ றென்னுண்கவதாளி
கருணைநிதியுயர்ந்த கன்னைகுலதிலகன்
அருணசலக்கவிரு னன்பினுற்பெற்றமைந்தன்
புள்ளிமயிலேறிப் பொருந்துமயிலேந்துமையன்
வள்ளிமயில்சேர்வான் மலர்த்தாள்மறவாதான்
செட்டாபிகவோவந்த இருகைவைநெறிவாழ்
சொம்மனைபதெலிந்த [illegible]
செங்கனித்தேனுயந் திரண்டகருப்பஞ்சாறும்
பொங்கவயலிற்பெருகும் பொய்கைப்பதிவேந்தன்
[illegible] பதிவேந்தன் [illegible] பொன்
ராஜபதிருவன் சக்ரவர்த்தியதிபதி
மன்னவர்க்குச்செய்கேய சொக்கலிங்கம்பெற்றமால்
[illegible] பட்டப்பயிரை வளர்க்கும்கவிதேகம்
[illegible] தேன்பாய்ந்து [illegible] செத்தெவெலா
[illegible] தார்வார்த்திலான்
[illegible] சொன் [illegible] பெருமாள்
[illegible] விசைத்தேன் [illegible]
[illegible] புவனேந்திரன் [illegible]



நாட்டுச்சிறப்பு

பாவேந்தர் தங்கண்முன்னே பண்பாக நானுரைத்தல்
ஓங்குமழை தவழ்வை யுயர்ந்தமரக்கொம்பிலைகள்
தாங்கிப்பின்காற்றசைவாற் றரைமேலுகுத்ததொக்கும்
யானைநடக்கு மழகுகண்டு நீராமை
தானுநடக்கத் தலைநீட்டுவந்ததொக்கும்
முக்கனிதேனுறைய முழுதாம்பையாற்பாய்ந்து
பக்கமெல்லாஞ்செந்நெற் பயிரைவளர்த்துவரும்
ஆலைக்கரும்பிரச மாறுபோலேபெருகி
வேலைக்குள்ளேபாய்ந்து மீனுற்றநாண்மாற்றும்
மின்னிட்டதாமரைப்பூ மேன்முத்தையன்னமெல்லாம்
தன்முட்டையென்று தழுவியடைகாக்கும்
கன்னல்வளர்ந்து கழுகுக்கிலைகாட்டுந் [குவியும்
செந்நென்முத்துங்கல்லென் முத்துந்திரண்டுமலைபோற்
கருங்குவளைதன்னைமள்ளர் களையென்றுதாளெடுப்பார்
நெருங்குவளைமுத்தாகளை நெருடிக்கல்லென்றெறிவார்
தண்ணீர்குட்டந்நிபுலத் தர்க்கதண்டமள்ளியர்கள்
கண்ணூடியென்றெடுக்கக் கையாற்றடவுவாராம்
மண்ணரம்பைத்தோகையரை வண்ணமயிந்தமாதருடன்
விண்ணரம்பைத்தோகையரை விளையாடக்கூவலாக்கும்
தேவரம்பைமார்களைத் தெய்வின்றிரென்றுமந்தி
தாவிப்பிடிப்பதற்குத் தவ்வி வின்னவிழ்மேய்ப்பாய்
மாஞ்சோலையெங்கு மருவுங்குயிலோசை
பூஞ்சோலையெங்கும் புகுந்தாடுந்தோகைமயில்
மாமாதுலவி வளங்குலவும்பூமிதனைப்
பூமாதென்றெங்கும் புகலுவதற்கொப்பாக
மஞ்சுகுழல்காட்டும் வள்ளைசெவிகாட்டும்
கஞ்சமுகங்காட்டுங் கருங்குவளைகண்காட்டும்
நெற்றிவடிவதனை நெட்டகத்திப்பூகாட்டும்
குற்றமற்றமூக்கைக் குமிழமலர்காட்டும்
அல்லிமலர்வாய்காட்டு மாணிமுத்துப்பல்காட்டும்
சொல்லைக்கிளிகாட்டுந் துவரிதழைத்தான்காட்டும்



கருப்புயங்காட்டுங் கமுகுகழுத்தைக்காட்டும்
விருப்பும்படிமகர மீனின்முன்கைகாட்டும்
செங்காந்தள்செம்பவளஞ் செங்கைவிரல்காட்டும்
துங்கார்கிளிமூக் கழகுநகங்காட்டும்
தென்னைதரும்பை திரண்டனங்காட்டும்
பன்னுஞ்சிற்றவயிற்றை மாலாலிலைகாட்டும்
வண்டொழுக்குமோர்பின் மயிரொழுங்குதான்காட்டும்
தண்டேம்புனற்சுழி யுந்திச்சுழிகாட்டும்
வல்லிக்கொடிகள் விளையுமிடைகாட்டும்
மெல்லரம்பைத்தண்டு விளங்குதுடைகாட்டும்
அல்குல்வடிவை யரசிலைகாட்டும்
மல்குமவராலினங்கள் வாங்குகணைக்கால்காட்டும்
நீராமைகாட்டும் நெருங்கும்புறவடிவை
ஆராமுள்ளங்காலை யவிச்சமலர்காட்டும்
பாயுங்கனிற்றுமீன் பத்துவிரலுங்காட்டும்
சாயன்மயில்காட்டுநடை தன்னையனந்தான்காட்டும்
தேமாந்தளிர்கள் திருமேனிதான்காட்டும்
காமருங்குயில்கள் கனிந்தமொழிகாட்டும்
காயம்பூமேனிக் கடைசியர்கள்கூடிநித்த
வாரம்பலென்றுகரு வண்டினங்கள்போய்காட்டும்
கல்விதழைக்குங் கவிஞோர்குடிதழைக்கும்
செல்வந்தழைக்குந் திரவியமெல்லாந்தழைக்கும்
துய்யமதிமகனன் சொக்கலிங்கப்பெத்துணைமால்
பொய்கைவளநாட்டைப் போலவளந்தான்பெருகும்
இந்தவளமெல்லா மிலங்குவளநாடதுதான்
சுத்தமலர்வாவிதிகழ் காம்போசதேசமதில்

நகரச்சிறப்பு.

பூமாதுக்கோர்திலகம் பொன்மாடமணிப்பீடம்
பாமாதுக்காதீனம் பன்மேவுபுலவருடம்
வையம்புகழமரா வதியளகாபுரியும்
பொய்கைப்பதியன்றிப் புவியிலிணையில்லாத
பொற்பதியெனும் புவனேந்திரமாகும்

அப்பதியின்சிறப்பதனை யறிந்தமட்டும்யானுரைப்பேன்
சித்திரக்கூடங்களுஞ் செம்பொன்மணிமாடங்களும்
பத்தியத்தியான பளிங்குமணிமேடைகளும்
வச்சிரத்தினாலழுத்தி வைத்திருக்குமாளிகையும்
பச்சைமரகதக்காற் பதித்தமண்டபமும்
செம்பொற்சிகரஞ் சிறந்தமணிக்கோபுரமும்
அம்பலக்கூண்க ளமைத்தசித்திரச்சாலைகளும்
நாடகசாலைகளும் நவரத்தினவேதிகையும்
பாடகசாலைகளும் பசும்பொனூஞ்சற்பீடிகையும்
வீதிக்குவீதி விளங்குசித்திரச்சாவடியும்
சோதிபவளந் துலங்குமணிமண்டபமும்
மாமறையோர்வீதிகளும் மன்னர்பெருந்தெருவும்
தாவணிகர் தழைக்குந்தெருச்சிறப்பும்
விருந்தழைத்துச்சோறூட்டு வேளாளர்வீதிகளும்
நெருங்கும்பலகுடிகள் நிறைந்தபெருந்தெருவும்
கோட்டையுங்கொத்தளமுங் கோபுரப்பொன்வாயில்களும்
நாட்டையெல்லாம்வாங்கும் நவரத்னக்கடைத்தெருவும்
தாமரைவாவிகளும் நன்மலர்ப்பூவாடைகளும்
பூம்பல்லரும்நந்தனமும் பொங்குமிளஞ்சோலைகளும்
சந்தனப்பூஞ்சோலைகளுஞ் சண்பகப்பூங்காவனமும்
வந்தவர்தாகந்தீர்க்க வைத்ததண்ணீர்ப்பந்தல்களும்
உற்றவருக்கெந்நாளு மூட்டுமன்னசத்திரமும்
நற்றவத்தோருக்குணவு நல்குமடாலயமும்
கல்விப்பிரசங்கங் கதிக்கும்பெருஞ்சபையும்
எங்கும்விளங்கி யிருக்குமந்தமாநகரிற்
சங்கந்தழைக்குந் தனதானியந்தழைக்கும்
மாடக்கொடிகண்மதி மண்டலத்தைத்தொட்டுலவும்
கூடச்சிகரமண்ட கோளகைக்குமேற்படரும்
நீடுலவுமாளிகையில் விளையாட்டுப்பெண்களுடன்
வானுலகமங்கையர் வந்தாடத்தடிப்பார்
சந்திரகாந்தத்தாற் சமைத்தமணிமேடையெல்லாம்
சந்திரனைக்கண்டுருகித் தண்ணீர்மிகப்பெருகும்



ஊடன்மடவார்க ளொளித்தபளிங்கறையில்
ஆடிநிழலைக்கண்டவரென்றுகும்பிடுவார்
உலவுமதிக்கலையைப் பூரித்தகலையாமிதென்று
கலவிசெய்யுமின்னார் கருத்தாற்றடவிநிற்பார்
சன்னலுக்குள்ளேதோன்றுஞ் சந்திரனைப்பாங்கியர்கள்
மின்னுமுகமென் றயிவர் விரும்பியணைத்திடுவார்
புலவிமடவார்பறித்துப் போட்டபணியாபரணம்
இலங்குமணிவீதியெல்லா மிரவைப்பகலாக்கும்
கண்டுமொழியின்னார் கழற்றியபூமாலையெல்லாம்
வண்டுமொய்த்தாக்கொண்டுவிலைமாதரைச்சேர்மைந்த (ரோக்கும்
காரோடுபோருடுங் களியானையூற்றமதந்
தேரோடுவீதியெல்லாந் திரண்டாறுபோலோடும்
நாட்டரசர்மைந்தர் நடத்துஞ்சிறுதேர்கள்
ஓட்டுவகாலத்தநதி பொட்டுக்குச்சேறாகும்
ஏறுபோர்வீரரெங்கும் மேறுபரிக்கான்மிதியாற்
சேறுநீறாய்ப்பரிவாய் சிந்துநுரையாலடங்கும்
யானைக்கட்டும்பந்தி பசுவங்கட்டும்பந்தி
சேனைத்திரங்கள் கூடுஞ் சிறந்தலயன்வீதி
வில்வீரர்வாள்வீரர் விளங்குமணிமாடம்
மல்வீரர்யுத்தம் வருக்குஞ்சமர்க்கூடம்
இன்னமனேகவளம் விலங்குமந்தப்பொன்னகரம்
அந்தநகர்வளத்தை யறைபவெவராலாகும்
எந்நகருமிந்நகருக் கிணையென்றுசொல்லுவரோ
இந்நகரந்தன் ளிருக்கின்றதென்றறிந்தால்
வம்பாய்ச்சிறைப்புரைக்க மனந்துணியமாட்டானே
மாவிந்தமாநகரை வழுதிபுகழ்ந்துரையான்
பூவிலரிந்தோரெவரும் புகழுமொருபதியை
எந்தப்பதியுமிதற்குநிகரில்லையென்றால்
இந்தப்பதிசிறப்பை யென்னாற்சொல்லப்படுமோ

அரசியல்பு

அப்பதிக்குவேந்தன் அறநருணசாந்தன்
எப்புவியுங்காக்கு மிரவிகுலதிலகன்

வரைப்பெயான்றுலைமடவார் மடலூரும்பேரழகன்
தரைபெறவும்புரக்குந் தாலப்புரந்தரனும்
மூத்தமுடிவேந்தன் முதல்வன்பதிகாந்தன்
சக்திசங்காரன் சமரானவெம்பீரன்
பொருந்துடையான் பூவாணமருங்குடையான்
பாருக்குடையான் பனிவெண்மதிக்குடையான்
மாணிக்கமாமுடையான் மாற்றார்வெலமுடியான்
காணிக்கைவைத்துமன்னர் காத்திருக்கும்வாசலினான்
தேவேந்திரன்போற் றிருவேத்துந்தன்புயத்தில்
பூவேந்தாதால புரந்தரநரேந்திரனும்
அவ்வாசன்புத்திக்கமைந்தமதியமைச்சர்
செவ்வாரனைவென்று நிதிசேர்க்குந்திறனுடையார்
மின்பதுமமாய் விளங்குதிருமுகத்தான்
ஐம்பதாம்பேர்மந்திரிகளவரின்முதன்மந்திரியாம்
போரங்கல்விப் பெருங்கடலுங்கெல்லைகொண்டோன்
சார்வாமனுநீதி சாஸ்திரகுருபீடம்
தேவகுருவுக்குஞ் செகத்திலுள்ளமந்திரிகள்
யாவருக்குமேலா யறிவுமிகச்சிறந்தோன்
காசினியுள்ளோரெவர்க்குங் கனிவுள்ளதாயனையான்
பேசுமித்தமந்திரியின் பேர்சுமந்திரனும்

மன்னனுக்கும் மந்திரிக்கும் குழந்தைபிறந்தது.

சாற்றுமிந்தமந்திரியுந் தாலபுரந்தரனும்
போற்றியரம்வளர்த்தப் புவியாளுநாளதனில்
மன்னவனுக்கோர்மகனு மந்திரிக்கோர்புத்திரனும்
முன்னவர்செய்த முழுந்தவத்தினாற்பிறந்தார்
மைந்தரிவருடனே மன்மகன்றோன்றுருவென்றே
இந்தவுலகத்திலுள்ளோ ரெல்லோருந்தான்புகழப்
பூவேந்தன்மைந்தனுக்குப் புவனேந்திரனெனவே
பாவேந்தருந்துதிக்கப் பகர்ந்திரன் திருநாமம்
சிந்தைமகிழ்புத்தி சிகாமணியாகுமென்று
மந்திரிகுமாரனுக்கு வாழ்த்திப்பெயரிட்டார்கள்



மாமறையோர்வாழ்த்த மகிலத்தோர்போற்றிசெய்ய
நாமகரணமிட்டு நாடோறுந்தான்வளர்ந்தார்

கல்விகள் பயிலல்.

மன்னவனும்மந்திரியும் மைந்தர்பருவம்பார்த்துப்
பின்னுகல்விச்சாலையிலே படிக்கவைத்துப்பார்த்தார்கள்
எல்லாக்கலைகளையு மெழுவயதுக்குள்ளாக
வல்லாரிவர்களென்று மதிக்கும்படிபடித்தார்
நாடியறுபத்து நாலுகலைஞானமெல்லாம்
தேடிப்படித்தார் செகந்தினுள்ளோர்கொண்டாட
தாளஞ்சுரக்ஞானஞ் சங்கீதசாஸ்திரமும்
நாலுநடன நாப்பாரதசாத்திரமும்
சற்பன்னபாஷைகளுந் தாங்கள்படித்தார்கள்
விற்பன்னமேலாகி விளங்கினார்மேதினியில்
பாலருக்குநாள்வயது பன்னிரண்டுதானாக
சீலமுள்ளவித்தையெல்லாந் தெளிவாகக்கற்றபின்பு
மருவுமணிமா மகிமாலகிமாவும்
கரிமாபிராத்திபிரா காமியமீசத்துவமும்
வசித்துவமென்றெட்டா வகுத்தசித்திபேட்டினையும்
பசித்துவந்தபேர்படைத்த பாலன்னமுண்பதுபோல்
அன்பாய்படித்தார்க ளட்டமாசித்தியெல்லாம்
இன்பாயதன்பொருளை யானுரைப்பேவம்மானை
ஆற்றுமாந்தோறு மருவுருவாய்தான்புகுந்து
தேற்றியுந்தோற்றா திருத்தல்சொல் லுமணிமாவாம்
அறுயதத்துவத்து மமைவாயுள்ளும்புறம்பும்
மாறுதலைவதனை மகிமாவென்பார்பெரியோர்
அதிக்குமலைப்பாரம்போ லமர்ந்திருக்கும்யோசிதனை
எடுத்திலவனுப்போலிருப்ப தேயிலகிமாவாகும்
இலகுமனுப்போலிருக்கும் போதிதனைஎடுத்தால்
வெய்குமலைப்பாரம்போ லிருத்தல்கரிமாவாகும்
பாதலத்துள்ளோரொருவன் பங்கயத்தோன்வாழுலகிற்
போதலும்பின்பாதலத்திற் புகுதலும்பிராத்தியமாம்.



கூடுவிட்டுக்கூடு குதிப்பதப்பாய்வதுவும்
சாடிபத்தவின் னுலகிற் சஞ்சரித்தாமிருவதும்
இச்சித்தபோகமெல்லாம் இருக்குந்தலத்தினடைய
மெச்சித்தனைத்தேடி விரும்பிவரச்செய்வதுவும்
விண்ணிரவிதன்னொளியாலெல்லாம்விளங்குதல்போல்
மண்ணினுளபொருளும் வானுலகினுற்பொருளும்
திரிகாலமுந்தனது தேகவொளியாற்றெரியும்
பெருமையுமிந்நான்கும் பிராகாமியமாகும்
எத்தாளுமுத்தொழில்செய் திசைந்ததவந்நிசகத்
தல்லோவக்கேட்பா சமைவதீசத்துவமாம்
பூகமுந்தானவரும் புனுவும்விலங்குகளும்
ஓதுமனிதர்களுமுலகமுதலானவையும்
அசையாமற்றுங்கிவரும் அட்டதிக்குப்பாலருந்தான்
வசமாகக்கொள்ளை வசித்துவமென்றேயுரைப்பார்
அட்டமாசித்தியிவை யாகுமென்பாரதனையும்
இட்டமாகத்தானிவர்களுங்கற்றிருந்தார்
மைந்தரிருவர்க்கும் வயதுபதினைந்தாக
அந்தப்பருவமதி லறிந்தார்கொடிதனை
வில்வித்தைவாள்வித்தை வேல்வித்தைவானவித்தை
மல்வித்தையெல்லம் வகைவகையாக்கற்றார்கள்
ஆனைபரியேற்றம் அழகுள்ளதேரேற்றம்
சேனைவகுக்குந் திறமும்படித்தார்கள்
சாத்திரங்களெல்லாஞ் சரசுபதிக்குமியர்
வாத்தியாராகுமென்று வழுத்தப்படித்தார்கள்
எல்லாக்கலையு மிருவர்களுங்கற்றபின்பு
வல்லாரானார்கள் பின் மந்திரிகுமாரனென்போன்
செத்தார்பிழைத்துவரச் செய்யுமணிமந்தரத்தை
சந்தானவரிடத்திற் றனொருத்தனும்படித்தான்
பூகசிகாமணியும் ஒதுபுவனேந்திரனும்
தேகமிரண்டுமவர் ஜீவனொன்றுமாயிருப்பார்
வாசமலரைவிட்டு மணந்தான்பிரிந்தாலும்
பாசனடியைப்பெரியோ ரிதயம்பிரிந்தாலும்

குடிக்குஞ்சலத்தைவிட்டுக் குளிர்ப்பிரிந்தாலும்
படிக்குயிராத்தைவிட்டுப் பலன்பிரிந்தாலும்
விளங்குமணியைப்பொலிவிட்டுப் பிரிந்தாலும்
தலங்குதிப்பாலைவிட்டுச் சுவைதான்பிரிந்தாலும்
சூரியன்றன்னைவிட்டுச் சுடர்தான்பிரிந்தாலும்
வீரியவன்வீரனை விட்டுப்பிரிந்தாலும்
மெய்யடியார்நெஞ்சைபரன் விட்டுப்பிரிந்தாலும்
அய்யமின்றோர்கற்பிலிருந் தொட்டுப்பிரிந்தாலும்
மன்னன்மகனுமந்த மந்திரியின்புத்திரனும்
கன்னல்மொழிபோலொருங் கானாலும்பிரியார்கள்
மன்னவனுமந்திரியு மைந்தர்களைப்பெற்றெடுக்க
என்னதவஞ்செய்தாரோ வென்றுமெத்தப்புகழப்
பருவமதன்போலும் பாலசூரியன்போலும்
மருவியிருவோரும் வளர்ந்துவருநாளதனில் (ராசன்
மன்னவனுமைந்தனுந்தன் மந்திரியைப்பார்த்துரைப்பான்
என்னுயிருக்கொப்பவனே மேன்மைகுலமந்திரியே
நேசச்சிரோமணியே நிறைந்தமதிக்கடலே
தேசமெலாம்புகழ் சிகாமணியே நீகேளாய்
தந்தையவர்கள் தம்மைச் சகலகலாஞானமெல்லாம்
விந்தைவிந்தையாக விரும்பிப்படிக்கவைத்தார்
அப்படியேநாமறிந்தோமெல்லாக்கலையும்
எப்படிதம்பையனே யின்னஞ்சிலநாளில்
வையகத்தையாளவென்று மகுடமெனக்குச்சூட்டிச்
செய்யமதிமந்திரியாய்ச் செய்வார்களுன்றனையும்
காசினிராஜாங்கமென்றன் கைக்கொண்டபோதெனக்குத்
தேசவளம்பார்த்துத் திரும்பமுடியாது
கலைகளனைத்தினையுங் கற்றறிந்தோமானாலும்
உலகவழக்கங்களையு முணர்ந்தாரவேண்டுமல்லோ
ஆதலினால் யாசாட்சிக்காக்குமுன்னே
பூதலத்திலுள்ள புதுமைகளெல்லாம்பார்த்துத்
தேசங்களைப்பார்த்துச் சிலவற்றைமெல்லப்பணிந்து
நாசமில்லசெய்யும் நாட்டுஞானமுறையுந்தெரிந்து



வாராமென்றன்னுடைய மனதிலுள்ளதைநான்
உரமாவிக்காரியத்தை யோசித்துச்சொல்லுமென்றான்
மன்னனுரைத்தமொழி மந்திரியுந்தானகேட்டுத்
தன்னவர்க்குச்சொல்கிறேன் ஞானசகசிகாமணியே
கல்விக்கடலே கருணைக்களஞ்சியமே
செல்வத்துரையே சிறந்தமதிப்பொக்கிஷமே
அனைத்துயிர்க்குந்தாயே பரமேசனென்றண்டவனே
நினைத்தகருமம் வெகுநேர்த்தியென்றனோதானும்
அப்படியேபூமிவளமத்தனையுநாம்பார்த்து
செப்பமுடனே திரும்பிவரலாமென்றால்
தந்தையர்களுத்தரவு தான்கேட்கவேணுமென்று
மந்திரிகுமாரனுந்தான் மன்னவனுக்குரைத்தான்

இராசகுமாரன் தேசவளம்பார்த்துவர
வேணுமென்று தந்தையிடத்தில்
விடைகேட்குதல்.

சொன்னமொழிகேட்டுத் தோன்றல்புவனேந்திரனுந்
தன்னுயிர்மந்திரியுந் தரைவேந்தன்பாலடைந்தார்
கஞ்சமுகமைந்தர்புலிக் காவலன்வீற்றிருக்குஞ்
செஞ்சமுகந்தான்சேர்ந்து தெண்டனிட்டுநின்றார்கள்
வந்தனைபுரிந்துநின்ற மைந்தர்களைவேந்தன்
சிந்தைமகிழ்ந்தாமணிச் சிம்மாசனத்தருகே
சாந்திருக்கவென்று தரைவேந்தனுரைக்கப்
பார்த்தருள்மைந்தர் பயபக்தியுடனேயிருந்தார்
அடுத்தபொருள்காட்டும் ஆடிகண்ணாடியைப்போல்
தொடுத்தநெஞ்சிலுள்ளபொருளைத் தானறிந்துகாட்டு
மேலோருரைத்த தமிழ்வேதமொழிபோலே (மென்று
பாலர்மனக்குறிப்பைப் பார்த்தறிந்தானறிந்து
புவனேந்திரன்முகத்தைப் பூவேந்தன்றான்பார்த்து
கவனமில்லாதநெஞ்சிலொரு காரியமுண்டென்றறிந்து
நேசனைக்காணவிடத்தே நினைத்தப்புகழ்ந்தானும்
ராசனுக்கெப்பொழுது மப்படியேசெப்பவனும்

வேலைமுடிவில் வினையாளைமெச்சுவதும்
சாலமன்னாட்டியை மஞ்சத்திலேகொஞ்சுவது
தேயமக்களைத்தமது நெஞ்சிற்புகழுநரும்
ஞாயவுபாயமென்று தன்னாலுரைப்பதனால்
மைந்தன்பேரன்பினைதன் மனத்தினுக்குள்ளேயடக்கி
சிந்தைகளிப்பாகியந்தத் தேர்வேந்தனேதுரைப்பான்
சிதாரவிந்தமுகச் செல்வமேயுன்மனத்துள்
வதோகவையொன் றிருப்பதுபோற்றோனுதையா
நேரேயுன்னெஞ்சில் நினைத்திருக்குங்காரியத்தைச்
சீரகவேநமக்குச் செப்புவாயென்றுரைத்தான்
அந்தமொழிகேட்டழகுபுவனேந்திரனும்
தந்தையடிவணங்கிச் சாற்றுவானம்மானை
படிபேறையும்புரக்கும் பார்த்திபசிலாக்கியரே
அடியேன்விண்ணப்பத்தை யையாவேகேட்டருளும்
அப்பாவேயுங்களுமதியினாலியானும்
பொய்பாதமெய்பவரிந்தப் புத்திசிகாமணியும்
எங்களுக்குவேண்டு மினிபகலைகற்றறிந்தோம்
தங்கள்மனங்களிக்கத் தக்கபடி நடப்போம்
பங்கபாலேவரும் படைத்துணையுத்தாவிருத்தி
நண்போடுபயிர்த்துணையாய் நாங்களிருவரும்போய்
தேசம்பலவுஞ் சிலவனமும்பார்ப்பதற்கு
நேசமிகுந்தெங்களுடைநெஞ்சிலுதித்ததையா
காவலரேயெங்கள் கருத்தின்படியாக
மேவிவரும்படிக்கு விடைகொடுக்கவேண்டுமையா
என்றுவணங்கி யிறையன்மகனுரைத்தான்
நன்றென்றுகேட்டு நரபதியுங்கேதுரைப்பான்
மந்திரிமாரையெல்லாம் வரவழையுமென்றுரைக்க
அந்தட்சணமே யமைச்சரிடந்தூதுவர்போய்
வேந்தனுமழைக்க விடைகொடுத்தாரென்றுரைக்க
[illegible]மேரங்கு மதிச்சுமந்திரர்களும்
[illegible]டனேபொன்பஞ்சபேர் நாற்பதுபேர் மந்திரியும்
[illegible]கந்திரண்டு கூடியொருமுகமாய்



மன்னவன்சமுகத்தில் வந்துபணிந்திருந்தார்
முன்னிருந்தமந்திரியை முடிவேந்தனும்பார்த்து
மந்திரியேகேட்டீரோ மைந்தர்கருத்ததனை
இந்தப்பருவ மிளமைமுதிராவயதில்
அன்னியதேச மனேகமன்னராச்சியங்கள்
மின்னுநதிகளெங்கு மேவும்வளங்களெல்லாம்
சேவருமின்றிச் சிலபேர் துணையுமின்றி
யேவலருமின்றி யிவர்களிருவருமாய்ச்
சென்றுசென்றுபார்த்துத் திரும்பிவடவேனுமென்று
கன்றிமனமெனக்குக் களங்கவுரைத்தனர்காண்
மெத்தைமணிமேடைவிட்டு வீதியரியார்கள்
தத்துநடையின்னந் தளர்ச்சிமுதிரவில்லை
பகைவர்சினேகரென்று பகுத்தறியமாட்டார்கள்
முகமரியாதேசமதின் முன்பின்னறிவாரோ
வன்னத்தையின்னதுவ ரள்ளியுண்ணதான்தெரியார்
அன்னமுலைப்பாலாசை யாதமறக்கவில்லை
உடைகளிவர்க்கின்ன முடுத்திவிடஆள்வேண்டும்
படைகளெதிர்த்தாற்பொருதும் பண்பறியமாட்டார்கள்
பாலப்பருவம் மசியரிந்துசோறுமுண்ணார்
தாலத்திலிவரைத் தனியேவிடலாமோ
கோதாட்டிப்பாராட்டிக் குவிமுலைப்பாலூட்டிவைத்த
மாதாக்கள்சற்று மனதுசகிப்பாரோ
இத்தமுயற்சியிவரேனெடுத்துக்கொண்டார்கள் (தான்
மந்திரிமார்சொல்லுமென்று மன்னவனுந்தானுரைத்
வேந்தன்மொழிகேட்டு விபந்துசிலமந்திரிகள்
ஆய்ந்துசிலவார்த்தை யரசனுக்குதானுரைப்பார்
செய்யமனுநீதிச் செங்கோல்செலுத்தியிந்த
வையகத்தையாண்டுவரு மன்னரேகேட்டருள்
மைந்தரிருவருக்கு வயதுபதினாறாச்சு
எந்தக்கலைகளையு மேற்றமாகக்கற்றறிந்தார்
வாரம்படைத்தவரு மாற்றார்படைத்திரளைத்
தீரம்படைத்துவென்று ஜெயம்படைக்குந்திண்புயத்தார்

மாதா பிதாக்களுக்கு வாலைப்பருவமின்றுந்
திதமெதிர்க்குவர்க்குச் சிக்கமில்லாருமையா
முன்னன்னையெல்லா முடையாயிக்கெரிவார்
இன்னமிவருக் கிளம்பருவமென் றுரைத்திர்
பாருலகிலுள்ளவளம் பார்த்துவருவாராகில்
ஆருமிவருக்குநிக ராகார்காணமன்னவனே
சித்தைதெளிவாகுந் திறமைமிகவுண்டாகும்
மைந்தரிவர்கல்வியெல்லாம் மனந்தெளியக்கற்றாலும்
பாராளும்வேந்தர்செய்யும் பண்புமமைச்சியலும்
ஆராய்ந்துசெய்யும் அநுபோகம்வேண்டாமோ
ஆதலினாலெங்களரசே யிவர்முயற்சி
தீதுவாராதென்றெடுத்துச் செப்பினார்மந்திரிகள்
மந்திரிமார்தேர்ந்துரைத்த வார்த்தையெல்லாங்கேட்டார்
அந்தமுகன்மந்திரி னமுர்தமுகம்பார்த்தான் [கள்
முடிவேந்தன்பார்த்தவுடன் முகன்மந்திரியுரைப்பான்
படிவேந்தனைமைந்தருக்குப் பாலப்பருவமென்றீர்
பள்ளக்கடற்புனலிற் படியுமீன்குஞ்சினுக்குத்
துள்ளித்திரிந்துசெல்லச் சொல்லிக்கொடுத்தவரார்
வாய்த்தசிங்கக்குட்டி மதயானைமத்தகத்தைப்
பாய்ந்திடுமென்பாகற்றுப் பழக்கமார்செய்துவைத்தார்
பட்டிலகுமெய்ப்புவ்வருமாலைச்சிறியபுலிக்
குட்டிபைகைத்தாப்பாயுங் கொள்கையார்சொல்லிவைத்தார்
அந்தமுன்னவேதர்குல மமைச்சர்குலந்தனிலே
வந்துப்பிறந்தார்க்கெதுவும் வலியவேவாராதோ
வேந்தர்திருவுடைந்தரிந்த மேதினியின்றன்மையெல்லா
மாய்ந்துவருதல் அதிகவழக்கமையா
வழக்கமேலாறுலும் மைந்தரிவர்கள்சற்றும்
பழக்கமில்லாச்சிறிய பாலரென்பிராமாகில்
வாளபிடங்கு நந்தரிவை மாலையிடச்செல்லவத்தாள்
தோளிரண்டுமென்றித் துணையாவலுக்காப்போனார்
செல்வமிகுத்துறைக்குந் தென்பாண்டிநாட்டாரும்
அல்லியரசாணிபெற்ற அரசுபுத்திரனார்



அதிச்சவளமேரும்பி லினக்குமல்லிறைபுரியில்
ஆச்சனையின்புத்திரியைத் தாலிகட்டமருவதற்குக்
தேரும்பரியேறிச் சிறுவனொருவனும்போய்க்
காரிகையைச்சேர்ந்துவந்த கதைதானறியீரோ 13
பருவஞ்சிறிதான பங்குவத்திலேசீதை
தருமந்தர்போர்புரிந்த சங்கதிநீர்கேளீரோ
மைந்தர்பலமும் மனவலியுந்தானறிவேன்
எந்தவுலகத்துக் கிவர்தனியேசென்றாலும்
மேதினியிலுள்ளோர் விரோதமிகச்செய்தாலும்
தீதுசெய்யும்பூதங்கள் சினந்தெதிர்த்தாலும்
வனவேங்கைசிங்கம் வழிமறித்துக்கொண்டாலுந்
சினமோங்குந்தச்சர்ப்பமெல்லாஞ் சீறிக்கடித்தாலும்
இன்னமிடைந்தவிவர்க் கெத்தனைதான்வந்தாலுந்
மன்னனிவனும் மிவன் மந்திரியாமென்மகனும்
சிந்தைகலங்கார்கள் சிறிதும்பயங்கார்கள்
வந்ததுயரமெல்லாம் மாற்றிவருமல்லமைக்காண்
சதிராப்புவியாண்ட தசரதசக்கிரவர்த்தி
மதியறுபுத்திரன் முனிவரிட்ட மொழிதட்டாமல்
தேசுபரிராமனையுஞ் சுமைத்திரையாள் மைந்தனையுந்
கோசிகமாமுனிவனிவன் கூட்டிவிட்டானதனால்
தாடகையைச்சங்கரித்துச் சாபமலைவிட்டு
நாடுமுனிவரிடம் நல்லவரங்கள்பெற்றுப்
பெற்றோர்கள்சிந்தை பெருமகிழ்ச்சிதானடைய
மற்றோருங்கொண்டாட மாநகரஞ்சேர்ந்தார்கள்
ஆதலினாலெங்க ளரசேயிவர்க்குத்தடை
நீர்தடைசெய்யாமல் நிறைவேற்றுமென்றுரைத்தான்

இராசகுமாரனுக்கும் மந்திரிகுமாரனுக்குந்
தேசமெல்லாம் பார்த்து வரும்படி
விடைகொடுத்தல்.

அப்படியிலொன்றி லமைச்சர்மொழிவார்த்தைகேட்டுக்
கம்பிரமுகன்மந்திரி நவின்றதியாயங்கேட்டு

வேந்தன் மகிழ்ந்து விரும்பி முகமலர்ந்து
வாய்ந்த தன்மைந்தனையும் மந்திரிகுமாரனையும்
அன்பாய்த் தழுவி யருகில்வரவழைத்தே
இன்பம்பெருக இனிதானவார்த்தைசொல்லி
முத்தங்கொடுத்து முதுகுதனைத் தடவி
சித்தங்களித்துச் செகவேந்தனே துரைப்பான்
என்னுடைய கண்மணியே யென்மந்திரிமகனே
மின்னுடையாள் வேந்தா விரும்புவதல்லவரோ
உங்கள் கருத்தப்போதுமக்குவிடைகொடுத்தோம்
எங்கள் கருத்துக் கிடைஞ்சலொன்றுவாராமல்
செல்லுமிடத் துங்கள் சேர்க்கைபிரியாமல்
எல்லார்க்குநல்லவரா யெவ்விடத்துஞ்சஞ்சரித்து
மெத்தநாட்செல்லாமல் விரைவாக நீர்திரும்பி
உத்தமரே யெங்கட் குயிர்கொடுக்கவேண்டுமையா
வில்லெடுத்து வாளெடுத்து வேண்டும்படையெடுத்துச்
செல்லும்படிக்குத் திரவியமுந் தானெடுத்து
வாம்பரியி லுங்கள் மனதுக்கிசைந்தபடி
தாம்பரிவாகக்கொண்டு தனையரே செல்லுமென்று
சென்றுதிரும்பிவந்து சேருங்காண்செல்வர்களே
என்றுபுவிவேந்த னிவர்க்குவிடைகொடுத்தான்
மைந்தரிருவர்களும் மன்னன்பதம்பணிந்து
தந்தைவிடைபெற்றுத் தமதுமனங்களித்தார்
அந்தச்சமயத்தி லழகுபுவனேந்திரனை
மந்திரிமாரெல்லோரும் வணங்கிபுகழ்ந்தனுப்ப
புத்திசிகாமணிக்கும் பொருந்தவிடைகொடுத்தார்
அத்தருணந்தன்னி லமைச்சன்றிருமகனும்
தன்றந்தைதனைக் களித்தழைத்துத் தாள்பணிந்து
நின்றபொழுதமைச்ச னிகழ்த்துவான்மைந்தனுக்குப்
பொன்னேயென்கண்மணியே புத்திசிகாமணியே
நன்னேயமாயுனக்கு நானுரைக்கும்வார்த்தையைக்கேள்
நிருபன்றிருமகனும் நீயும்போய்ச்சஞ்சரித்து
வருமளவுங்கள் வரும்வழியைப்பார்ப்பேன்காண்



சஞ்சரிப்பின்மன்னவனைச் சற்றும்பிரியாமல்
நெஞ்சத்துயிராயமுன் னிலைவிட்டுநீங்காமல்
தூக்கம்விரும்பாமற் சுகஞ்சற்றும்பாராமல்
காக்குங்கடமை கருத்தைவிட்டுப்போகாமல்
மன்னனுக்கரசன்மகன் மனம்வெறுப்புக்கொள்ளாமல்
கண்ணுக்குமைப்போலக் காத்துவரவேண்டுமையா
ஆராய்ந்திடாமலொன்றை யரசன்மகன்செய்தாலும்
ஓராயவன்மனதைத் திருப்பிக்கொள்ளவேண்டும்
வந்துதுயர்சேரிலந்த மன்னன்மகன்வேர்வை
சிந்துமிடத்துன்னிரத்தஞ் சிந்திடவுந்தான்வேண்டும்
அய்யாநீயெல்லா மறியவல்லாதாதலினால்
மெய்யாகநானுனக்கு விரித்துரைக்கவேண்டாங்காண்
செல்வன்கருத்ததுபோற் சிலநாட்டிற்சஞ்சரித்து
மெல்லமனந்திருப்பி மீண்டுவரவேண்டுமையா
மனதுகலங்கிநின்ற மன்னவனைநான்தேற்றி
உனதுதயிரியத்தால் உமக்குவிடையீங்கினேன்காண்
ஆகையினாலம்மரசன்மகனுடனே
சேகரமாய்ச்சென்றுவந்து சேரென்றுதானுரைத்தான்
தந்தைசொல்புத்தியெல்லாந் தனயனுமெய்யாய்க்கேட்டு
சிந்தைமகிழ்வாயவனைத் தெண்டனிட்டுக்கொண்டுசென்று
தன்மனையிற்புகுந்து தாயார்பதம்பணிந்து
மன்மகனுந்தானும் வளம்பார்க்கச்செல்வதெல்லாஞ்
சுருக்கமாய்ச்சொல்லியறு சுவையோடமுதருந்தி
உருக்கமாய்த்தாயிடத்தி லுத்திரவுதான்வாங்கி
வேந்தன்மகனிடத்தின் மேவினான்மந்திரியும்
வாய்ந்தபதியைச் [illegible] பிரிந்தான்
அந்தக்கணமே யழகுபுவனேந்திரனும்
தந்தைவிடைதந்ததனைத் தாயார்க்குத்தானுரைத்து
மாதாமனது வருந்தாமலேதேற்றிச்
சூதானதில்லையென்று தொழுதுவிடைதான்வாங்கி
அன்னமறுசுவையோடன்பாகத்தானருந்திப்
பின்னிரவுபோயுதயம் பிரயாணஞ்செய்யவெண்ணி

அப்புவனேந்திரனும் பூதகிரணமணியும்
போரதனைத்தக்கதிலே பொக்கிஷத்திற்றனைத்து
கனகமணிப்பூணுமுடன் கதித்தமணியானைகளும்
மனதுக்கிசைந்தபடி வகைவகையாய்த்தானெடுத்தார்
அந்தச்சமயமதிலாயுதசாலைபுட்போய்
மந்திரவாளுமுடன் வாளுந்தெரிந்தெடுத்தார்
சேர்ந்தாரிருவர்களுந் தேர்ந்தாயுதந்திருந்தார்
பார்த்தாரெழுந்திருந்தார் பரிதியுதிக்குஞ்சமயம்
பாக்குதிரைகட்டும் பந்திகளில்வந்தணுகி
வாசிபுரவியுள்ள வாசியெல்லாந்திறந்து
வாயுவேகமனோவேகமென்றுஞ்சொல்லுந்
தாயபரியிரண்டுஞ் சோடாயிருப்பதனால்
கால்களொருகாற்குளிறுங் கழுத்தழகுந்திமிலும்
பால்போலும்வெண்மையுள்ள பஞ்சகலியாணியனை
இக்குதிரைகள்போல் வெய்யவனுக்குண்டோவில்லை
அந்தக்குதிரைகளைப் பரவித்துக்கொண்டார்கள்
தங்கலகாம்போட்டுச் சரியானசீனிவைத்து
அங்கவடியும் அமைவாகத்தானிறுக்கி
முகப்பட்டைதாவிமுகன் முனைதிப்பெல்லாமணிந்து
சகப்பட்டதேசமெல்லாஞ் சுற்றிவருமென்றறிந்து
மின்னுமனோவேகமதனில் வேந்தன்றிருமகனும்
மின்னுவாயுவேகமதனிற் போனமச்சன்புத்திரனும்
ஏறினார்சோடாக இந்திரதிசைநோக்கி
கூறினார்விந்தைமந்திரங் குதிரைச்செவிதனிலே
ஆகாயவீதியிலிலகுவங்கண்மேலேறி
வாகாய்க்கிழக்கு வழிநோக்கிச்சென்றனர்காண்
வாயுவின்மண்டலத்தில் வாம்பரிகள்சேராமல்
பாயுவைத்தம்மந்திரக்கால் வசமாக்கிக்கொண்டார்கள்
சோடாகவேயிரண்டு தாக்கருஞ்செல்வழியில்
வாடாதவீரர்புவி வளம்பார்த்தாரசென்றார்கள்
புவியின்பெருவளமும் வனத்தின்சிறப்புகளும்
உலையுங்கடுஞ்சாத்தி ஊதிகள்சூழ்ந்திருப்பதும்,



செந்நெலுங்கன்னலுஞ் செழித்தவயல்வளமும்
புன்னைமலர்த்தாழைமலர் பூத்திருக்குநீர்வளமும்
பூமிவளங்களெல்லாம் புவனேந்திரன்பார்த்து
தாமரைத்தாமத்திரிக்குச் சாற்றுவானம்மானை
பாசமலையும் பருத்தசிகரங்களுந்
சேரத்தெரிவதையா இவலிங்கம்போற்பாராய்
வெங்கையொலிகேட்டு வெருண்டுமான்கண்மலை
யுங்குகையுள்ளொளிக்க ஓடுவதுநீர்பாராய்
ஆடுமயிலினக்கண் டாவம்பயந்தப்புற்றில்
ஓடுந்தலைநீட்டு மூள்வாங்குநீபாராய்
தெங்கிடைப்பெண்சேலைகொண்டுசேர்ந்திருந்தகிருஷ்ண (ளைப்போல
பூக்குருத்தின்மேற்காயாய்ப் பூத்திருக்குந்தென்னையப்பார்
என்றும்வரியோர்க்குதவ ஏந்தைகரும்பொற்குவைபோல்
கொன்றைமலர்பூத்துக் குலுங்குவதுநீபாராய்
பாம்புபடமுமலிற் பதுங்கியெலிகுலங்கள்
சோம்பிக்கிடக்குஞ் சுகோதத்தைநீபாராய்
பாலநிலைச்சூடு பரிதியுஞ்சுட்டுடும்மன்
மேலேபடருகின்ற வெப்பமதைநீபாராய்
ஏந்தயம்பைமார்முலைக விளநீர்க்கொப்பில்லையென்று
மாந்தளிர்கைபோலசைய மருதவளம்பாராய்
காவிற்கிளிச்சேவல் கற்பகப்பூஞ்சோலைகளில்
மேவிகிளிப்பேடுகளை விரும்பியணைப்பதுபார்
வேற்றமுதத்தம்மானைவென்று மேடைச்சிறுமடவார்
ஏந்துநட்சத்திரத்தி லிருளையும்விட்டுநல்யார்
வெள்ளைமணற்குன்றுதோறும் வேலைப்பலமோதவிடு
பிள்ளையனமுசலெனப் பெயர்த்தாடுந்தன்மையைப்பார்
பாரையாவென்று பகர்ந்தாபுவனேந்திரனுந்
தீரமுள்ளபுத்திசிகாமணிக்குத்தான்காட்டி
இந்தவிதமாய்ப்புவியி லிலங்குவளம்பார்த்து
மைந்தரிருவர்களும் வான்வழியிற்சென்றார்கள்
செல்லுமந்தவேளைதனில் தேசுபுவனேந்திரர்க்கு
மெல்லமுகத்தில் வியர்வைதோஞ்சமுண்டாகி

ஆபரசந்தோன்ற அரசனதையறிந்து
மாயாமந்திரிக்கு வழுத்துவானம்மானை
மீதேமுகமதனில் வேர்வைமிகத்துளிக்க
பேதோகளையா யிருக்குதாண்மந்திரியே
இங்கிச்சமய மிறங்கிநாம்பூமியிலே
தங்கியிருந்து தகைபாரவேணுமென்றான்
மன்னனுரைத்தமொழி மந்திரியுந்தான்கேட்டு
மின்னுமணிமகுட வேந்தனேகேட்டருளும்
இப்போதுநாமிங் கிறங்கியிருக்கவென்றால்
தப்போதலில்லை சமுத்திரத்தின்மத்தியிது
இவ்விடத்திற்பூமியில்லை யின்னஞ்சிலதூரம்
அவ்விடத்திற்சென்று வடுத்தகரைகாணும்
ஆகவினால்வந்த அயர்ச்சிமயக்கமதைச்
சாகத்திறவடக்கிச் சற்றேயிருங்களென்று
பூமிக்குறிப்பதைத்தன் புத்திமையாலறிந்து
தேமித்தமந்திரியும் நிகழ்த்தினானம்மானை
மந்திரிசொற்கேட்டு மன்னன்புவனேந்திரனும்
இந்தைபறிவாலடக்கச் சென்றார்சிலதூரம்
தாரைபரிமீது தானிபனுமந்திரியும்
மேவையாகாயவழி வெகுதூரஞ்சென்றார்கள்
ஆழிகடந்தாப்போல் யக்கரையுந்நேராகச்
சூழமதிமந்திரிதன் சூட்சியதினாலறிந்து
மந்திரியுமன்னோரம்மன்னவனைப்பார்த்துரைப்பான்
இந்தபொழுதிலிங்கே யிறங்கச்சமயமென்றான்
என்றமொழிதனி விறங்குபரிமந்திரத்தைத்
தான்றாகுதிரைச்செவியிற் சொன்னாரிருவர்களும்
பரிச்செவியின்மந்திரத்தைப் பகர்ந்தவுடன்கீழ்நோக்கி
யிருவர்களுஞ்சோடா யிறங்கினார்பூமிதனில்

இராசகுமாரனும் மந்திரிகுமாரனும்பூக்காவனத்
தையும் தெப்பக்குளத்தையுங் கானுதல்,

பூமிதனைச்சேர்ந்து புவிவிட்டுக்கீழிறங்கிக்
காமருவும்பூஞ்சோலை கண்டார்கள்கண்களிப்பச்



சோலைபொன் மகண்டு அவர்களிருவரும்
கோலந்தருவாடியிற் குதிரைகளைக்கட்டிவைத்து
மாந்தருவின்மீதிருந்து மைந்தரிகாப்பாரியபின் (கள்
சேர்ந்தெழுந்து சோலைவளஞ் சென்றுசென்று பார்த்தார்
சந்தனச்சோலைகளுஞ் சண்பகப்பூஞ்சோலைகளும்
பந்திபந்தியாகப் படர்ந்திருக்குமாமரமும்
புன்னைசம்பாதிரியும் பூத்தமலர்க்கோங்குகளும்
தென்னையசோகஞ் செழித்தபலாமரமும்
சேந்தாழைப்பூந்தருவும் வானைத்தொடுங்கமுகும்
கொத்தார்சிறுதேக்குங் குங்குமப்பூச்சோலைகளும்
இன்னம்பலதருவு மெங்குந்தழைத்திருக்கும்
வன்னம்பலவாய் மலர்ச்செடியெலாமிருக்கும்
இனிதானதேன்கா லொலங்காய்க்குமாமரங்கள்
கனியாயின்பால்வருமாம் காய்காய்க்குந்தென்னைமரம்
கோங்குமரஞ்செவ்விளநீர் கொத்துகளாத்தான்காய்க்கும்
மாங்கொல்லாங்குங்குலங்கள் பலாவின்கனிபழுக்கும்
மாக்குலம்ரம்தேக்கின் பழங்கள்பழுத்திருக்கும்
தேக்குமரமின்பாக்குந் தேங்காயுந்தான்காய்க்கும்
எங்கெங்குமுல்லை யிருவாட்சிப்பூப்பூக்கும்
பொங்குமணமல்லிகைமேற் பூத்திருக்கும்பச்சிமலர்
மருவுஞ்செவ்வந்தியினில் வாசமுல்லைப்பூப்பூக்கும்
கருகொடியுந் தழைக்குமந்தப்பூஞ்சோலை
மாஞ்சோலைபெங்கு மதனகாளம்மை வைக்குமிடம்
பூஞ்சோலைபெங்குமதன் பூரணிகட்டும்பந்திகளாம்
மேகம்வரக்கண்டு விளங்குமயிலாடும்
பாகுமொழிமாதரைப்போற் பச்சைக்கிளிபேசும்
வருக்கைக்கனிதேனு மாங்கனியின் றீஞ்சாறும்
செருக்குகதலிக்கனியின் றேனுங்கலந்தோடும்
முல்லைமலர்மீதுவந்து மொய்க்குந்தத்தேன்குடித்து
மல்லிகைப்பூமேலிருந்து வண்டினங்கள் பண்பாடும்
பொன்னுலகக்கற்பகத்தைப் போலிருக்கும்பூந்தருக்கள்
இன்னமனேகவளமிருக்குமந்தப்பூஞ்சோலை



அந்தப்பூங்காவனத்தி லமைந்தவளங்களெல்லாம்
மைந்தரிவர்பார்த்து வரும்போதுமத்தியினில்
சொர்ணப்படித்துறையுந் துலங்குபளிங்கிச்சுவரும்
வர்ணத்துடன்விளங்கும் வாவியொன்றுகண்டார்கள்
பளிங்குத்தகட்டைப் பதித்துப்பரப்புதல்போல்
விளங்கித்தெளிந்து மிகுந்ததண்ணீர்ப்பெருக்கம்
இடங்களெங்குஞ்சங்கினங்க ளீன்றபெருமுத்தினங்கள்
தடங்கரையிற்சேர்ந்திய நட்சத்திரம்போல்விளங்கும்
துள்ளிப்புனலிற் சுழலுங்கயல்மீன்கள்
பள்ளநீர்ப்பெண்களொட்டிபார்த்திடுங்கண்போல்விளங்கும்
சன்னவெள்ளிக்கம்பியின்மேற் றங்கமலாம்பூசுதல்போற்
செர்ணப்படித்துறையின் சுடர்கள் சுவர்மேற்படரும்
அண்டச்சுவரில்வெள்ளை யன்னவந்துமுட்டுதல்போல்
மண்டிப்புனலலைகள் வாவிக்கரைமோதும்
பொய்கைக்கரைமுழுதும் பூஞ்சோலைசூழ்ந்திருக்கும்
மையத்தின்மண்டபம்பொன் மகமேருபோல்விளங்கும்
அந்தத்தடாகவனம் அளகவிட்டுச்சொல்லவென்றால்
சிந்தைக்கடங்காது சேடனுக்குங்கூடாது
புவனேந்திரவேந்தனும் மந்திரிமகனியும்
கவனமுடனக்குளத்தைக் கண்டுமனங்களித்தார்
வாவிக்கரையருகே வந்துபடித்துறையின்
மேவிப்புனலிருக்கு மிருதுவைப்பார்த்தாசைமிஞ்சிக்
கைகால்சுத்திசெய்து கண்ணுமுகந்துடைத்து
மெய்காட்டுநீரையள்ளி விடாய்தீர்த்தான்பருகி
பொற்படியின்மேலிருந்து பூர்வத்தன்புத்திரனும்
அற்புதமாயங்கே யமைச்சன்முகம்பார்த்துரைப்பான்

இராசகுமாரனுக்கு மந்திரிகுமாரன் சாதங்

கொண்டுவரப்போகுதல்.

இந்தப்படித்துறையி லிருந்துகொண்டாகமாய்
மந்திரிபெட்டார வர்க்கவம்சமானமைந்த

கொண்டுவந்துவைத்துக் குலாவியிருவோரும்
உண்டால்மனதுக் குலவையுண்டாகுமென்றான்
வேந்தன்மனதில் விரும்பியுரைத்தமொழி
வாய்ந்தமந்திரியும் மனமகிழ்ச்சியாய்க்கேட்டு
மன்னவனையுன்றன் மனம்போற்கறிவனையும்
அன்னமுநான்கொண்டிங் கணுகுவேனோர்நொடியில்
சென்றுவருமளவுஞ் சித்திரப்பூங்காவனத்தில்
துன்றிவிளைப்பாறிச் சுகத்திலிருவென்றுசொல்லி
வாயுவேகியெனனும் வாம்பரியின்மேலேறித்
தாவிவிஞ்சைமந்திரத்தைச் சொல்லுன்பரிக்காதில்
வடக்குதிசைநோக்கி வாம்பரியாகாயவழி
நடக்கும்பொழுதிலங்க நன்னகரமொன்றுகண்டான்
அந்நகரத்தி லருகானசோலையொன்றில்
வந்துபரியுடனே மந்திரியுந்தானிறங்கிப்
பூமிதனிலே புரவிதனை நடத்திச்
சேமமுள்ளபட்டணத்தின் றெருவூடேபோம்பொழுது
மாடமணிவீதிற்பூ வாணிபஞ்செய்திருக்கும்
வீடொன்றிருப்பதனை விசாரித்தங்கேசேர்ந்தான்
சேர்ந்தகுமாரன் றிருமேனியழகைக்
காந்தையருங்காளையருங் கண்குளிரப்பார்த்தார்கள்
வந்தகுமாரனைப்பூ வாணிச்சிதான்பார்த்து
எந்தவூர்யார்குழந்தை யெங்கிருந்துவாரீர்சொல்
சொர்ப்புமையாமென்றமைக்க திறலமைச்சனேதுரைப்
பான், இப்பொழுதிவ்வூர்நா னொருகாரெடுத்தாரம்
சென்றுதானிவ்வைத் திருப்புவழிமுக்காதம்
இன்றுதான்சொன்னபடி யின்னமுநீர்யமைத்தால்
மனமாறைவில்லாதமக்கு வழங்குவேனென்றாளம்மா
வினைவாய்ச்சமத்திட்டன்று [illegible]
மைந்தன்கொடுத்தநிதி வாங்கியந்தமங்கைநல்லாள்
வித்தகவிந்தையுடைக்கறியும் நெய்ப்பச்சம்பாவமுதும்
இனிப்பலகாரங்களை யெல்லாஞ்சமையல்செய்து
புனிதருடன்மைந்தனுக்குப் போசனஞ்செய்துவைத்து



கட்டழகுங்கட்டிக் கறிக்கையுந்தான்சேர்த்துச்
சுட்டபலகாரமெல்லாந் தொகுப்பாய்ச்சுமைசேர்த்து
நங்கையெடுத்துக்கொடுக்க மந்திரியுந்தான்வாங்கித்
தங்களரசனுக்குந் தான்கொண்டுபோகவென்று
நெஞ்சினினைத்தான் வரிவைக்குமந்தவேளையிலே
துஞ்சுயிருள்பகர்ந்து சுடரோன்மறைந்ததனால்
இந்தவிரவிலெழுந்துமேசெல்லவென்றால்
வந்தவழியுமந்த மன்னனிருப்பிடமும்
குறிப்புத்தெரியாது குதிரைவழிகூடாது
மறுக்கமின்றியின்றிரவு மட்டுநாமிங்கிருந்து
காலையெழுந்திருந்து கம்பரியின்மீதேறிச்
சோலையில்வீற்றிருக்குந் துரையிடம்போய்ச்சேர்வமெ [ன்று
மந்திரிதன்சிந்தை மதித்ததராத்திரியில்
அந்தமனையிலமர்ந்திருந்தானம்மானை
அரசன்பசியால்வருந்தி யங்கிருப்பானென்றேங்கி
இரவெழும்வேளைப்பார்த் திங்கேயிவனிருக்க
வாவிப்படித்துறையில் வசித்தபுவனேந்திரனுக்கு
மேவியசெய்கையெல்லாம் விளம்புவேனம்மானை
மந்திரிசென்றபின்பு மன்னவனங்கேதுசெய்வான்
அந்தத்தடக்கரையை யகன்றுவெளியேறிக்
காவிற்குயிலோசை காதுகுளிரக்கேட்டு
மேவியொருமரநிழலில் வீற்றிருந்தானவ்வேளை
மேகங்குமுறுதல்போல் வேங்கைவாய்விட்டதுபோற்
சேகரமாய்ச்சிங்கஞ் சினந்துமுழங்குதல்போல்
வாவிக்குமத்தியிலே வந்ததொருமுழக்கம்
காவிலிருந்தமன்னன் காதாரக்கேட்டெழுந்தான்
அந்தக்குளத்தருகே யானைபுலியொன்றுமில்லை
இந்தப்பெருமுழக்க மிங்குவரக்காரணமேதோ
மஞ்சுபடியவில்லை வளையிருகஞ்சாரலில்லை
மிஞ்சுமுழக்கம்வந்த விதமென்னவென்றுணர்ந்து
நேராகநின்று நிலைநிலையுங்கொட்டாமல்
பாராளுமன்னனங்கே பார்த்திருக்கும்வேளைதனில்

வாவிதனிலே வதிந்துடனே இழிந்து
காவியங்கோரைத் துதலைச் சற்றுமொளிபோரி
சாலிக வாடையிங்கே வாசிக்குதென்றறிந்து
மாமலர்க்காவில் நின்ற காவலனைத்தானோக்கி
ஐந்துதலைப்பட்ட மாங்காரமாயிருந்து
சிந்துகனல்கொப்பளிக்கச் சீறிவிழுகின்றது
மனிதனிருஷ்வரிங்கே வந்துநின்றானென்று கண்டு
னையிருந்து மன்னவன்பேரிற் சீறிவரத் தாக்க
நாகப்பெரும்பாம்பதனை நாட்டரசன்றானறிந்து
சோகமுறவிதனைத் தணித்துவிடவேண்டுமென்று
மந்திரவாளுருவி மகாங்காரத்திலேபிடித்து
வெந்துவரும் நாகமதை நாட்டரசன்றானறிந்து
சோகமுறவிதனைத் தணித்துவிடவேண்டுமென்று
மந்திரவாளுருவி மகாங்காரத்திலேபிடித்து
வெந்துவந்த நாகமதை வெட்டினானிரண்டு துண்டாக
பறந்தாடிக்கவந்த பாம்பிரண்டு துண்டாகி
யிறந்தவுடன் றலையி லிருக்குமந்த நாகரத்னம்
சிவரத்னமாமிவைகள் தெறித்துத்தரையில்விழ
காவலனெடுத்துக் கண்குளிரத்தான்பார்த்து
நாகரத்தினத்துடனே நல்லநாகசிவரத்னமும்
சேகரமாய்வந்ததென்று செங்கையிலே தானெடுத்து
உள்ளிவந்த நாகமதை யோங்கிவெட்டும்போதிரத்தந்
தன்னுடலிற்றெறித்ததைச் சலத்தாற்கழுவுதற்கு
குளத்தருகாம்படித்துறையைக் கொற்றவனுந்தானறிந்து
தளத்தைவிட்டுக்கீழிறங்கித் தண்ணீர்க்கருகுசென்றான்
தண்ணீர்ப்படியிலவன் றுவைத்துவைக்குமுன்னே
தண்ணீரதைவிட்டொருபடிக்குக்கீழ்ப்போக
அந்தப்படிவிட்டடுத்தபடி யேப்பதற்கு
முந்தப்படித்திறந்து முன்போலப்பின்போக
இந்தப்படியா யிறைவனுமொவ்வொருபடியில்
வித்தைப்படியிதென்று மிதித்துக்கீழ்ப்போகையிலே
ஓராயிரம்படியு மொருநொடிக்குள்ளே நடந்து



சேராவடிதலத்திற் சேர்ந்தனன்காணம்மானை
இனியதற்குக்கீழ்ப்படிக ளேதுமில்லாததினால்
தனியேதண்ணீருமிவன் றலைக்குமேலேயெழுந்து
இடையேவெளிகாட்டி யின்றலைக்குமேற்பிடிக்குங்
குடைபோற்கவிந்துநின்று கொண்டதுகாணம்மானை

### இராசகுமாரன் பாதாளவழிசென்று மாளிகையைக் காணுதல்.

கொண்டானிவ்வாச்சரியக் குறிப்பையோசித்துநின்றான்
நிற்கும்போதந்த நிலத்தளத்தின் கீழொருபாற்
பொற்குவையிலமைத்துப் பொதிந்தநிலையுங்கதவும்
நேசிருக்கக்கண்டு நிருபனின்னமிங்குசில
காரணமுள்ளதுபோற் காண்பதற்கதைக்காண்பமென்று
சென்றந்தபொற்கதவைச் செங்கையால்தொட்டவுடன்
தன்றனங்களாற்புகழைத் தருமத்தைத்தான்வளர்த்து
வந்தவர்க்குப்பின்புசொர்க்க வாசற்றிறப்பதுபோல்
சந்திரமணிக்கதவு தானேதிறந்ததுகாண்
கதவுதிறந்தவுடன் காவலனுட்புகுந்து
புதுமையிருக்குமென்று புத்தியினாலேமதித்தான்
மன்னன்மனத்தின் மதித்தமதிப்பின்படியே
மின்னும்படியவ்விடத்தில் மேவியிருக்கப்பார்த்தான்
பாதாளலோகமதைப் பார்த்துவரச்சொல்லும்வழி
யீதாகுமென்றரச னெண்ணினன்படியே
அந்தப்படிவழியே யரசனுந்தானிறங்கச்
சிந்தைபடிநடந்து சென்றான்வெகுதூரம்
படிகளையெல்லாங்கடந்து பார்வேந்தன்போகையிலே
அடியிலிருக்குமடத்தளமொன்றங்குகண்டான்
கண்டவந்தப்பூமியொரு கால்போசனையகலம்
உண்டதற்குநீளமுந்தி யுரைத்தபடியேயாகும்
மன்னுமந்தக்கீழ்ப்பூமி மதிக்குள்ளேவிளங்கி
மின்னுகதிரோனந்தம் மேலேவிளங்குதல்போல்
தங்கமகமேருவங்கு தான்வந்திருந்ததுபோல்
இங்கனேகந்திரண்டங்கு தித்ததுபோல்

மாற்றுயர்ந்த தங்கமதை வகுப்பாக்கிவைத்தது போல்
போற்றுநவரத்தினத்தைப் பொருப்பாய்க்குவித்தது போ
எங்குஞ்சுடர்விளங்கு மேழடுக்குமாளிகையொன் [ல்
றங்கேயிருப்பதுகண் டாச்சரியந்தானுமி
இந்தமணிமாட மெவருக்கிருப்பிடமோ
எந்தவுலகத்து மிதுபோலக்கண்டதில்லை
ஆரேனுமின்ன மறிவோமென நினைந்துப்
போனானம்மாளிகைக்குட் புவனேந்திரராசன் [குந்தான்
முதலாம்பொன்மாளிகையின் முடிவேந்தன்போய்ப்பு
சதிராக அவ்விடத்தில் சமையல்செய்யும்பாத்திரம்
அன்னத்துக்கான அரிசிகறிவகையும்
வன்னத்துக்கோரடுப்பு வைத்தமடப்பள்ளிகளும்
அண்டாவிற்கொப்பரையில் அள்ளிவைத்ததண்ணீரு
முண்டாவடுப்பிற் சுடவைத்தவெந்நீரும்
ஆக்கியிறக்கிவைத்த அன்னங்கறிவகையும்
நோக்கியிங்கேயாரும் நுழைந்திருக்கவேணுமென்று
சுற்றுப்புறங்களிலுஞ் சூழ்ந்தவறைகளிலும்
உற்றுப்பார்த்தங் கொருவரையுங்காணாமல்
சற்றேதிகைத்துநின்று சார்ந்தறிவோமின்னதென்று
வற்றாதகொப்பரையில் வாரிவைத்த நீரைமொண்டு
தேகத்தின்மேலே தெருத்திருந்தபாம்பிரத்தம்
போதக்கழுவிமுகம் பூசிக்கையால்சுத்திசெய்து
இரண்டங்கிருந்ததெல்லாந் தேர்வேந்தன்பார்த்தேகி
இரண்டாந்தளமேடை யேறினான்பார்வேந்தன்
தங்கத்தினாலே களிகைகளுங்கும்பாவுஞ்
செங்கைதனணிபருகுஞ் செம்பினங்கள் தான்பலவும்
இன்னமுங் கூசாவுங் கெண்டிவாய்ச்சொம்புகளும்
வண்ணமுள்ள அண்டாவும் வட்டிலுங்கொப்பரையும்
குத்துவிளக்குங் குலுங்குஞ்செடிவிளக்கும்
பத்துவகும்பித்தளையாற் பண்ணுஞ்செடிவிளக்கும்
பத்தரைமாற்றுப் பசும்பொன்னினாற்சமைத்து
வைத்திருக்கும்பாத்திரத்தின் வகையனைத்தும்பார்த்தான்.



இங்காகிலுமெவரு மிருக்கலாமென்றுசுற்றி
அங்காருமில்லாமை யறிந்ததனைவிட்டகன்று
மூன்றாம்பொன்மேடையிலே முடிவேந்தன்போய்புகுந்
தான், நான்றானெவ்வாறுரைப்பே னணையவாரிகொண்டு
தங்கத்தாறுகாசுத் தனிப்பொன்னால்நாணயமும்
எங்குந்தகடு மிலங்குகின்றகம்பிகளும்
வெள்ளிரூபமாயும் விளங்கும்பலநாணயமும்
அள்ளிக்குவித்தங் கடுக்கடுக்காய்வைத்திருக்கும்
வேலைக்கருவிகளும் வேண்டும்வகையாபரமும்
மூலைக்குமூலையங்கே மொய்த்திருக்குந்தன்மைகளும்
மாலாயப்பார்த்தங்கு மனிதரையுங்காணாமல்
நாலாம்பொன்மேடையிலே ராஜனும்போய்புகுந்தான்
பச்சையுமுத்தும் பவளமுங்கோமேதகமும்
வச்சிரக்குப்பல்களும் வயிடூரியங்குவையும்
மாணிக்கநீல மணிப்புட்பராகமுடன்
பாவிக்கக்கூடாத பளிங்குநவரத்தினமும்
எட்டுத்திசையு மிருள்விளங்குஞ்சூரியன்போற்
கொட்டிக்குவித்திருக்கும் குப்பலையெல்லாம்பார்த்து
தகுந்தாரியாருமிங்கே சார்ந்திருப்பாரில்லையென்று
புகுந்தானைந்தாந்தளத்திற் போர்வேந்தன்புத்திரனும்
பொன்னாபரணம்வைத்துப் பூட்டியபொற்பெட்டிகளும்
மின்னாயும்பொன்னுடை மேவியபொற்பேழைகளும்
தந்தத்தினாலே சமைத்தபலபெட்டிகளும்
வந்தபன்றிமுள்ளால் வகுத்தமணிபேழைகளும்
ஒழுநடானிநீரடைத்தங் கூற்றிவைத்த சப்பிகளும்
அத்தர்வகையெல்லா மடைத்துவைத்தபேழைகளும்
கஸ்தூரிச்செப்புகளும் கற்பூரவைப்புகளும்
விழுதுபடிவரைத்த வில்லைவைத்தபெட்டிகளும்
மெழுகுதிரிவத்திகளும் விளங்குகந்தவத்திகளும்
சந்தபொடிகள்வைத்துக் கட்டியபொற்பெட்டிகளும்
இந்தப்படியா யிருந்தந்தமாளிகையில்
கூடாம்வெளிதெல்லாங் கோமகனும்பார்த் [illegible]

வேறிங்கோரு மிருப்பாரெனத்தேடி
வேறொருமில்லையென்று வேந்தனதைவிட்டேகி
யாறும்பொன்மாளிகைக்கு ளன்பாகத்தான்புகுந்தான்
தம்பூருவீணை சரமண்டலஞ்சாலர்
பம்புசுரப்பந்துப் பரிவுசாரங்கிப்பெட்டில்
சாரந்தாகின்னரியிர் தம்பமோர்ச்சங்குமுதற்
சாரந்தானேகொடுக்குஞ் சங்கீதவாத்தியங்கள்
வகைக்குவகைசோடாக வைத்திருக்குஞ்சித்திரமும்
தகைக்கும்பதுமைகளுந் தாட்டியப்பூப்பாவைகளும்
வாத்தியப்பெட்டிகளும் வைத்திருக்குமேசைகளும்
குலவிராமாய்ச்செய்து தூங்குமிவாத்தியமும்
இன்னம்பலவகையா மிசைவாத்தியங்களந்தச்
சொர்னமணிமாளிகையின் சூழறையெல்லாமிருக்க
அந்தவளமெல்லா மடுத்தடுத்துந்தான்பார்த்தான்
எந்தவிடங்களிலு மில்லாதவாத்தியங்கள்
தாமிடமும்பார்த்திதற்குள் நாகலோகத்தாரோ
மேலுலவுந்தேவர்களோ மேதினியாள்மன்னவரோ
வித்தைசயரோகந்திருவ வேந்தரோகின்னரரோ
பாரோர்புகழப் படுநாககன்னியரோ
யாரோவிதிலிருப்பார் யாமறியக்கூடவில்லை
இன்னமொருமாட மிருப்பதையும்பார்த்தால்
என்னவிதந்தானுமென்றறிவோமென்றரசன்
மனத்திலேயெண்ணியந்த மாளிகைவிட்டேகி
இனர்த்தையினஞ்சேர்வதுபோலேமாந்தளஞ்சேர்ந்தான்
வழாம்பொன்மாளிகையி லிறைவன்மகனேறித்
தாழ்வாளங்களெல்லாந் தனித்தனியேபார்த்துவந்தான்
பள்ளியறையும் படுக்கைச்சிறப்புகளும்
அள்ளிமலர்விரித்த அஞ்சடுக்குமெத்தைகளும்
தைத்ததிரட்டுத் தலையணையுந்திண்டுகளும்
மெத்தைகளுநம்வில்லைகளும் விரித்தரத்னக்கம்பளமும்
பவளக்கால்கட்டில்களும் பட்டுமேற்கட்டில்களும்
தவளமுத்துசாலர்களுந் தங்கச்சிங்காதனமும்



படுக்கைக்குத்தாங்குமஞ்சம் பஞ்சவர்ணபாயல்களும்
தொடுக்குமலர்மாலை தூங்கிபூம்பந்தர்களும்
உளிக்குவாற்சேட்டுகளும் பர்சைகுளோப்பர்களும் 21
விளங்குநீலஞ்சிவப்பு வெள்ளைக்குளோப்புகளும்
முத்துச்சரமு முழுப்பளியுந்தொங்கல்களும்
கொத்துப்பளிங்குவைத்துக் கோர்த்தசாவிளக்கு
தங்கப்பலகையினாற் சமைத்தபலமேசைகளும்
தூங்கச்சுடர்விளக்குந் தூண்டாமணிவிளக்குஞ்
வர்ணமகமற்சுருட்டால் வகுத்தபங்காத்தொங்கல்களும்
சொர்னக்களாஞ்சிகளும் சுருட்டுவிசிறிகளும்
இன்னம்பலசிறப்பு மிருக்குமந்தமாளிகையை
மன்னவன்கண்ணுற்பார்த்து மனதுமிகமகிழ்ந்து
வாடாதிருக்கவேணுமென்று மதித்தான்புவனேந்திரன்
புவனேந்திரனுமங்கே பொன்னறையெல்லாம்புகுந்து
கவனமுடன்பார்த்துக் கடந்துவரும்வேளைதனில்
அங்கோர்புறத்தி லலங்காரமாயிருக்குஞ்
சிங்காரமண்டபத்திற் நேர்வேந்தன்போயடுத்தான்

## இராசகுமாரன் மாளிகையிற் பெண்ணைக்கண்டது.

வீணைநரம்போசைபொன்று வேந்தனுக்குகேட்டதங்கே
காணலாமிங்கிருக்குங் கண்காட்சியென்றவனும்
சிங்காரமண்டபத்திற் சித்தமகிழ்வாய்புகுந்தான்
அங்காரக்கண்டா னழகாவோர்பெண்கொடியை
வண்டார்குழலணங்கோர் மஞ்சத்தின்மேலிருக்கக்
கண்டானரசன் கனகச்சிலையதுபோல் (போல்
மின்னலெரிவிட்டதுபோல் விளங்குமிளஞ் சூரியன்
சொர்னமயமாய்ச்சமைத்த சூத்திரப்பாவையைப்போல்
மன்மதன்கையாலெழுதி வைத்ததொருசித்திரம்போற்
பொன்மயமாகத்தழைத்துப்பூத்த மலர்க்கொம்பதுபோல்
தெள்ளமுதினால்வகுத்துச் செய்தபிரதமைப்போல்
உள்ளவழகெல்லா முறையுமணிப்பொக்கிஷம்போல்

கோலமலர்க்காவிருந்து கூவுமிளங்குயில்போற்
சோலைக்குடிகுசெய்யுந் தோகைமயிலதுபோல்
அல்லிப்பூமேலிருக்கும் அன்னப்பெடையதுபோல்
பாம்புமலர்க்கொம்பிருக்கும் பஞ்சவர்ணக்கிளிபோல்
காதைமிகச்செய்யும் வடிவுடையாளொருவள்
பாதையிற்போகையிலோர் பணப்பொகையைக்கண்டது
போல்,தேசமஞ்சமேலிருந்து செங்கையின்மேல்விழிகளை
வைத்து,வாசிக்கும்பெண்ணரசை மன்னவனுங்கண்
கொண்டான், சண்டவீரசன் கருத்திலுள்ளே சந்தேகங்
கொண்டானிப்பெண்ணரசு கோசலநகருந்திருவோ
மாமயரோஹணவில் வசிக்குங்கலைமகளோ
காமனுக்குருவாய்த்திருக்குங் கன்னிரதிதானோ
அரம்பையுருவசியோ அழகுதிலோத்தமையோ
லரம்பையிலு மேனகையோமாநாககன்னிகையோ
பூலோகந்தன்னிற் புகழ்படைத்தபெண்ணணங்கோ
மேலோகத்திந்திரையோ விஞ்சையர்கள் பெண்ணரசோ
சந்திருவர்கூடி கலந்திருக்குங்கன்னிகையோ
எந்தவுலகப்பெண் ணிவளென்று தான்கருதி
விழிகளிமைப்பதினால் மென்மலர்கள்வாடுவதால்
வழியுமுகவேர்வையினால் வையகப்பெண்ணாகுமிவள்
ஆனாலிந்தப்பூமிக்கார்கூட வந்திருந்தாள்
மானாலிம்மாளிகையில் வசிப்பதற்குக்காரணமென்
என்றுடலைவிதடிர் பெண்ணிபதமன்னவனும்
சென்றுனைங்கேயிருக்குஞ் சேயிழையாளுக்கெதிரே
பஞ்சணையின்மேலிருந்து பாவைநல்லாள் மன்மதன்
போல், நெஞ்சழகுகொண்டுவரும் வேந்தனையுந்தான்பார்
த்தாள் ஆரோவிவனோ ராசகுமாரனைப்போல்
வாரானிங்கெவ்விதமாய் வழிதனைக்கண்டுவந்தான்
தம்மையுணர்ந்துவரும் நாகஞ்செய்தவஞ்சனையோ
மன்மதன்றானிந்த வடிவெடுத்துவந்தானோ
காமரசவிஞ்சையனோ சந்திரனின்புத்திரரோ
வானவனோமாயவடிவெடுக்கும்ராட்சதனோ



மடல்விரிசெந்தாமரைப்போல் வாய்த்தவிழியழகும்
விடைபேறுபோலே விளங்குநடையழகும்
பூவேந்துதோளழகும் பொன்னேந்துமார்பழகும்
மாவேந்தரும்வெருவ வாளேந்துகையழகும்
தீர்க்கமனமுஞ் சிறித்தமுகக்குறியும்
பார்க்குமொழுகிலிவன் பார்த்திபன்குமாரனன்றி
மற்றொருமில்லையவன் வருங்காரணமதனை
சற்றேதெரியுமென்று தானங்கெழுந்திருந்தாள்
வாராரும்பூண்முலையாள் மன்னனெதிரே நடந்து
நேராகநின்று நிகழ்த்துவாளம்மானை
ஆர்காணுஞ்சற்றுமனை மஞ்சமாலிங்குவந்தீர்
பேர்காணுமக்கேது பெற்றோர்பெயர்களென்ன
அப்போவுணைவிட்டுடழகுபிரிந்திருந்த
வையகத்தின்பேரேது வசிக்குநகரேது
அரசர்திருமகனோ அன்றியொருமானிடனோ
விரைவிலொளியாமல் விளம்புங்காணென்றுரைத்தாள்
கோதையுரைத்தமொழி கொற்றவனுந்தான்கேட்டு
மாதரசேயென்றன் வரலாறறைப்பினுரைப்பேன்
வானுலகைவிட்டு வழுக்கிவிழுந்தமின்போல்
தேனமையா செஞ்சொற் றிருவேநீரெங்கிருந்தீர்
எந்தவூருங்கட் கிதுதான்புரதனமோ
தந்தைதிருநாமமென்ன தாயார்பெயரேது
ஆருஞ்சகாயமின்றி யாண்பாலெவருமின்றி
நீரிங்குவாழ்ந்திருக்கும் நிலைமைதெரியவில்லை
இத்தமணிமேடையினி யேகாந்தமாயிருக்க
வந்தவரலாற்றை வழுத்துங்காணென்றுரைத்தான்
வேந்தனுரைத்தமொழி மின்னுமிடையாள்கேட்டு
காந்திமனம்வருந்திக் கண்கலங்கித்தானுரைப்பாள்
அப்போநானும்மை யறிந்துகொள்ளவேட்கவில்லை
வெய்யபகையுமக்கு விளைவில்வரப்போகுதுநான்
அத்துயரிலேநீ ரகப்பட்டுக்கொள்ளாமல்
வித்தகரேயும்மை விலக்கிவிடவேட்டேன்காண்

இங்குநீர் தாமதஞ்சற்றில்லாமல் செல்லுமென்றார்
மங்கைமனம்பதறி வழுத்தினாளன்னேரம்
என்னவிரோதமிங்கே யெனக்குவருவதை
பின்னரசே சொல்லுமென்று வேந்தன்மகளுரைக்க
நெஞ்சந்துணிவும் நிலைபெயராவல்லமையும்
வெற்றியுடையானறிந்து மங்கைதனைப்பார்த்துரைப்பான்
நீருரையாவிட்டாலும் நேரிடும்விரோதமதைச்
சீருடனே தான்சுருக்கிச் செப்புவேன் கேளுமையா
தேவராலுந் திரிமூர்த்திபாலும்
யாவராலுமஞ்சா ஐந்துதலைநாகமொன்று
என்னைப்பூங்காவனத்தி லெடுத்துக்கொண்டிங்குவந்து
தன்னையெனக்குத்தலைவன் தானென்றுகொண்டதுகாண்
பொல்லாதபாம்புடனே புணர்ச்சிசெய்வதெந்தவிதம்
சொல்வாயென்பீராகிற் சொரூபமதுஆறுடி
என்னிடத்திற்சேர்ந்திருக்கு மெய்க்கும்பலரூபமது
பின்னைபலபேச்சுப் பேசுவதாசத்தியில்லை
சென்றதுகாண்வெளியில் திரும்பியிவ்வுமோர்நொடியில்
நின்றவுனைக்கண்டால் நிமிஷத்திற்கொன்றுவிடும்
நின்றவிடமையா சினமிகுந்தநாகமது
கொன்றுவிடுமுன்விலகி கொள்ளுநும்வகைபாருமென்றாள்
மின்னாள்மனமிறங்கி விளம்பியதெல்லாங்கேட்டுப்
பொன்னுருமாரன் புவனேந்திரனுரைப்பான்
மாதரசேயும்முடைய மனத்துயரம்வேண்டாங்காண்
நானந்தப்பாம்பை நறுக்கிவிட்டேன்வாளாலே
பூங்காவில்தானிருக்கும் போதந்தப்பாம்புதான்
ஆக்கிரித்தென்னை யடுத்துவரும்போததனை
வெட்டினேன்வாளாலே விழுந்ததிரண்டுதுண்டமாய்க்
கொட்டியதுரத்தங் குவலயமெல்லாம்பெருக
தாண்டியிட்டபாம்பு துடித்திறந்துபோனதைக்
கண்டாலுமக்குக் கலக்கம்விடுமென்றுரைத்தான்
வெட்டிவைத்தபாம்பையென் றுமேதுரைத்தசொல்லை
கட்டிளையாளிடத்திற் காணவிருப்போகுமுன்



நாகருக்குஞ்சாதுவைந் துதலைநாகமதைத்
தேவருங்கண்டாற் றிகைத்திட்டுப்போவார்கள்
சும்மாவிடுமோசினத்திற் றலைந்தபேர்மெத்தவுண்டு
உம்மாலிறந்ததென்ற வுரையையான் நம்பவில்லை
ஒருகாரியத்தை மதிக்கறியமாட்டாமல்
விருதாவிலேன்காண் விகடம்நீர்பேசுகிறீர்
என்றுமனம்பதறி பேதையாள்சொன்னசொல்லை
அன்றுபுவிவேந்த னருமையாய்க்கேட்டருளி
பாருங்காண்மங்கையரே வல்லாவுமாய்ந்தவிடந்
சேருங்காணாறுமிதோ சிவரத்னம்நாகரத்னம்
தானெடுத்துவைத்தேன்காண் நாகந்தலைசிதறி
மீனெடுத்தகண்ணியரே மெல்லியுமக்குவேண்டாக்காண்
பாருமெய்யிரத்தினத்தை பாரரசன்தான்காட்டக்
கூர்விழியாள்பார்த்ததுபோற் கோடிரத்னமிவ்விடத்தில்
கொட்டிகிடக்குமதிற் கொண்டுவந்ததாலாகாதோ
வெட்டிக்கிடக்கும்பாம்பை மேவினன்பார்த்துவந்தால்
சந்தோஷந்தீருமென்று தையலருந்தானினைந்து
வந்தவரைக்கூட்டிப்பந்த மாளிகையைவிட்டிறங்கி
நடந்தாரிருவர்களும் நாகலோகப்படியை
கடந்தாரங்கேவரவை கண்டாரடித்தளத்தில்
தானேயவ்வாவிலுள்ள தண்ணீர்வழிவிலகப்
போனார்படிபேறிப் புகுந்தார்கள்மேற்றளத்தில்
வாவிக்கரைபேறி மலர்க்காவிற்சென்றதனுட்
பூவையுடமன்னன் புகுந்தானிருந்தவிடம்
அவ்விடத்திலோர்புறத்தி லைந்துதலைநாகம்
வெவ்விடத்தைக்கொட்டியங்கே வெட்டுண்டுதான்கிடக்க
கண்டாளவ்வாரணங்கு காவலன்வல்லபத்தைக
கொண்டாடிக்கொண்டுகட்டிக் கொண்டாளவன்புயத்தை
ஐயந்தவிர்ந்தா ளரசனிவனேநமக்குச்
செய்பகனவனென்று சிந்தைகளிகூர்ந்தாள்
மன்னவரேயும்முடைய மகிமையறியாமல்
என்னமோலேசாக வெள்ளரியிகழ்ந்துரைத்தேன்

வளரும்பருவமதில் வயதுபதினாறாகித்
தளர்வுவாராதபடி தன்னையறிந்தேனான்
என்னையறிந்தே இளமைப்பருவமதில்
அன்னைவளர்த்துவர யான்வளருநாளதனில்
பாங்கியெனக்கிசைந்த பாங்கியரும்நானுமொரு
பூந்தாவனம்புகுந்து பூவெடுக்கச்சென்றேன்காண்
கோட்டுமலருங் கொடியிற்பூமலருங்
கோட்டுச்செடிமலருந் அதிகமுடனேயெடுத்தோம்
மல்லிகையேபிச்சிகளே வாசமுள்ளசண்பகமே
முல்லையேநாங்கள் முடிக்கமலர்தாரீரோ
தாரீரோவென்றுசொல்லித் தாதியருநானுமங்கே
நேராகப்பூவெடுத்து நிற்குமந்தவேளையிலே
நானுமக்குப்பரிவென நான்முகத்தோனென்றலையில்
மேனாளெழுதிவைத்த விதிவந்துமூண்டதனால்
அந்தவிடத்திலிருந் தைந்துதலைநாகமொன்று
வந்ததுகாணெங்கள் மனதுதிடுக்கிடவே
பாம்புவரக்கண்டு பதறிமனங்கலங்கித்
தேம்பியுடம்பு திமங்கிமயங்கிவிட்டோம்
கால்பதறிக்கைபதறிக் கருத்ததிகப்பதறி
மேல்பதறிநாங்கள் விரைந்தோடிப்போகையிலே
ஓட்டத்திலேநாங்க ளோடுகின்றபோதிலெங்கள்
கூட்டத்திலேநுழைந்து கொதித்ததிகச்சீறி
சென்றுபடம்விரித்துச் சீத்தென்றுமூச்சுவிட்டுத்
துள்ளுமுயிர்பாங்கியரைத் தொடர்ந்துவிரட்டிடவே
நாகம்விரட்டுதென்று நங்கையரெல்லாம்பயந்து
சேகரம்விட்டங்கே சிதைந்தோடிப்போனார்கள்
போனவுடனேநானும் புத்திமிகமயங்கிக்
கானகத்திலேதனியே கலங்கிநிற்கும்வேளைதனில்
மெல்லியரையெல்லாம் விரட்டிவிட்டபாம்புதான்
சொல்லாரதாட்சதனைப் போலோர்வடிவெடுத்து
என்றனக்குநேரே மாறாதேபெண்மயிலே
சிந்தைகலங்காதே சேயிழையேயென்றுசொல்லி



என்னையெடுத்துத்தன் இலங்குதோள்மீதில்வைத்து
கொண்டுவந்திம்மாளிகையிற் குடியாகவென்னைவைத்து
பண்டுமுதலின்றளவும் பாலித்துவந்ததுகாண்
இராவுபகலாய்ச்சிலநா ளென்னைமனந்தேற்றி
மருவும்படிக்கு வசப்படுத்திவந்ததுகாண்
நீடரக்கன்ரூபமதை நீக்கிமனிதனைப்போல்
வேடமெடுத்தென்னை விரும்பியேசேருமது
போகுமென்றபாம்பினுக்குப் பலவேறுரைத்தபெயர்
நாகமிதனுமென்று நானறிந்தேன்காரணத்தை
மற்றுமதுபாம்பு மடிவுகொண்டுநாட்டிலெங்குஞ்
சுற்றிவந்திங்கேயெனக்குத் துணையாகக்காத்திருக்கும்
காத்திருந்தமாப்பிள்ளைக்கதறவிட்டுக்கன்னிகையை
நேற்றுவந்தார்கொண்டதுபோல் நீரெனக்குவாய்த்தீரே
எனதுகதையெல்லாமிதுதானென்றேந்திழையாள்
மனதுமகிழ்வாக மன்னவர்க்குத்தானுரைத்தாள்
சங்கையெல்லாந்தீர்ந்து தரணிபனுமவ்விடத்தில்
மங்கையுடன்கூடி மகிழ்ந்திருந்தானம்மானை
இந்தவிதமாக இறைவன்மகனிங்கிருக்க
மந்திரியின்மைந்தன் வரலாறினியுரைப்பேன்

மந்திரியின் குமாரன்சாதம் கொண்டுவந்து
இராசகுமாரனைத்தேடுதல்.

மண்டலத்திலேமிக்கவளம் வாய்த்ததங்கமாபுரியில்
பண்டுபூவணிடஞ்சேர் பாவைத்திருமனையில்
கட்டமுதுவாங்கிக் கவலையுடனன்றிரவு
மட்டிமங்கேயிருந்த மந்திரிகுமாரனப்பால்
எப்போதிராவிடியுமெனறுபார்த்திருந்தான்
அப்போதுகண்டானருணோதயமதனை
கண்டவுடனெழுந்து கட்டமுதைத்தோளேந்தி
கொண்டுகுதிரையின்மேற் கொண்டுநகரைக்கடந்து
தேதியின்காதங்களிற் செட்டிகுமாரன்மந்திரத்தை
வாரியுமாயவழி மார்க்கமாய்ச்சென்றுதங்கே

மன்னன்மகளிருந்த மலர்ச்சோலைநேரில்வந்து
மின்னும்பரியுடனே மேதினியில்வந்திறங்கி
குதிரைவிட்டுக்கீழே குதித்தந்தமந்திரியுஞ்
சதிராய்க்குதிரையையோர் தருவிலேகட்டிவைத்து
வத்தலிருந்த விடத்திலேபோய்ப்பார்த்தான்
வாய்ந்தவன்வேகிபட்டு மரத்தடியிற்கட்டிநிற்க
மன்னவனைக்காணாமல் மந்திரியுந்தான்திகைத்து
பின்னுமந்தவாவி விளங்கும்படித்துறையில்
வந்துநின்றுநோக்கியந்த வாவிப்படிமுழுதும்
கொத்துகொத்தாகத்தேடிக் குளக்கரையெல்லாமோடி
தேடியுங்காணாமலவன் சிந்தைமிக்கலங்கி
ஓடிவந்தான்பின்னுமவ னுரைத்தமரத்தடியில்
மாவுங்குதிரைமட்டு மரத்தடியில்கட்டிவைத்து
காவலவனெங்குசென்றான் காரணந்தானென்னவென்று
மந்திரியுஞ்சித்தை மயங்கியங்கேநிற்கையிலே
அந்தவிடத்திற் கடுத்தசமீபத்தில்
பார்த்தானோரைந்துதலைப் பாம்பிரண்டுதுண்டை
வேர்த்தான்மனங்கலங்கி விளைந்தவாறென்னவென்று
வெட்டுண்டுபூமியின்மேல் வீழ்ந்துகிடப்பதனை
மட்டுண்டதார்மார்பன் மலர்விழியாற்கண்டுநின்று
சர்ப்பமொன்றிங்கேயிருந்து தரைமேற்கிடப்பது
சொற்பமல்லவினைத் துணிந்தவனுமன்னவனே
இன்னமறியோமென் றெண்ணியந்தமந்திரியுங்
கன்னலறைக்குள்ளேபூங் காவனமெல்லாமோடி
தேடினான்காணான் றிரும்பினானவ்விடத்தில்
ஓடிவந்தான்பின்புபல யோசனைகள்செய்துநின்றான்
உடனேவருவேனென் றேகினானன்றிரவு
தடையாயிருந்ததனாற் றாழ்வுவந்துநேர்ந்ததிங்கே
நானுடனேவாராமற் நள்ளிரவிற்றங்கிவிட்டேன்
ஆனதினாலிங்கே யடியேனைக்காணாமல்
என்னையவர்தேடி யெவ்விடத்தேசென்றாரோ
அன்னபடிபோனாலும் அரவைவிட்டுப்போவாரோ



மற்றொருவ ரிங்கேவந்துபோர்செய்தாலும்
நேரற்போர்பகைவரல்லாற் றுரைநேர்க்கமாட்டாரே
சண்டையிட்டுமாய்ந்தாலுஞ் சடமிருக்கவேணுமிங்கே
வண்டையிட்டகண்மடவார் மயங்கிக்கொண்டேகினரோ
கந்திருவமாதர்வந்து கைகொண்டுசென்றாரோ
பாராளும்வேந்தனில்லாப் பட்டணத்தையாள்வதற்கு
காரானைவந்துபட்டங் கட்டிக்கொண்டேகியதோ
அல்லதொருபட்சிக் கரசாகியசரபம்
வல்லசிங்கமொன்றுவந்து வாரிக்கொண்டேகியதோ
இந்தவனத்தி லிறந்தவுயிர்க்காவிரங்கி
வந்தந்தக்கூட்டின் மருவியிருக்கின்றாரோ
தனித்துவிட்டுப்போயிரவிற்றங்கிவந்தானெங்கேயென்று
மனத்தைமயக்குதற்கு மறைவாயிருந்தாரோ
தாரணியாள்வேந்தனென்னைத் தனியேபுலம்பிவிட்ட
காரணந்தானின்னதென்று கண்டறியக்கூடவில்லை
எத்தலத்திலெந்நாளி லென்னரசைக்காண்பதென்று
புத்திமயங்கினேன்காண் புத்திசிகாமணியும்
அட்டமாசித்தியுமொன் றுணபிராகாமியத்தை
இஷ்டமாய்க்கற்றுமிவ னென்மாங்கவேணுமென்றால்
கற்றவித்தையெல்லாங் கடமாய்க்கற்றதனால்
உற்றசமயத்தி லுதவாமற்போகவென்று
நன்னயஞ்சேரும்பரசிராமமுனிசாபமதாற்
கன்னமகாராஜனுக்குக் கலைகளுதவாததுபோல்
இன்னஞ்சிலதுயர மிறைவநடைவதற்கும்
மன்னவனைக்காணாமல் மதியமைச்சனேவதற்கும்
எதுவாய்வேதனெழுதும்விதியாலும்
சாதகத்தின்கிரகசாரபலனாலும்
ஊழிற்பெருவலி யாவுளமற்றொன்று
சூழினுந்தான்முந் துறுமென்றுவள்ளுவனார்
பண்டுரைத்தசொற்போலும் பார்த்திபன்சென்றவிடம்
கண்டுகொள்ளமாட்டாமற் கலங்கினான்மந்திரியும்
எந்தவிதந்தேடியுந்தன் னிறையவனைக்காணாமையினால்

அந்தமதியமைச்சன் அறிவழிக்கலங்கி
சித்தமயங்கித் தியங்கித்தயங்கியங்கே
புத்தியற்றோர்போலே புலம்புவானம்மானை
நானேதனியிங்கே நடந்தவகையறியேன்
மாவேலகனேயென் மன்னவனைக்காணீரோ
வெங்கரியின்மத்தகத்தின் மேலேறிப்பாய்ந்துலவுஞ்
சிங்கமேயென்னரசே சிங்கம்வரக்காணீரோ
தாங்கியணைகாரணமே சூழ்ந்தசிறுபுலியே
வெங்கையேமாற்றலர்க்கு வேங்கைவரக்காணீரோ
சோனைமேகத்திரள்போற் சோலையெலாஞ்சுற்றியுறும்
ஆனையேயெங்களர சானைவரக்காணீரோ
பாடுங்கிளியே பசுங்கிளியேதோகைவிரித்
தாடுமயிலேயென் னாண்டவனைக்காணீரோ
பாயுஞ்சிறுமுயலே பட்சிகளேபட்சிகட்கு
நாதமேயெங்கள் நாயகனைக்காணீரோ
பூரசேபலாமரமே புன்னையேசெண்பகமே
அரசேயெனக்குரிய அரசைவரக்காணீரோ
தேவதருப்போல்வளர்ந்த செண்பகமேகுங்குமமே
பூவரசேவாரிதிகழ் பூவரசைக்காணீரோ
தேர்வேந்தன்பெற்றெடுத்த செல்வத்திரவியமே
போர்வேந்தர்சிங்கேறே பூலோகத்திலகமே
வித்தகப்பெருங்கடலே விற்பனசிந்தாமணியே
புத்திக்களஞ்சியமே புரவலர்சிகாமணியே
சிவனேந்தியசிலையோற் றிரண்டிருக்குந்திண்புயனே
புவனேந்திரனே நீ புகுந்தவிடங்காணேனே
உன்னைப்பிரிந்துசற்று முயிர்வாழமாட்டாதே
என்னைத்தனியேவைத் தெவ்விடத்திற்சென்றீரோ
வெயிலிற்புழுப்போல் வெதும்புதேயென்மேனி
உயிரைப்பிரிந்துவிட்ட வுடலுக்கோர்தஞ்சமுண்டோ
என்னையுனக்குத்துணையா யெந்தையுமுன்றந்தையுமுன்
பின்னவனைப்பிணைவைத்த தன்னைப் பிரிந்துவருந்துதற்கோ
கண்ணிமைபோலக் காத்துவாவென்றுசொல்ல



அன்னையென்றந்தைக் கடியேன்போயேதுரைப்பேன்
சேர்க்கைபிரியாமலென்று சேர்ந்துநீர்சஞ்சரித்து
மார்க்கமுடன்வாருமென்ற மன்னவனுக்கென்சொல்வே
ன், தேன்சிந்துதாரான்போர்வை சிந்தூட்டிருங்கனிக்
குந், தான்சிந்தவேணுமென்ற தந்தையர்க்கென்சொல்
வேன், தன்னுயிரைக்கொண்டுவந்து தான்கொடுப்பீரென்
றுரைத்த, மன்னவனுக்கென்சொல்வேன் மந்திரிமார்க்
கேதுரைப்பேன், என்னுயிர்நீயுன் னுடல்நா மென்றிருந்
தோம்நீபிரிந்து, மின்னுமுயிர்வைத்திருக்கின்றேன்மன்
னவனே, பிரிந்தபோவென்மேல் பிரியம்விட்டுப்போன
துவோ, தெரிந்தாயோவேறுவழி தேர்வேந்தன்கண்மணி
யே, மன்னவனேயென்றுசொல்லி வாடிப்பரதவித்துத்
தன்னந்தனியேபுலம்பிச் சற்றேமனந்தேறி
அங்கோரிடத்திலிருந் தாலோசனைகள்செய்வான்
இங்கேயிருந்தமன்ன னெவ்விடத்திற்போயிருப்பான்
அப்படிபோனாலுமென்னை யறியாமற்போகானே
இப்படிக்குள்யாரேனு மிடையூறுசெய்தாரோ
ஆவிக்குமோசம்வந்தா லாக்கைகிடவாதோ
காவிற்றிரிவேங்கை கண்டிழுத்துப்போனதுவோ
வரிவேங்கைதானிழுத்து வன்புதைக்குட்சென்றாலும்
தலையிலேயந்தத் தடங்கிடக்கக்காணேமே
ஊனதனுயிருக் கபாயமொன்றுவந்ததில்லை
மாநிலத்திலுள்ள மனிதரோமங்கையரோ
கைம்மைபக்கினாலோசெய் வஞ்சனையாலேதமது
கைம்மயக்காற்கொண்டுசென்ற காரணமீதாகுமென்று
புத்திசிகாமணிதன் புத்தியினால்நிட்சயித்துப்
பித்துவிலகிப் பிதற்றுந்தொழிலைவிட்டு
சிந்தைதக்கலக்கஞ் சிறிதுதெளிவாகி
இந்தத்துயர்படவோ இறைவனுடனிங்குவந்தேன்
அறியும்பொருளழிவு மழியாப்பொருளழியா
தழிவதழிந்தால்வழிக்க லாமோவென்பார்பெரியோர்
அன்றெழுத்தை யழித்தெழுதுவாருமில்லை

முன்னாள் விதிபோன் முடியுமெந்தக்காரியமும்
ஆகையினாலிந்த வரசனை விட்டகன்று
போகவு நானிங்கே புலம்பித்தவித்திடவும்
வேதனுமென்றலைமேல் விதித்திருக்கவே யென்று
போதேயே யுணர்ந்தான் புத்திசிகாமணியும்
எல்லாஞ்சரிதாவிங் கெனது மனந்தேறிடினுஞ்
சொல்லா வுயர்ந்த துரைமகனை தானிழந்து
தனியேநகர்புகுந்தேன் றந்தைக்கும்மன்னனுக்கும்
அனியாயமாமிதனை யடியேனெவ்வாறுரைப்பேன்
படிபேழுங்கார்த்திடுமென் பாலனெங்கேயென்றபனி
முடிவேந்தன்கேட்டால் முகாந்திரநானென்னசொல்வே
ன், மைந்தன்மனவுதாபமுன்மேல் வைத்ததனால்விட்டு
விட்டு, முந்தியிங்குவந்தாயோ முகாந்திரந்தான்வேறு
முண்டோ, சிவனுக்குமோசம்வந்து சேர்ந்ததோசெல்வ
னுக்குப், பாவிநீயுண்மைபகரென்றால்லேதுசொல்வேன்
மந்திரிமார்தன்குலத்தில் வனைதேடிவைத்தாயென்
றந்தநகராமைச்ச ரனைவர்களுஞ்சொல்வாரே
உற்றூர்பழிப்பாரே ஊராருமேசுவாரே
பெற்றவருமென்மேற் பிரியம்விட்டுப்போவாரே
இக்கெடுந்தகதை யெல்லாநான்சொன்னாலும்
அங்கே நிசமென் றனுவுமொப்புங்கொள்வாரோ
ஆதலினாலென் னுயிர்மே லாசைவைத்துவாழ்வதினும்
சாதலேநல்லதென்று தானினைப்போமானாலும்
வேந்தனுந்தானிறந்து விட்டானோ அல்லவெங்குஞ்
சேர்ந்திருக்கின்றானோவெச் சந்தேகந்தீரவில்லை
சீவனிருந்தாலுமவன் சினேகமிருந்ததென்றால்
ஆவலுடனுயிருண் டாக்கிக்கொள்ளக்கூடும்
அப்படிச்செய்யாமலடியே னுமாய்ந்துவிட்டால்
எப்படித்தானெப்பிறப்பி லென்னரசைநான்காண்பேன்
இந்தச்சிறுவயதி லென்னைப்போலிடைஞ்சலுற்றார்
எந்தக்கதைகளிலு மெவராலுங்கேட்டதுண்டோ



### மந்திரி காசியாத்திரைக்குப் போகுதல்

புண்ணியபாவங்கள் பழவினைகளுள்ளதெல்லாம்
புண்ணியதீர்த்தங்கள் புகுந்தாடினால்விலகும்
காசிமுதலான காசினியிற்றீர்த்தமெல்லாம்
நேசமுடனாடி வந்தால் நினைத்ததெல்லாங்கைகூடும்
ஆகையினாற்காசி யாத்திரை நாட்செய்துவந்தால்
சோகமதுதீருமென்று துணிந்தான்மனந்தனிலே
இந்தப்படியமைச்ச னெண்ணியங்கேயேதுசெய்வான்
அந்தத்தடாகமதி லவன்புகுந்துநீராடி
பூசைமுடித்தந்தப் பொற்படியில்வைத்திருந்தான்
வாசைவகைகட்டமுதை மந்திரியுந்தானவிழ்த்தான்
கட்டமுதைத்தானெடுத்துக் கைநபாலவிழ்க்கவுடன்
மட்டவிழ்ந்தாரணிந்த மன்னவனைத்தானினைத்தான்
சிவனேசிவனேயென் சீவனுக்குநேரான
புவனேந்திரனைவிட்டு போசனமுஞ்செய்வேனோ
அருந்தமுதங்கொண்டுவந்தா லழகானபொற்படியில்
இருந்துபோசித்திடலா மென்றுசொன்னமன்னவனே
உன்னைப்பிரிந்துமின்ன முயிர்வைத்திருப்பதற்கோ
அன்னத்தையுண்ணவெனக் காசையுந்தானுண்டாச்சே
என்னுடத்திற்சொன்னபடி யின்னமுதங்கொண்டுவந்தே
ன், மன்னவனேயுன்னையிங்கே வந்திருந்தக்காணேனே
என்றுபுலம்பி யிருகண்ணும்நீர்சொரியக்
குன்றிமனது கலங்கினனம்மானை
வருந்தும்மனதையுந்தான் மதியினாலேதேற்றி
இருந்தமுதிற்கொஞ்ச மெடுத்துண்டநீர்பருகிட்
பூங்காவனத்தில்வந்து புரவியிரண்டினுக்கும்
பரங்காகமீதிருந்த பாலளத்தைத்தான்கொடுத்து
சீனியிருபரிக்குஞ் சேர்க்கையுடனிறுக்கித்
தானுமுடைவாளெடுத்துத் தன்னிடையிலேயிறுக்கி
கச்சதனையெடுத்துக் கட்டினனம்மானை
அச்சணத்தில்மந்திரியு மசுவமிரண்டனையும்
சேர்க்கைபிரியாமல்முன்பின் செல்லாமற்போவதற்கு

ஊர்க்கொண்ட வைகமுத்தில வகையாகத் தான்பிணைத்தி
வார்புரவேறிதனில் மந்திரியுந் தானேறி
நாமமனைவேகியங்கே சோடுபிராயாமல்வர
தேசியிரண்டினாலுஞ் செவிமே மந்திரத்தைப்
பேசிபோகாயவழி பிரியாமலே நடந்து
சீரானசெல்வஞ் செழிக்குந் தங்கமாபுரிக்கு
நேராகவந்தா நிலத்திலோர் பாவிரங்கி
நட்டுப்பரியையாங்க நகரத்தின் வீதியிலோர்
இடத்திலே தானிருக்கு மேந்திழைபூவாணிபச்சி
வீட்டினருகில்வந்து வெம்பரியைவிட்டிறங்கி
மாட்டுமுனையிலந்த பரிவிரண்டுங் கட்டினைத்து
சென்றானவள் தனையிற் சேயிழைபூவாணிபச்சி
அன்றாசையாயிவனை யாசனத்திலேயிருத்தி
செல்லுமிடத்தினுக்குச் சென்றுநீவந்ததேரா
சொல்லுமையாவென்று சுரிகுழலாள் கேட்டவுடன்
மந்திரியுந்தானுரைப்பான் மங்கையரே கேட்டருளாய்
இந்நாளிங்குவந்தேன் [illegible] ஊர்க்கும்
எனதுசொந்தகாரியமாய் பேசிவரவேண்டும்
உனதுதகவிவேண்டுமதற் குனைநான் சொல்லுகிறேன்
நான்போய் வருமளவும் தங்காய்க்குதிரைகளைத்
தான்பார்த்துவாவென்று தாயேயடைக்கலந்தானே
திரும்பினவர்க்குரைச் செல்லுமோரண்டவரும்
வருந்தி[illegible]பொழுதேவரங்கின் [illegible] மனிதே
என்னவுரைத்தானதுவும் கேட்கிப்பூவாணிபச்சி
தன்னுடையநாயகர்க்குந் தானுரைத்துசம்மதித்தார்
ஏருடமோன் ருக்குள்ளே வயாகன்முழு [illegible]
பிரியமுடனவர்க்குப் பின்னுமயினுமுயகொடுத்து
அந்தகுதிரைகளை வசப்படுத்திக்கொள்ளவென்று
புத்திபுகன்சொல்லிப் புறப்பட்டானம்மானை
புத்திசிகாமணியும் பொன்னகரைவிட்டேகி
அத்தலத்துக்கப்பா லடுத்தவொருகத்தில்
[illegible] நெருங்கான் [illegible] போலாம்



சிவனேசுதியெனவே தேசாந்திரம்போக
காவியவஸ்திரம்வாங்கியவன் காசாயமுந்தரித்து
மேவினான் காசிமுதன் மிகுதீர்த்தயாத்திரைக்கு

### இராசகுமாரன் மந்திரியை நினைத்தல்

காசிநதியாத்திரைக்குக் கருதியவன் சென்றதனை
பேசினேன்பின்பு பெருமானுக்குற்றதெல்லாம்
சொல்லமனதுத் துணிந்தேன்காணம்மானை
எல்லிபகலறியா வேழுநிக்குமாளிகையில்
பூவைகாரம்மையுடன் புவனேந்திரவேந்தும்
மாலோடுகூடியங்கே வாழ்ந்திருக்குநாளதனில்
தாகத்தனிமெடுத்த நாகரத்னசூசீவரத்னம்
ஆகுமணிகளையுமமைத்ததங்கக்கம்பிதனில்
கோர்த்தெடுத்துப்பின்னிக் குலவுமணியாழியதாய்ச்
செய்தந்தன்மைவிரலிற் சிறப்பாயணிந்துகொண்டான்
வாய்த்தபூவைகாரம்மை மாதரசிமன்னவனும்
பார்த்தவுடனே கலவி பாராட்டிவாழ்ந்திருந்தார்
ஐந்துமணிமன்மதனு மழகுமதியோனும்
இந்திரனும்விண்ணுலகத் திந்திராணியும்போலும்
மாநாரணனரியுடன் மருவருச்சுனன்போலுந்
தேனார்மலர்த்திருவுஞ் செங்கண்மாலும்போலும்
சிவனுங்கூடும்போலுஞ் சேர்ந்தபிரியமாய்
மேவிக்களித்திருந்தார் வேந்தனும்மெல்லியற்றிழையுங்
கூடிமருவுவதுங் கொஞ்சிவிளையாடுவதும்
பாடுமிசைக்கானம் பாடிப்படிப்பதுவும்
வீணைவாசிப்பதுவும் மேவிச்சுகிப்பதுவும்
வாணியிவளாகுமென்று மன்னவன்கொண்டாடுவதும்
இத்தவிதமாக இவர்பொழுதுபோக்கியங்கே
சித்தமகிழ்ந்தவுடனே சேர்ந்துமேவாழ்ந்திருந்தார்
கன்னிவிரகக்கடலிற் கருத்தென்னுங்கப்பலதை
புன்னான்கவிழவிட்டு மந்திரியைத்தான்மறந்தான்
குற்றமற்றமந்திரியுங் கூடவந்தானென்பதனைச்
சற்றும்நினைக்கவில்லை தார்வேந்தனம்மானை

வாய்த்தமதிமந்திரியை மறந்துவிட்டமன்னனுக்கு
சார்ந்தபரிமேல் நினைப்புத் தானெப்படிவருமோ
தனக்குரியமந்திரியைத் தானேரியபரியை
மனத்தின்மறந்தரசன் வாழ்ந்திருக்குநாளதனில்
அங்கோர்தினத்தி லவ்பொழுதுபோக்குதற்காய்ச்
சிங்காரமண்டபத்தில் சேர்ந்துமணியாசனத்தில்
வாசமுடன்மேவியந்த மங்கைக்கரசியரும்
ராசனுமாடுசதுரங்கவிளையாட்டதனில்
இத்தமின்னாள்மன்னவனே யென்காலாலுமது
மந்திரிக்குமோசம் வரும்பாருமென்றுரைத்தாள்
மந்திரிக்குமோசமென்ற வார்த்தையினைக்கேட்டரசன்
சிந்தைமயங்கிக்கலங்கி திண்டின்மேற்சாய்ந்துவிட்டான்
மூர்ச்சையுடன்சாய்ந்தவன் மூர்ச்சடங்குந்தன்மைகண்டு
மாச்சரியமென்னவிங்கே வந்ததென்றுமங்கைநல்லாள்
ஆலோசனைசெய் தரசனிவன்கூடவிங்கே
மாலாயமைச்சொருவன் வந்திருக்கதான்வேணும்
வந்தவிடத்தந்த மந்திரியுமன்னவனை
எந்தவிடத்திற்பிரிந்தோ எவ்விடத்திற்போனனோ
அவனைப்பிரிந்துதம் மாசையினாலிவ்வரசன்
கவனமறந்துதம்மைக் கலந்தணைந்தாருமிதை
அல்லாதிவர்மூர்ச்சை யாவதற்குவேறுமிலை
பொல்லாங்குநாமும் புரிந்ததாயொன்றுமில்லை
ஏதுபூலோகரம்பை பெண்ணரியுமங்கேதுசெய்வாள்
பொன்றினவர்போன்மூர்ச்சை போய்க்கிடந்தமன்னவனை
மார்போடெடுத்தணைத்து வதனத்திற்பன்னீர்தெளித்து
சீராப்விசிறிகொண்டு திருமுகத்தில்தான்வீசி
முதுகுதடவி முகந்துடைத்துக்கால்வருடிப்
பதிவானமூச்சுவரப் பண்ணினாள்பெண்ணரசி
அவ்வரியவன்மூச்சுவிட்டு சோபந்தெளிந்தவுடன்
மன்னவனுங்கண்விழித்து மந்திரியேயென்றெழுந்தான்
எழுந்தானெழுந்துமன மேங்கிப்பரதவித்தான்
அழுந்தாந்துயர்கடலி லழுந்தியப்பட்டான்



சிந்தைபடியமுது தேடிவரப்போயிருந்த
மந்திரியேயுன்னை மறந்துயிருந்தேனே
அன்னத்தைக்கொண்டுவந்து கடுத்தபூங்காவனத்தில்
என்னைக்காணுமல்மன மெப்படித்தானேங்கினையோ
பாம்பினதுதுண்டமன்றப்பட்சிகொண்டுபோகுமெனில்
தேம்பிரத்தங்கண்டரசன்செத்தானென்றெண்ணினையோ
என்னுயிருமாய்ந்துவிட்டதென்று நீநிச்சயித்தால்
உன்னுயிரையோ ஒருநொடியில்மாய்ப்பாயோ
உன்னைபிரிந்திங் குயிர்வாழ்ந்தேனையோவென்
றன்னைப்பிரிந்துநீ க்ஷணமிருக்கமாட்டாயே
தேடியலைந்தாயோ சிந்தைமிகநொந்தாயோ
ஓடியலைந்தாயோ உயிரைவிட்டுக்கொண்டாயோ
மாய்ந்தார்பிழைத்திடச்செய் மந்திரவித்தைநீபடித்தும்
மாய்ந்தாயென்றாலுனையார் வரவழைக்கப்போறார்காண்
சீவனைத்தான்விட்டாயோ தேர்வேந்தன்சென்றவிடம்
மேவிவிசாரிப்பமென்று வேறிடத்திற்சென்றாயோ
பொய்யாதவாசகனே புத்திசிகாமணியே
அய்யோவுனைப்போ லறிவுகெட்டார்யாருமுண்டோ
மாலானநாகமுமென் மதியைவிழுங்கினதால்
ஆலோசனைவிட் டடச்சேயுனைமறந்தேன்
காமத்தாலன்றோ கலக்கமுற்றான்ராவணனும்
காமத்தாலிந்திரனுங் கண்ணாயிரம்படைத்தான்
ஆனதனாற்காமமென்னை யறிவழித்துபோட்டதையோ
ஞானமனுவுமில்லா நானுனைநொந்துகொள்வேன்
தெய்வமேநானினியென் செய்வனெனப்புலம்பி
வையகத்தரசன்மகன் வாடினனம்மானை
வாடியமன்னவனை மாதுமனந்தேற்றி
யோடியகண்ணீரை யுருமால்கொண்டேதுடைத்து
மந்திரியேயென்றுசொல்லி வருந்துகிறீர்மன்னவனே
மந்திரியாருமுடனே வந்தவர்களெத்தனைபேர்
எந்தவிடத்திலிருந் திவ்விடத்திற்வந்தீர்கள்
சொந்தத்தாரமெது துணையாகவந்தவரார்

கூட்டிவந்தா மந்திரியைக் கோமான்மறப்பதுண்டோ
நாடியிங்கே நீரும்வந்து நாலுநாளாகுதைய
நடந்தவகையெல்லா மென்னுடனேசொல்லுமென்று
மடந்தைநல்லாள்கேட்டவுடன் மன்னனுந்தானுரைப்
பான், மாதருக்கெல்லாமரசே வளர்புவனாம்பையென்
னும், காதற்கடலேபெண் கதையெல்லாஞ்சொல்லிடக்
கேள், புவனேந்திரனொனு மோர்பொன்னகரமந்நகர்க்குத்
தவமேந்தியவரசன் தாலபுரந்தரனும்.
அந்தவரசனுக்கு வைகம்பதுபேர்மந்திரிகள்
மந்திரிக்கெல்லாந்தலைவன் மல்சுமந்திராகரனும்
மன்னனுக்குநான் பிறந்தேன் மந்திரிக்கோர்மன்னனுண்
பின்னவனும்நானும் பிரியாச்சினேகிதர்காண்
என்பேர்புவனேந்திர னென்னு மனைதுங்கிசைந்த
பொன்போனும்மந்திரிபேர் புத்திசிகாமணியாம்
வயதுபன்னிரண்டினுக்குள் வகையாகல்வியெல்லாம்
நயமாகவேபடித்தோம் நாங்களிருபேரும்
மாண்டார்பிழைத்து வரச்செய்யுமந்திரவித்தை
பூண்டானொப்படித்தான் புத்திசிகாமணியும்
நாங்களிருவோருமொரு நாளும்பிரியாமல்
நீங்கொன்றும்வாராமற் சேர்ந்திருக்குநாளையிலே
நாட்டுவளம்பார்த்து நாங்கள்வரவேணுமென்று
நாட்டிகமன்னன் சமுகத்திற்போய்க்கேட்டோம்
மன்னவனெங்கள் வார்த்தையினைமறுத்துவிட்டாயப்போது
தன்மையாய்மந்திரிகள் தாங்கேவந்தன்றனிடத்தில்
எத்தவிதமுமிவர்பயணம்போய்செய்யுமென்று
தந்திரமாயுத்தரவு தான்வாங்கித்தந்தாரகாண்
உத்தரவுபெற்றவுடனே பயணம்வைத்தோம்
சித்தமுடன்புத்திசிகாமணியும்நானுமங்கே
யொக்கிஷத்திலிவேண்டும் பொருள்களையுந்தானெடுத்து
வைக்கவெகுந்தமந்திரவாள் கத்திகளுடன் வாளெடுத்து
வாயுவேகி மனவேகியென்னுமிரண்டுக்குத்
தூயபரியிரண்டுஞ் சோடாகப்பரியில்



மனவேகியில்நானும் மற்றதனில்மந்திரியும்
கனவேகமாய்க்குதிரைக் காலில்விந்தைமந்திரத்தை
மேவியுரைத்தோமுடனே வெம்பரியாகாயவழி
தாவிவேகிழ்த்திசையைத் தாண்டிச்சென்றதுகாண்
காம்போஜதேசமுதற் கனதேசமும்பார்த்துப்
பாம்போவெகுமித்தப் பசுஞ்சோலைசேர்ந்தோங்காண்
சோலைக்கருகில்வந்து நாண்டுபரியைக்கட்டி
மாலைப்பசுந்தருவில் வாம்பரியைக்கட்டிவைத்தோம்
பூங்காவனம்பார்த்துப் போகின்றவேளையிலே
அங்கோர்தடாகமதையவ்விடத்திற் கண்டுகொண்டோம்
கண்டோந்தடாகமதிற் கனகப்படித்துறையும்
விண்டோய்ந்தகங்கையென மிருதுவுள்ளதண்ணீரும்
அந்தப்புனலும் அழகுபடியும்பார்த்து
மந்திரியைநோக்கியொரு வார்த்தைநான்சொன்னேன்
காண், சம்பாவமுமாஞ் சமைந்தபுளியோதரையும்
கும்போங்கறிவகையுங் கொண்டுவந்தாலிப்படியில்
வைத்துப்போசித்தால் மனந்திருப்தியாகுமென்று
புத்திசிகாமணிதான் புகன்றமொழிகேட்டவுடன்
அன்னமதுநான்வாங்கி யடியேன்வருமளவுக்கு
மன்னவனேபூங்காவனத்திலிருமென்றுசொல்லி
சென்றானமைச்சன் றிரும்புமட்டுநான்சோலைக்
குன்றுவளம்பார்த்துக் கொண்டிருக்கும்வேளைதனில்
சேயிழையேயுன்னிடத்திற் சேர்ந்திருந்தபாம்பதுதான்
ஐயுஞ்சினத்துடனே கடிக்கவரக்கண்டுடனே
வெட்டினேனப்பால் விளைந்தகதையெல்லாமுந்
சட்டமுடன்முன்னுனக்குத் தானுரைக்கநீதெரிவாய்
பாம்பிரத்தமென்மேலே பட்டதனைச்சுத்திசெய்ய
நான்படிக்குள்வந்துநின்றேன் நாகரத்னந்தன்னுடனே
வந்தவென்னைக்கண்டுபுனல் வாவியின்கீழ்போய்விலக
அந்தவழிவந்தலவோ அணங்கேயுனையடைந்தேன்
பின்னேநானன்றுமுதல் மெய்ம்மறந்தேன் மந்திரியை
என்னுலமைச்சனங்கே யென்னதுயர்பட்டானோ

மானார்மயக்கின் வசப்பட்டாற்புத்தியற்றுப்
போவாரென்றே புகன்றார்பெரியோர்கள்
பூங்குயிலேயென்று புவனேந்திரனுரைத்துத்
தாங்கவொண்ணாத் துன்ப சமுத்திரத்தின்மூழ்கிநின்றே
ஒருவேளைமந்திரியன் குள்ளமலர்க்காவிலின்னம்
வருவேனோவென்றுசொல்லி வந்திருந்தாலுமிருப்பான்
பார்த்துவருவோமென்று பாவையுடன்மன்னவனும்
ஆத்திரமாய்ப்போய்ப்பார்த்தா ரந்தப்பூங்காவனத்தில்
பூங்காவனமும் புதியமலர்ச்சோலைகளும்
பாங்காமிடங்களெங்கும் பார்த்தாரிருவர்களும்
பார்த்தார்கள்மந்திரியும் பரிகளையுங்காணாமல்
வேர்த்தாருடலும் வெதும்பிமனம்நொந்துநின்றார்
கட்டமுதுகொண்டுவந்து கனிவாயெனைத்தேடி
இஷ்டமுடனேதா னிங்கிருக்கக்காணாமல்
மங்கியலைந்தானோ எவ்விடத்திற்சென்றானோ
தாங்காத்துயருடனே தன்பதிக்குச்சென்றானோ
ஜீவனைவிட்டானோ தேசாந்திரியானானோ
பூவுலகெல்லாந்தேடிப் போனானோமந்திரியும்
இன்னபடியென் றெனக்கறியக்கூடவில்லை
வன்னியரேயென்று கலங்கினான்மன்னவனும்
தமன்வன் மதிமயங்க மங்கைநல்லாளேதுரைப்பாள்
இன்னாள்வரையிலிவ ரிங்கிருக்கப்போரானோ
பாங்குடைமந்திரியும் பரிவேற்றேகுமிங்கே
நீங்குதற்குகாலம்வந்து நேர்ந்ததுமுன்னாள்விதிதான்
அந்நாள்விதியா லவனைவிட்டுநீர்பிரிந்தீர்
இந்நாள்வருந்துவதா லினிவருவதொன்றுமில்லை
ஊழ்வினையா லுமைவிட்டவன்பிரிந்தான்
பாழிலேநீரேன் பரிதாபமிருக்கிறீர்
ஆங்காலமெப்பொருளு மாகுமதுபோலவரும்
போங்காலம்வந்ததென்றார் போமென்றார்பொய்யலவே
ஆனதனாலிந்த வசனமனத்தாபம்
வனிமேல்விட்டுவிடு மென்றாள்வேற்றிழையாள்



மின்னனையாள்சொன்னதால் வேந்தன்மனந்தேறி
யபின், மன்னவனுமங்கையும்பொன் மாளிகைபோய்ச்
சேர்ந்திருந்தார், துன்பத்தைநீக்கித் துரைமகனுந்தோ
கையரும், இன்பக்கடன்மூழ்கி யிருந்தார்களம்மானை
காமத்தேனுண்டு களித்ததந்தகாரிகையும்
சேமத்தேர்மன்னவனுஞ் சேர்ந்திருக்குநாளதனில்
பூமிபுரக்கும் புவனேந்திரனொருநாள்
காமரசவல்லிபெற்ற கன்னிகையைப்பார்த்துரைப்பான்
மாளிகையினுள்ளே மறுமநம்பாரா திருந்தோம்
வேளிரதிபோலேதா வெளியேறிமீண்டுவந்தால்
தேகசவுக்கியமுஞ் சித்தந்திருப்தியுமுண்
டாகுமெனவுரைத்தா னதைக்கேட்ட வனுரைப்பாள்
நிலைமையறிந்துசென்றால் நேரிடுங்காலமெல்லாங்கு
கலகம்விளைவதற்குக் காரணமுமுண்டாகும்
சற்பம்வெளியேறியல்லோ தன்னுயிரைவிட்டதுகாண்
எப்போதுநாமிங் கிருப்பதோரல்லாமல்
வெளியேறிப்போய்வருதல் வீண்துன்பமுண்டாகும்
எளியேன்சொற்கேளுமென வேந்தனதையாளுந்தடுத்தா
மெய்தானணங்கே விளம்பியதானுமந்தப்
பொய்கைவிட்டுவேறோர் புறத்திலும்நாம்போறோமோ
மண்டபத்துஞ்சோலையினும் வசித்துவிளையாடி
கொண்டுடனேவந்திடலாம் கோதையதற்குள்
என்னபகைவந்துவிடும் ஏதுர்வராதென்றுசொல்லி
கன்னிமனந்தேற்றியந்தக் காவலனுங்கன்னிகையும்
மாளிகைவிட்டேகிமைய மண்டபத்துஞ்சோலையினும்
வேளுமிரதியும்போல் விளையாடிக்கொண்டிருப்பார்
பூலோகரம்பையுடன் புவனேந்திரனொருநாள்
மாலோடுகூடிமைய மண்டபத்தில்வந்திருந்து
காவிற்குயிலேசை காதுகுளிரக்கேட்டு
மேவிச்சதுரங்கம் விளையாடிக்கொண்டிருந்தார்
இவர்விளையாடியங்கே யிருக்குமந்தவேளைதனில்
புவியில்நடந்தகதை புகலுவேனம்மானை





33

விஜயநகரத்தரசன் வேட்டைக்குவந்து காணுதல்,

காவலுங்காரிகையுங் களித்துவிளையாடுமந்த
வாவிதனக்கு வடகிழக்காந்திசையில
இருக்கும்விஜயநகரென் றுரைக்குமோர்நகரம்
விசித்திரமாநகர்க்கு விஜயதாரணும்வேந்தன்
மாவேந்தரைங்கொருநாள் மலைவேட்டையாடவென்று
நேர்வேந்தரைஜெயிக்குஞ் சேனைபுடைசூழ்ந்துவரக்
காட்டிற்புகுந்து கரிபுலிமான்வேங்கைபன்றி
வேட்டையெல்லாமாடி வெயிலாறுடன்வாடித்
தாகத்திறுலே தயங்கிமரத்தடியில்
சோகத்துடனிருந்து சொல்லுவான்மந்திரிக்குத்
தாகமுடியாதுதண்ணீர்த் தாகமெங்கேபோனாலும்
இருக்குமிடந்தேடி யெடுத்துவாவேணுமென்றான்
மன்னனுரைத்தமொழி மந்திரியுந்தான்கேட்டான்
உன்னிவளர்ந்தமலை யொருகுமட்டின்மீதேறி
பார்க்கும்பொழுதிலங்கே பரவுகன்னிமூலையிலே
கார்க்குலங்கள்சூழ்ந்து கவியுமலர்ச்சோலையொன்று
கண்டானச்சோலைவளங் கதிப்பாகக்காணுதலில்
உண்டாயிருக்கும்நீ ரோடைநீரார்குமென்று
சீலமுடனந்த திசைகுறித்துத்தானிரங்கிக்
கோலப்பரியேறிக் குடிசெம்புதைபிடித்து
சென்றுநீர்கொண்டுவந்து சேருகிறேனென்றுசொல்லி
நின்றசிலபேரையந்த நிருபனருகில்வைத்து
கதிபாய்ப்பரிநடத்திக் கானகமெல்லாங்கடந்து
எதிரேயச்சோலை யிருக்குமிடத்தில்வந்து
பார்த்தானச்சோலையினோர் பக்கத்திற்றிவ்வியமாய்
தீர்தான்பெருகி நிறைந்திருக்கும்வாவிதனை
தேசிவிட்டுக்கீழிறங்கிச் சேர்ந்தான்குளத்திலுள்ளே
நேசமுடன்றாகவிடாய் நீங்கத்தண்ணீர்குடித்துப்
பிடிசெம்பில்நீரைமொண்டு பின்புகரையேறி
நெடியக்குளக்கரையில் நின்றானவ்வேளையிலே

வாவிக்குள்ளேயமைய மண்டபத்திலேசமைப்
பூவைக்குள் வீற்றிருக்கும் பொற்போலே பெண்கொடியும்
மாரனையும்வென்று வடிவழகிற்மிகுந்த
வீரனுமங்கேசேர்ந்து விளையாடத்தால்பார்த்தான்
தேவியுமன்னவனுஞ் செய்விளையாட்டதனும்
வாவிதனில்நீரெடுக்க வந்தவளைகாணார்கள்
மன்னன்குமாரனிவன் மங்கையுமோராஜகன்னி
என்னமதிதானமைச்ச விரதியிவட்கொப்பாரகாண்
மெய்யழகுக்கொப்பாயிகம் மேதினியிற்கண்டதில்லை
தையலுக்குவாய்த்த தலைவனுங்கொப்பாருமில்லை
ஆணுமிவளையிவ னறமறியாதபடி
தானேகவர்ந்துவந்த சாடைபோற்றேனுதிங்கே
நல்லதாகண்மாறனாகோர் நாயகனுக்கென்பாரதுபோல்
மெல்லியரைநம்முடைய வேந்தனுக்குச்சேர்த்திடலாம்
வாவிக்குள்ளேயிருக்கும் மங்கைதனைச்சேனையுடன்
காவலனைக்கூட்டிவந்து கைப்பற்றவேணுமென்று
வேகமிகுந்தபரி மேலேறிப்போய்ச்சேர்ந்து
தாகமுள்ளமன்னனுக்குத் தண்ணீரைமுன்கொடுத்தான்
ஆசாபாசத்துடனே யரசனெழுந்திருந்து
கூசாநீரெடுத்து குடித்துவிடாய்தீர்ந்தான்
தாகவிடாய்தீர்ந்து தனித்திருந்தமன்னனுக்கு
மோகவிடாயையங்கே யூட்டிவிட்டான்மந்திரியும்
வேந்தருக்குவேந்தே விஜயநகர்க்கரசே
வாய்ந்தவிஜயபுரி மன்னவனேகேட்டருள்வீர்
தங்களுக்குநீரெடுக்கச் சார்ந்தேனதொருகுளத்தில்
அங்குநான்கண்டமதை ஆச்சரியமென்னசொல்வேன்
வாவிப்புனலெடுத்து வந்தபடித்துறையில்
மின்னலங்கேயுந்த விதமென்னவென்றுசொல்லி
பெண்ணரிரண்டுகண்ணு மிமையாமற்பார்த்துநின்றேன்
தெப்பகுளங்கடுவிற் சேர்ந்தமையமண்டபத்திற்
கற்பகவல்லிக்கொடிபோற் கண்டேனோர்பெண்கொடியை
செந்திருவோநாமகளோ தேவரம்பையோரதியோ



சுந்தரவப்பெண்ணணங்கோ காமினியோர்கன்னிகையோ
யாரோவிவளென் றதிசயித்துதான்மயங்கி
தாரோதியிந்தத் தரைமாதென்றேமதித்தேன்
பூவேந்தர்பெற்ற புதல்விபிவளல்லாமல்
தேவேந்திரன்முதலோர் தேவியல்லவென்றறிந்தேன்
பூவுலகப்பெண்களிந்தப் பூவையழகுண்டானால்
ஆவலுடனுன்வடிவுக் காசைகொள்ளார்யாருமில்லை
வாணியிந்தமங்கை வடிவழகைக்கண்டல்லவோ
நாணிமலரோனுடைய நாவிலேபோயொளித்தாள்
சுந்தரமாமழகை தொடையழகுக்கண்டல்லவோ
அந்தரமாய்ப்போனா ரம்பையரெல்லாருமையா
மாதிவளைக்கண்டான்மால் வசப்படுவாளென்றுமலர்
கோதையவன்மார்பிற் குடியாயிருந்தனள்காண்
தேமலழகினின்னே செழிப்பதைமுன்னோர்ந்தலவோ
பூமிதனைப்பிளந்து போய்மறைந்தாள்ஜானகியாள்
தக்கைமொழியாளழகு தன்னைமொத்தமாயுரைத்தேன்
முத்துநகையாள்வடிவை முறையாய்ச்சொல்லக்கேளும்
ஆமைபுறவடிக்கொப் பாமென்றுகற்றுணர்ந்தோர்
தாமெல்லாஞ்சொன்னாற் சமானமினியேதுரைப்பான்
செம்பவளத்துண்டைச் சிறுவிரலென்பேனுகிற்
பம்புநகம்பந்தும் பதித்திருந்தாலொப்பாகும்
குதிக்குஞ்சிறுபாலர்கையாற் கொண்டிருக்கும்பந்ததனை
குதிக்குநிகராகுமென்று கூறுவதுங்குற்றமன்றோ
புறவடிவைத்தாற்சங்கைப் பேசாவனிச்சமலர்
உள்ளடிக்கொப்பாமென் றுரைத்தல்பழுதாய்முடியும்
கணைக்காற்பறடிரண்டுங் கட்டுதாஜன்றிமற்றோர்
இணைக்கார்புணைபட் டெடுத்துரைப்பார்மன்னவனே
மின்னரசிதன்கணைக்கால் மேவுவாரற்கன்றென்றுஞ்
சின்னமென்றுஞ்சொல்லிலது சின்னமன்றிவேறில்லையே
முழங்காலவனென்று மொழிந்திடவேணுமிலது
பழங்கால்வயல்வளையிற் பாயிலதுநேராமோ
வாழையிலந்தண்டை மதயானைக்கைத்தனை

ழை நடையென்றிளைந்தா யிருப்பதங்கேயொப்பாமோ
அன்றுக்கிணைந்தவங்கு வாய்ந்தபுலவோருரைத்த
ளைக்குவமையதா யுள்ளிருக்குமென் றுணர்ந்தேன்
பிடியுந்துடியுமந்தப் பெண்ணிடையென்பேன் சிலரால்
அடியும்பிடியுமந்தால் யானதற்கென்னசெய்வேன்
கொங்கைமதயானைகட்டக் கொண்டமுளைச்சங்கிலியே
மங்கையுயிரொழுங்கா மற்றொன்றுமொவ்வாதே
ஆலிலையையன்றி யணிவயிற்றுக்கொப்புரைக்க
மேலிலையென்றதற்கு வேறேதானே துரைப்பேன்
உந்திமகிழம்பூவென் றுரைப்பேன் அதுபூத்துப்
பிந்திவாய்தாம்பிவிட்டாற்போலிருந்தான்வேறுமுண்டோ
பொற்படியுஞ்சேர்த்துறையும் போதுமடிப்பெனலாம்
எப்படிதானுவமை யியம்பாமற் போராதே
கொங்கைக்கரும்பு ருமிழ்மெயிற்று முகிண்ணைத்தி
தங்ககுடங்குரும்பை தாளமிளநீர்கலசம்
பம்பரம்பொனவெற்புப் பருத்தமதயானைக்
கொம்புரதனச்செப்புமணிக் கும்பஞ்சகோரமுடல்
சொல்லியவெட்டுமின்னஞ் சொல்லாவுவமைகளும்
பலவிதமாகப்புலவோர் பகர்ந்தார்பொதுவாக
அத்தனைக்குங்குற்றம் அவரேசொல்வாராகும்
தத்தைமொழிமங்கை ஸ்தனத்துக்கிணையேதோ
கொந்தார்மலர்க்குழலாள் கொங்கைநகக்கண்ணைதனைச்
செந்தாமரையரும்பிற் சேர்ந்திருக்கும்வண்டெனலாம்
பங்கத்திலுள்ளோ பதுங்காதிருக்குமெனில்
செங்கைவிரலுக்குச் சினைக்கனியுதோதாரும்
தண்டிவருடிச்சுகத்தைத் தருமுகிற்குட்படுங்கனியுங்
கிண்டிக்கிளறிவிடுங் கிளிமூக்குதோமோ
செங்காந்தள் செங்கையென்றார் செந்தாமரையேகை
சங்காரும்ரேகையதிற் சார்ந்திருக்கமாட்டாதே
முன்கையைவிலையென்று மொழிந்தாலெபேர்கள்
வன்கருத்துக்கவ்வுவமை யேதுமிணங்கவில்லை
கன்னலேத்தோளென்றால் கழுத்துநெடிதிக்காதே



இன்னாதற்குவமை யேதென்றெடுத்துரைப்பேன்
தேனொருக்காரையோ சீனிபோழ்ங்கனியோ
மானோர்விழியாள் வசனமொன்றுதானுரைப்பேன்
கழுத்துக்கிணையாகக் கமுகதனைச்சொல்லுமென்றால்
அழுத்துங்குறியையது மறக்கமாட்டாதே
முல்லையரும்பு முருந்துவெண்ணைமுத்தையன்றிப்
பல்லையெதற்கிணையாய் பகரலாம்பார்வெந்தே
சூர்பலுக்குண்முத்திருந்தா லவள்வாய்க்கிணையாகும்
தாம்பவளமென்றிதழை நாட்டிலமுதாராதே
நாசியினைச்செண்பகப்பூ தாமினையென்போமாகில்
வாசமுடனேவருஞ் சுவாசமதற்கிலையே
மாரன்கணையுடனே வாளெடுத்துத்திட்டுதற்குச்
சேருமொருசாணையென்று செப்பலாங்கன்னமதை
நேசமுடன்பார்த்தவர்கள் நெஞ்சூசலாடுவதால்
ஊசலன்றிவேறுவமை பொவ்வாதவள்செவிக்கு
சாருமுகத்திலுக்குத் தாமரைப்பூதோற்றலவோ
நேருபவளத்திலுள்ளோ நின்றுதவஞ்செய்வதுகாண்
வேலோகடலோ விடமோவடுவானோ
சேலோபிணைவழியோ செந்தாமரைமலரோ
வாய்ந்தவரிவண்டோகூர் வாளியோமாவடுவோ
ஏந்திழையாள்கண்களெதுவென்றெடுத்துரைப்பேன்
வில்லேகரும்புருவம் வெண்பிறையேநெற்றியென்று
சொல்லேநல்லாய்வேறு சொல்லும்பொருளுளதோ
கொண்டல்மலைவாயலையுங் கூந்தற்கிணையவரும்
வண்டுசிறைப்பட்டுழலும்வார்ந்தகொன்றைக்காய்சிதரும்
சோலைசருகாயிருந்து துண்டாஞ்சைவலமும்
மாலைக்குழற்கினியான் வகுத்தகையொப்பாவுரைப்பே
ன், அன்னத்துக்கெல்லாந்தன் னழகுநடைகற்பிக்க
வன்னம்மயிலக்குளத்தில் வந்திருந்தாளென்றிடலாம்
தேவர்கடைந்தெடுத்த தெள்ளமுதேமேனியெனப்
பூவில்யன்செய்து புனைந்துவைத்தபாவையவள்
மாமினழகை மதித்துரைக்கவென்றாலே

அமாவச்சேடனுக்கு மறையமுடியாதே
இந்தமடமயிலை யெப்படிப்போவங்கொருவன்
சொந்தமாக்கொண்டு அணையிருக்கநான்பார்த்தேன்
கன்னியழகுக்கவனுங் காலழகுகொள்வான்காண்
உன்னழகுகண்டா லுடன்படுவாள்மன்னவனே
வாவிநடுமண்டபத்தில் மங்கையிருப்பதனுந்
தாவியெடுப்பதற்குச் சகாயமின்றிவந்தேன்காண்
எந்தமவர்களெழுந்தோலிபோகுமுன்னே
போகுபெருஞ்சேனையுடன்போர்க்குடவேனுமென்றான்
மந்திரிசொறபோய் நுழைந்த வழியேமதன்கிளி
யைத்திலொருநான்முபுக அரசவ்வையலாகிவிட்டான்
காமன்செருந்தமலர்க் கணையாற்கருத்தழிந்த
பூமன்னவனுளத்திற் புகுந்துவிட்டாள்பொற்கொடியாள்
நல்லாளைக்கா ணுதற்கு நமதுபெருஞ்சேனையெல்லாஞ்
செல்லும்வழிகாட்டிச் செல்லென்றான்மந்திரியை
மன்னனுரைகேட்டு மந்திரியும்வாம்பரிமேல்
முன்னேரப்பின்னேறி மொய்த்ததுகாண் சேனையெல்லா
சேனைதிரண்டுவரத் தேர்வேந்தன்வாம்பரிமேல் [ம்
மானைவிரும்பி வரும்வேங்கைபோற்புகுந்தான்
மான்வேட்டையாடவந்த மன்னனுக்குநல்லகளி
மான்வேட்டையாடத்தானென்று மகிழ்ந்தார்சிலவீரர்
பாய்ந்துசெல்லுந்தேசிகளைப் பார்த்தவாம்பரியில்
வேந்தனைபோலவிரக மிகுந்ததெயதோவென்றுரைப்பார்
அந்தருணம்வாவி யடுத்ததென்றுசேனையெல்லாஞ்
சத்தமில்லாமல்லாந் தான்செய்தான்மந்திரியும்
வீரர்புடைசூழ வேந்தனுமந்திரியுஞ்
சோலைவங்கடந்து சேர்ந்தார்குளக்கரையில்
வாவிக்கரையருகே வந்துநின்றுமன்னவனுங்
பூவைநடுவேயிருக்கும் புதுமைதனைப்பார்த்தான்
கார்க்கடலி னூடே சுதிருதயமானதுபோல
பார்க்கின்றகண் களிப்பப் பார்த்தான்விஜயதரன்
மங்கைவடிவழகன் மந்திரியுந்தோழு



பங்கிலொருபங்கு பகர்ந்திருக்கவேனுமென்றான்
மடந்தைகயிலையொரு மனிதன்வந்துகாத்திருக்க
உடம்வந்தானோ தாமிரார்தருணமோவென்றெண்ணி நின்
றான், எவராயிருந்தாலு மென்னவிந்தப்பெண்கொடியை
கவராதுபோவேனோ காரியமூதன்றுமோ
ஆரோவிவளை யடித்துத் தூக்கிவிட்டுக்
காரோதியைநமது கைப்பற்றிச்செல்வமென்று
சேனைகளுக்குரவு செய்தான்விஜயதரன்
மானுளிருக்குமந்த வாவிதனைச்சூழ்ந்துகொண்டார்
வாவியைச்சுற்றி வளைந்தங்கேசேனையெல்லாம்
காவலனுமந்திரியுங் கைநீட்டிநின்றார்கள்
இந்தப்படியா யிவர்கபெருஞ்சேனையெல்லாம்
வந்தகுளக்கரையை வளைந்துகொண்டுநிற்பதெல்லாம்
தோகைதுமன்னவனிங் குலவும்விளையாட்டதனால்
ஏதுதெரியாம லிருக்குமந்தவேளைதனில்
ஆடாமங்கையுடனங்கிருப்போன் மண்டபத்திற்
சேரடாவிங்கெனவே சிளந்துரைத்தான்மந்திரியும்.
இடியிடித்தாற்போல யிவனுரைத்தவார்த்தைதனைப்
படியரசன்கேட்டுப் பயிலும்விளையாட்டைவிட்டு
கண்டான்புவனேந்திரன் கனசேனைக்கூட்டமதை
வண்டார்குழலணங்கின் வதனத்தைப்பார்த்துரைப்பான்
ஏதோவெகுகளங்க ளொவ்விடத்துஞ்சூழ்ந்துகொண்டு
மாதேநமைப்பிடிக்க வந்ததுபோற்றோனுதுங்காண்
என்னரசேயுன்றுணையா யொப்யழகுக்கண்டுபுவி
மன்னவனேவிரும்பி வந்ததாகானுமென்றான்
பாவையுமச்சேனைகளைப் பார்த்தவுடனேபயந்தாள்
காவலனைத்தழுவிக் கட்டிமுன்னெஞ்சமஞ்சி
முன்னமேசொன்னேன் முடிவேந்தேகேட்டீரோ
என்னவினைக்கோவந் திவர்கள்வளைந்துகொண்டார்
நாமிங்கினியிருக்க ஞாயமில்லையென்றுசொல்லப்
பூமன்னவனுமந்தப் பூவைசொல்லமையுங்காண்
விளையாட்டைவிட்டு விரைவாயெழுந்திருந்து

வலைவாயிருக்குமந்த வாவிக்குள்ளேகுதித்தார்
வாவிவழியிலே மங்கையுமன்னவனும்
மேலேப்போய்மாளிகையில் வீற்றிருந்தாரம்மானை
மாளிகையிற்போய்ச்சேர்ந்து மன்னவனுமங்கையுமே
வேளையிதுநீங்காமல் மேவிசுகித்திருந்தார்
தண்ணீர்க்குள்ளேகுதித்து மெய்யமொளித்ததனைக்
கண்ணாரக்கண்டார்கள் காவலனுமந்திரியும்
மாயமோவஞ்சனையோ மன்னவனும்மாதரசும்
போயொளித்தார் தண்ணீர்க்குட்புதுமையிதுவாமெனவே
புனலிலொளித்தாரோ பிழைப்புடன்போனாரோ
மனதின்மதித்ததனை மந்திரியேசொல்லுமென்றான்
வேந்தன்விருப்பதான் விளம்புமொழிகேட்டமைச்சன்
ஆய்ந்துபலவிதமாய் ராசனுக்குத்தானுரைப்பான்
பாதாளபூமிக்குப் பாதையிந்தவாவிதனிற்
ஏதாயினுமிருக்கு மென்பதற்குச்சந்தேகமில்லை
அப்படிக்கில்லாதிருந்தா லம்மைவாகச்சடங்கு
இப்புனலுக்குள்ளே கிடந்திருக்கத்தான்வேண்டும்
வெள்ளைப்புனலூடே யேவிசோதிப்பதற்கு
வள்ளமுந்தோணிகளும் வலையும்பெருவலையும்
வாரும்வலையு மணிவலையுங்கைவலையுந்
சேரவரவழைத்துத் தெரிந்துகொள்ளவேணுமென்றான்
கோலவலைமுத்துக் குளிக்கின்றபேர்களையும்
சாலவரவழைத்துக் காணறியவேணுமென்றான்
சொன்னவுரைகேட்டுத் துரைமகனுங்கூடாரத்
தன்னைவிட்டுச்சோலையிலே தானெடுக்கச்சொல்லியபின்
கோலவிழிமாதொளித்துக் கொண்டகுளத்திலுக்கு
தானுமெய்க்குங்காவல் தானுறுபேரைவைத்து
சொந்தநகர்தனக்குத் தானேப்போய்விட்டுப்
மந்திரிசொற்போலே யாவரையுந்தான்மன்னவனும்
வலைகாரரெல்லோரும் வந்தார்களமன்னவனை
தலைபாலவணங்கிநிற்கத் தார்வேந்தனேதுரைப்பான்
வாவிக்குள்ளேயொருமான் மாதொளித்துக்கொண்டதனால்



மேலிவலைகளெல்லாம் வீசிப்பிடியுமென்றான்
சங்குகுளிகாரர் தனையழைத்துமண்டபத்தான்
வேந்தனிவ்வாறுரைக்க மேவும்வலைகாரரெல்லாம்
பார்த்தாற்படித்துறையிற் பலவலையும்வீசிநின்றார்
வள்ளத்தைத்தோணிகளை வாவிக்குள்ளேநடத்திப்
பள்ளத்துக்குள்ளேயும் பாச்சுவலைபோட்டிழுத்தார்
பாச்சுவலையும் பருத்தபெருவலையும்
வீச்சுவலையுமங்கே வீசியிழுத்தார்கள்
எல்லோருங்கூடி யிழுத்திழுத்துப்பார்த்ததிலும்
வல்லார்தனத்திலையு மன்னனையுங்காணாமல்
குளிகாரனையழைத்துக் குளத்திலேமுழுகிக்குளித்து
தெளிவாகபெண்மயிலைத் தேடித்தாவென்றுரைத்தான்
வேந்தனுரைத்தபடி விரைந்துகுளிகாரரங்கே
நீந்திப்புனலி னிலையறியமாட்டாமல்
வாவியினாழத்தை மதித்தறியவேணுமென்றால்
தேவர்களாலுந் தெரியமுடியாது
உற்றுற்றுப்பார்த்தாலும் ஒன்றுமிங்கேகாணவில்லை
கொற்றவனேயென்று குளிகாரர்சொன்னார்கள்
நாங்களினியென்னசெய்வோம் நாடுபொருவாரமட்டும்
நீங்காமற்றேடிவிட்டோம் நேரிழையிங்கில்லையென்றார்
மன்னனதைக்கேட்டு வலைகளுக்குச்சிக்காமற்
கன்னிமொளித்ததென்ன காரணமோவென்றேங்கி
எட்டாததேனெடுக்க வெண்ணிப்பெருமுடன்
தொட்டாவிகொண்டதுபோற் கோமான்வருந்தமுற்றான்
அய்யோவிப்பெண்ணரசை யன்பாயமேற்றிருந்தேன்
பொய்யாப்பழங்கதையாய்ப்போச்சேயென்னெண்ணமெல்லாம்
வட்டிலிற்சோற்றையள்ளி வாயிற்கொண்டுபோதொருவன்
தட்டிப்பறித்தகதை தானாய்முடிந்ததுவோ
கற்பனையோசொற்பனமோ கன்னியைப்போய்விட்டதினிற்
சொற்பனந்தான்கண்டேனோ சோதனையோதானறியேன்
என்றுபுலம்பி யிறைவன்மனம்வருந்தி

கன்றிவிரகத்தாற் கலங்கினளம்மானை
மன்னன்மயங்குவதை மந்திரியுந்தான்பார்த்தான்
என்னவிருக்குதங்கே யென்னவைதானென்னையோ
சும்மாவிருந்த துரைமகனைதானொருவன்
அம்மாபெருந்துயரக் காளாக்கிவிட்டேனே
பிள்ளையாராகப் பிடித்துவைக்கபிதன்பதுவுந்
சன்னைகுரங்காச் சமைந்ததைபோலாச்சே
என்னவிதமாயிவர்கள் புணர்க்குளொளிந்தார்கள்
கன்னிக்குழச்சடக்கக் காரணந்தான்வேறுண்டோ
மீழிந்தயிர்கடைந்து வெண்ணெய்திரளும்போது
தாழியுடைந்த தனிக்கதையும்போலாச்சே
கன்னிவடிவழகைக் கண்டுவிட்ட காவலன்
தன்றுயிரைபோர்பொருளாய்த் தானினைக்கமாட்டா
என்றபடிவிதமா யிரங்கியமந்திரியும்
மன்றலந்தார்மன்னவனை மனதாயிசக்கேற்றி
வேந்தனேயும்முடைய விருப்பம்போலின்னமிந்த
வந்திரையாமஞ்சகத்தை யின்னதென் றுதாவறித்
எந்தவிதத்திலு மியலுமக்குயாலையிட
சொல்லோனிதைமனதிற் றிண்ணமாய்நம்புமையா
எப்போவேதம்மூர்க்கெழுந்தருளவேணுமென்றான்
அங்கேயம்மன்னவனு மப்படியேயாகவென்றான்
வல்லமந்திரியு மன்னவனுஞ்சேனைகளும்
மெல்லமெல்லப்போனார்கள் விரைநகர்தானேகி
வாயிற்குள்ளேபுகுந்து மன்னவனிடத்தன்னுடைய
சேவகரைத்தரசன் றேகத்தைகண்டுசென்றான்
கானகமுமாமதியுங் காட்டாறுந்தான்கடந்து
சேனையுடன்மன்னவனுஞ் சேர்ந்தார்விஜயநகர்
பொன்றாடிவேந்தன் படிமையிட்டுசிறந்தச
செம்பொன்னாசனமதனக்கூட சேர்ந்திருந்தானம்மானை
பார்த்தவிட்டெங்குமத்தப்பாவையுமண்டபமும்
நீண்டமுமாக திருபுறுங்குந்கோறிடவே
[illegible]வைத்தான் வினைந்தவிர்க்கும் [illegible]



கூரன்மணிமார்பைத் துளைத்துவிட்டான்பூங்கணையால்
தானுமமர்மாளி துளைத்ததுவழியே
தென்றற்புலிபுகுந்து சிந்தைதனைகவேருக்க 38
அந்திமாலைப்பொழுது மாய்புலியுந்தான்காயக்
கொந்துமலர்க்கேமாங் குயிலறிமைகொள்ளைகொள்ள
விரிந்தமலர்மெத்தை வெரும்பிங்கருகுவிடத்
தரித்தமுத்துமாலையெல்லாஞ் சாம்பலாய்த்தானுதிர
பாலுங்கசக்கப் பழமுந்துவர்ப்பாக
மேலுங்கருக மெலிந்தான்விஜயதரன்
மாதாசிதானகொடுத்த மையல்வலைக்குள்ளாகிக்
காதற்கடல்கவிழ்ந்த கப்பலைப்போலாகிவிட்டான்
புகுதிமயங்கிப் புலம்பிபாதவித்து
சித்தங்கலங்கித் தியங்கிறன்தேர்வேந்தன்
இந்தவிதமாவரச னிராமுழுதுந்தானமயங்கி
கந்தமலர்விரியக் கதிரோனுதித்தவுடன
பஞ்சணைவிட்டெழுந்த பார்த்திபனுமக்கனேரம்
கொஞ்சங்கொஞ்சமாகக் கொடுங்காலசசல்மாறியபின்
மன்னவன்பொன்றானத்தில் வந்திருந்துமந்திரியை
அந்நேரந்தன்னிடத்துக் கழைத்துப்புகலலுற்றான்
எனதுமனமயங்கி யென்னறிவையெனதுயிரைத்
தனதுவசப்படுத்திச் சதிசெய்தபெண்கொடியை
கண்டுபிடித்திந்தக் காசினியில்யாரேனுங்
கொண்டுவந்தென்னிடத்திற் கொடுத்துவிடுவாராகில்
என்னுடையசீமையிலிற் பாதிநான்கொடுப்பேன்
பின்னுமவர்க்குப் பெருமையினுமங்கொடுப்பேன்
என்றிந்தபட்டணத்து மெங்குமுள்ளமானகர்க்குஞ்
சென்றுபறையறையச் செய்யுமென்றான்றேர்வேந்தன்
மன்னனுரைத்தபடி மந்திரியும்வள்ளுவர்க்கு
சொன்னான்பறையறைச் சொன்னபடிதானறைந்தார்
அந்தநகருகளும் அடுத்தநகரங்களிலும்
இந்தவிதவள்ளுவரு மிசைந்துபறையடித்தார்
அடித்தபறைகேட்டவுடன் அந்தநகரார்கம்மாகவும்

முடித்தலரி தானவிரை முடிப்பவராய்ச் சென்றிருந்தார்
பின்னுமந்தப் பட்டணத்திற் பிராமணர்கள் தன்குலத்தில்
மன்னுமொரு சண்டாளி மங்கலமில்லா விதவை
அவளுக்கொரு குழந்தை ஆண்பிள்ளை தானுமன்றி
இவளுக்கந்தவர்க்க மதுவறியான் மறியாமல்
பட்டணத்திற் பாசகங்கள் பண்ணிவிந்தப் பிள்ளைதனை
இட்டமுடன் காப்பாற்றி யிவன் வளர்க்கும் நாட்களில்
தாய்க்குமகனுக்குத் தரித்திரத்தாற் சண்டைவந்து
தாக்கினாள் மைந்தன் றலையிலே சட்டுவத்தால்
சட்டுவத்தினாலடிக்கத் தளர்ந்து மிகக்கோபமிஞ்சி
வீட்டுவாயிலிலவன் பேசினான் மாத்திரையாய்
காசிக்குப் போகவென்று கட்டினான் காஷாயம்
தேசமிருந்த மைந்தன் தேசாந்திரியானபின்பு
முண்டச்சியாயிருந்த மூர்க்கப் பிராமணத்தி
அண்டச் சகாயமின்றி யங்கிருக்கு நாளதனில்
பட்டணத்தி லன்னியமார் பணம்படைத்த சொற்கேட்டுக்
கஷ்டமெல்லாந் தீரவித்த காலமென்று தான்மதித்து
கன்னிகையைக் கொண்டுவந்து காவலன்பாற் கொடுத்தால்
மன்னவனுமிவைகளில் வளநாடு யாவரும்
வந்ததென்றுல் தம்முடைய மைந்தவெக்கே போனாலும்
அந்தட்சணமே மயலையடைந்துவந்து
நல்லகுலத்தில் நல்மானபெண்ணெடுத்துச்
செல்வக்கலியாணஞ் செய்தானைத் தப்பார்த்திடலாம்
இன்னமசை வரிசைத்தமொழி நிட்சயத்தைத்
தன்னனைவிலே தனத்தறியவேண்டுமென்று
வேந்தன் சமூகத்தை மேவினான் பார்ப்பனத்தி
வாய்ந்தமதி மன்னவிவன் வந்தகுறிப்பறிந்து
மறையோர்குலத்தவங்கே வந்தவகையென்னவென்றார்.
மறையோனைக் கேட்டுவந்தேன் பார்வேந்தே யென்றுரைத்
தாள், எந்தைபெருமானே யிறையோனே யும்முடைய
சிந்தைபடியந்தத் தெரிவையைநான் கொண்டுவந்தும்
நீங்காமற் பாதிக்கருஞ் செய்திடுங்காணே



சாமியுமாயுமென்று சாற்றினாள் பார்ப்பனத்தி
பார்ப்பனத்தி சொன்னமொழி பார்த்திபனுந்தான் கேட்டு
காற்பருமங் கண்டமயிற் கலைம்போல மனங்களித்து
இன்றுவரையி லிவள்போலொருவர் வந்து
சொன்னாருமில்லையென்று தாரமகனுந்தான் மகிழ்ந்து
வேதகுலமயிலே விரும்பிநான் சொன்னதற்குப்
பேதகந்தானுண்டாமோ பேசகந்தவறுவனோ
ஐயமனதில் அணுவளவும் வேண்டாங்காண்
மையலிலேயென்று தனைவேந்தன் தானுரைக்க
திருவேயனையவந்தச் சேயிழையைக் கட்டியிங்கே
வருவேனென் சிலநாளில் மன்னவனேயென்று சொல்லி
மீண்டாள் பிராமணத்தி வீடுதனில் வந்திருந்து
பூண்டாளொருவிரதம் புத்தியினாலே தேர்ந்து
மதித்தவோர்யுக்திதனை மற்றதுபோர்செய்வனென்று
கதித்தாள் பரபரத்தாள் கைம்மருந்து சேர்ப்பதற்கு
பாஷாணநாவிமுதற் பாவிதஞ்சாயுள்ளதெல்லாங்
கூசாமல்வாங்கிவந்து குழியம்மியிலாட்டி
உருட்டுமுண்டைமாத்திரை போலொட்டுக்குத்தானரைத்
து, இருட்டுமுண்டைசேர்த்து திரட்டினாளுமானை
சேர்த்துத்திரட்டியொரு செப்பில்வைத்து முடிதன்றுய்
பார்த்திடையிற்கட்டிப் பசிக்குகப்பண்டமுடன்
புறப்பட்டாளவ்வீடுவிட்டுப் போனாளவ்வூர்கடந்து
திறப்பட்டசிந்தையினாள் சென்றாள் திசைநோக்கி
மாயமாய்மாதுசென்ற வாவியிருப்பிடத்தை
போய்வந்தபேரிடத்திற் புலன்வெளிவிடாதறிந்தாள்
நாடுகடந்து நகரம்பலகடந்து
காடுமலையுங் கடந்துநடந்துசென்றாள்
கண்டாள் குளக்கரையுங் கனகப்படித்துறையும்
வண்டார்குழலிருந்த மையாமணிமண்டபமுஞ்
சுற்றியெங்கும்பார்த்துவந்து சுவருக்கருகிலொரு
பொற்றருவின் நிழலிலே போயிருந்தாள் பார்ப்பனத்தி
இருந்தாள்மகளை யிறக்கக்கொடுத்தவள்போல்

வாருந்தாரைக்கண்ணீர் வழிந்தாறதுபோற்பெருக
வனதேவதையிருந்து வாய்விட்டழுவதுபோற்
கனதாரைநீர்பெருகக் கதறியழுதலுற்றாள்
என்னரசேஎன்மகனே யென்னுடையகண்மணியே
மன்னர்மனதுக்கிசைந்த மாணிக்கரத்தினமே
வித்தைக்களஞ்சியமே வேதகுலநாயகமே
தித்திக்கும்பழக்கனியே தேனே திரவியமே
பிள்ளைசலிதீர்க்கப் பிறந்தகுலவிளக்கே
வள்ளைக்குழைமின்னார்க்கு வாய்த்தவெழின்மகனே
கட்டித்திரவியமே கற்பகமேசர்க்கரையே
பெட்டிக்குள்வைத்த பெரியநிதிபொக்கிஷமே
என்னோரமுமென் விருதயத்திலேபுதைத்த
பொன்னேமரகதமே பூமன்னர்பூஷணமே
அய்யோமகனேயென் னரும்பொருளேயாரமுதே
பொய்யாநீதானிறந்து போனவிடங்காணேனே
உன்னையிறக்கக்கொடுத்து முயிர்வாழ்ந்துதானிருந்தால்
என்னையுலகுள்ளோ ரெவரும்நகையாரோ
என்னாசைநாயகனை யிறக்கக்கொடுத்துவிட்டும்
உன்னாசையாலல்லவோ உயிர்வைத்துநானிருந்தேன்
என்னைவிட்டுநீயிருந்தா லினியிருக்கஞாயமுண்டோ
உன்னைவிட்டுநானிருந்தா லுலகோர்பழியாரோ
தேவகுமாரருடன் சேர்ந்துவிளையாடுதற்கோ
ஆவலுடன்சென்றுயென் னாசையுள்ளபுத்திரனே
கண்ணாலம்பண்ணியுன்னைக் கண்ணாலேபார்க்குமுன்னே
விண்ணோர்மடந்தையரை மேவுதற்குச்சென்றாயோ
வீட்டுக்கணைவிளக்காக விட்டுன்னையுந்தவிழந்தேன்
பாட்டுக்கிருந்தபெரும் பாவிநானானேனே
முத்துக்கரும்பே முகிழ்விரியாப்பூவரும்பே
தித்திக்கும்புத்தமுதே செல்வச்சிகாமணியே
தந்தைபுருஷனிடத்தைத் தான்பார்க்கவேணுமென்று
சிந்தைதனில்நினைந்து தேகம்விட்டுச்சென்றாயோ
பொய்வாழ்க்கையிந்தப் புவிவாழ்க்கையென்றுணர்ந்தே



மெய்வாழ்க்கையாயிருக்கும் விண்ணுலகில்நீபுகுந்தாய்
இந்தவுலகமுலைக் கிடந்தால்கொடுக்கிலேயோ
அந்தவுலகிலுனைக் காசையுந்தானுண்டாச்சோ
தாயார்க்குச்செய்யுஞ் சடங்குகள்நீசெய்யாமற்
பேயாய்நானிங்கேபிதற்றவிட்டுப்போவாயோ
மைந்தனிருந்து மகிழ்ச்சிதரும்நாளையிலே
பஞ்சையாய்நானிருந்து பாதவிக்கலானேனே
பிள்ளையிருந்துமனம் பேசவரும்நாளினுன்னைக்
கொள்ளைகொடுத்துமனங் குளம்பித்தவித்தேனே
அப்பாமகனே அருமைத்திரவியமே
எப்போதுனைக்காண்பே னென்றேதுயர்தீர்வேன்
என்றுபுலம்பியிருந்தழுதாள்பார்ப்பனத்தி
கன்றிறந்தபாற்பசுபோற் கதறினாள்பார்ப்பனத்தி
மண்ணுமுருக மரமுருகக்கல்லுருக
விண்ணுமுருக விலங்கினமெல்லாமுருக
காடுமுருகிக் கசிந்துகண்ணீர்வடிக்க
மாடுமுருக வரிவேங்கைதானுருக
சோலைக்கிளியுருகத் தோகைமயில்நெஞ்சுருகக்
கோலக்குயிலினங்கள் கூடவெனக்குமுற
காட்டிலுள்ளபன்றி கலைமான்கரடிபுலி
கூட்டமிட்டுநெஞ்சுருகிக் குழைந்துகண்ணீர்வடிக்க
விந்தைவிந்தையாக விளம்பியொப்பாரிசொல்லி
அந்தப்பிராமணத்தி யழுதனள்காணம்மானை
ஒப்பாரிபாவிநானுங் கொப்பரியாமென்று
செப்பரியபாவத்தைச் சேர்ந்திருந்தாளம்மானை
முட்டிவிழுந்து முகத்திலறைந்துகொண்டு
பட்டிப்பிராமணத்தி பரதவித்துத்தானழுதாள்
இந்தப்படியா யிரவுமூன்றுநாளழுதாள்
அந்தப்பொன்மாளிகையி லமர்ந்தபுவனேந்திரனும்
மின்னாருடன்கூடி விளையாடிக்கொண்டிருந்து
சின்னாட்கழிந்தபின்பு சேயிழையைப்பார்த்துரைப்பான்
மாதவமேநாமிந்த மாளிகைக்குள்ளேயிருந்து

போனாகாற்றுக்கோயிலினிலேறி பூமியிலஞ்சற்றேபோல்
வாவிநடுவேயிருக்கும் மண்டபத்திலேயிருந்து
மேவியிவ்வாபாடிவர வெல்லியமேயாறுமென்றான்
—ான்றுமென்றமன்னனுக்கு மங்கைநல்லாளே துரைப்பாள்
பாரிலுள்ளோர்யாரும் பகைத்துவருவார்களங்கே
முன்னே நான்சொன்ன மொழியைக்கேளாமையினால்
என்னவிளைவந்ததங்கே யென்னத்தெரியாதோ
பேசவதல்லதல்ல புலவனேயென்றுசொல்ல
மேலெவர்வந்தாலும்நம்மை வெல்லமுடியுமோ
அப்படிவந்தாலுமவர் விழியிற்காணாமற்
பொய்ப்படிவஞ்சிக்குட் புகுந்துவிடலாமலவோ
பொய்மைவழியறிந்து புகமாட்டாரானதனால்
தையலேவாருமென்று தானழைத்துவந்திருந்தான்
மண்டபத்தில்வந்திருந்த மங்கையையும்மன்னவனையும்
கண்டாள்பிராமணத்தி [illegible]
ஐயா நான்போற்காணுந்தா னென்னவிவந்தவெண்ணி
தயருதித்தான் சமையமென்றுதானினைத்து
முன்னமழுதிலும் மூன்றுமடங்குமேலாய்
பின்னும்பெருமிப் பெருமூச்சுவிட்டழுதாள்
மண்டபத்தில்மங்கையுடன் வந்திருந்தமன்னவன்கே
மென்னடாமாதே முறைமையிலேயழுகிறாள்
கள்ளியழுதசத்தம் காதிலேகேட்டமன்
உள்ளமுருகி யுடலெல்லாம்பதறி
ஆரோயிவளொருத்தி யாருக்குமினைப்பின்றித்
தீராத்துயருடனே யிப்படியழுகிறாள்
அப்போவிவளுக்கோ ராண்பிள்ளைசெத்ததென்று
கும்போமுறைமையென்று கலிக்கலாகிறான்
நான்போயறிந்திங்கே நாடிவாரேனென்றுநாடியவன்
மீண்டபோலேவிழியுளாங்கே [illegible]
[illegible]தையாசும்மா விருக்கவொட்டுதில்லையுமைப்
பார்த்ததிலேபோவார்க்கும் பார்க்கவியலிருக்கும்
அத்தவிசாரிணையாயப்போம்செய்யவேண்டும்



இத்தமட்டும்போதும்நா மேகுவோமெருமென்றான்
வந்தார்கள்முன் சிலபேர் வருவார்களின்னமென்று
சித்தாகுலமுடனே செப்பினையேதேன்மொழியே
யாமென்னவாண்பிள்ளையோ வல்லவோவந்தாலும்
மாவினமோவெங்கைமுன்னே வந்துவெற்றிகொண்டு
செல்லும், சிங்கத்தின்குட்டிகளைச் சிறுபுலியோவென்று
விடும், இங்குநீயஞ்சாதிருவென்றுதான்தேற்றி
மின்னரசையங்கிருத்தி வேந்தன்கரையேறித்
தன்னந்தனியேயழுத தையல்முன்னேசென்றுநின்று
ஆரம்மாவிங்கேயழுதாய்புகலுவாய்
ஊரெங்கிருந்துவந்தா யுற்றதாயாரென்ன
அம்மாநீசும்மா அழகாமற்சொல்லிடென்று
இம்மாநிலத்தரச னிரக்கமாய்கேட்டுநின்றான்
மன்னன்வந்துகேட்டவுடன் வஞ்சப்பிராமணத்தி
கன்னியைக்கொண்டுசென்ற கள்ளனிவனாமிவன்
றன்னைவசப்படுத்தச் சமயமிதுவாகுமென்று
பின்னுமதிகமெத்தப் பிதற்றியழுதனளாள்
ஓயாதழுதவளை யுந்தமனும்பார்த்துரைப்பான்
ஆயாளேவேண்டா மழுகாதேயம்மணியே
அம்மாவுனக்குவந்த ஆபத்தைச்சொல்லிவிடு
சும்மாஅழுகாதே துயரத்தைச்சொல்லிடென்றான்
ஆரையாவென்பாட்டி லழுகிறேனென்னவிதியாற்
பேரையுமென்னூரையும்நீ பேசென்றேன்கேட்குறாய்
சாகத்துணிந்தவர்க்குச் சமுத்திரமுழங்காலளவாம்
ஆகையினாலுன்பேச்சை யான்கேட்கப்போறேனோ
என்றன்மகளிறந்தா னினியானிருப்பேனோ
உன்றன்மொழிகேட்பேனோ வுயிரைவிடப்போறேனாள்
நீபோவுன்பாட்டிலென்று நெஞ்சந்திடுக்கிடவே
மாபாவிசொன்னசொல்லை மன்னனுமன்னமயங்கவெண்
ணைந்தனெப்போதிறந்தான் வந்தவறலாறேது [ணி
சிந்தைகலங்காமற் செப்புவாயம்மணியே

அல்லாருச்சுனா மக்கினியில்வீழ்வனென்று
தன்றேசுற்றமையிற் றுடித்தார்சொற்கேட்கலையோ
ஜீவனைப்போகவனைத் தவிர்த்திருக்கப்போம்போது
மானபரனுமான் வார்த்தையைச்சொல்லலையோ
உனக்குமனஞ்சாக வுறுதிகொண்டுநின்றாலும்
எனக்கதனைச்சற்றே யிரங்குவாயென்றுரைத்தான்
அப்போதவளுரைப்பா ளையாநான்பட்டதுயர்
இப்போதுரைப்பதனா லென்னபயனுண்டாகும்
ஆனாலும்நீயென் னருமைமகன்போலே
தானிருக்கிறபடியால் சாற்றுகிறேனென் றுரைப்பாள்
தாயனும்நானுந்தேடி தான்மகவிலாதிருந்து
ஆயகனைவல்வய லறுபதுக்குமேலாக
பிள்ளையொருவனைநான் பெற்றிருக்குநாளையிலே
கொள்ளைகொண்டான் கூற்றனென்னைக் கொண்டகணவ
னையிழைக், கணவனிறந்தாலுங் கைக்குழவியானபிள்ளை
யிழையிருக்குதென்று தனித்தாயிர்தான்வைத்திருந்
தேன், வளர்த்தேன்மகனை வயதுபதினாறுவரை
உளர்த்தேமகிழ்ந்திருந்தே னப்போல்வாழுகலிநாள்
அவனுக்குபனயன மாகியதுசாஸ்திரமும்
கவனமுடன்வேதமெல்லாங் கற்றவல்லனாகிவிட்டான்
கலியாணஞ்செய்யக் கருதியேவிவ்வருடம்
பலியாமற்போச்சுதையா பாதகத்திபுண்ணமெல்லாம்
அந்தநகரத்தி லனேகருமயிருக்க
மைந்தனுயிர்க்குமட்டும் வந்ததோபாவியிவள்
பிள்ளையிறந்தவுடன் பேருலகில்காரிருக்க
வள்ளவுத்ராமமதியா மிறக்கத்துணிந்தவந்தேன்
இந்தக்குளத்தி லிறங்கிநான்சாவதற்கு
வந்தேனினிநீ மறுத்துரைக்கவேண்டாங்காண்
செத்தாலல்லாலெனக்குத் தீவினையுந்தீராது
வைத்தேயினியுயிரை வாரேனென்றேயுரைத்தாள்
பார்ப்பாத்திசொன்ன பரிதவிப்பெல்லாங்கேட்டுக்
காப்பாற்றுமன்னன் கருத்துருகியேதுசொல்வான்



னென்னைப்போலுன்மகனா யிருப்பானென்றுமெனக்கு
அன்னையைப்போல்வந்தா யழுகையினிவேண்டாங்காண்
இறந்தாருடனிறந்தா ரிவ்வுலகில்யாருமில்லை
அறந்தாங்கும்பெண்பிள்ளை அனைவர்துணையானோ
தானேயுனக்குமொரு நல்லமகனம்மா நீ
தாயேயெனக்குமொரு தாயாகவந்திடென்றுன்
வந்திருப்பாயென்றபுவி மன்னனுரைத்திடவே
தந்திரக்காரியந்தச் சண்டாளிசம்மதித்தாள்
அப்பாதுரையேபொன் னருமைத்திருமகனே
பொற்பாகநீயிருந்தா யுன்னுயிரைதான்மறக்கச்
சற்றுந்துணியவில்லை சாதியில்நான்வேதகுலம்
மற்றுங்குலமெதுவோ வாழுமிடமெதுவோ
எனக்குத்தெரியவில்லை யென்றுபார்த்துரைப்பாள்
உனக்குத்தெரியவுரைப்பேன் நான்க்ஷத்திரியன்
என்னுடன்நீவந்தா லிருக்குமிடங்கண்டிடலாம்
உன்னைத்தவற வொருபோதும்விட்டுவிடேன்
சும்மாவாவென்று துரைமகனுந்தானுரைக்கப்
பம்மாத்துக்காரியந்தப் பாதகத்தியேதுரைப்பாள்
என்னையாதரித்திடவே யென்றழைக்கிறாயுனது
மனையாட்டியவளுடைய மனதுகாணெப்படியோ
என்னையவளறியாள் யானவளைத்தானறியேன்
உன்னைநம்பிவந்தாலு முருக்கமுண்டாமோ
ஆரோபிராமணத்தி யறுதிமுண்டையிங்கிவளை
நீரோணமைத்துவந்தீர் திரிகைத்துறத்துமென்றன்
நீயதற்கென்னசெய்வாய் நித்தமையாவென்னையவள்
வாய்மதங்கள்பேசிடிலென் மனஞ்சகிக்கமாட்டாது
ஆகையினாலுன்னுடனே யானும்வரமாட்டேன்
சாகுவதேதிட்டமங்காண் தம்பியெனவுரைத்தாள்
என்னடியம்மாநீ யிறந்திடவேதுணிந்தாய்
சொன்னதைத்தட்டாதே யென்சொந்தமனையாட்டியுன்னைக்
கண்டால்மகிழ்வாளென் கருத்தின்படியேயவளும்
கொண்டுவருவாளுனக்கோர் குற்றமும்வாராதம்மா

வாமொல் லாடல் கூட்டி வாவிக்குள்ளேயிறங்கித்
தேவியிருக்கவிடஞ் சேர்த்தான் காணம்மானை
மோதிரத்தை நீட்டுவதால் முன்னிரவிலருமைதப்
பாதைக்கிதே தென்று பாதகத்திபார்த்திருந்தாள்
மண்டபத்தில் வந்திருந்து மங்கையிட பார்ப்பினியை
கண்டுகொண்டே தோழிகளாய்க் கருகவலைத்தேற்றியிங்கே
கூட்டிவந்த நிருகக் கூறினான் பார்வேந்தன்
வாட்டமுடன் ஞானமாது மெல்லாம் கேட்டாள்
வாளகலா நீலம் வளஞ்சேர் கடாரமதாந்
தானதித் துதிதோள்ளுறுந் சமத்துள்ளே ராஜனும்
வஞ்சகியைப் மிஞ்சும் மடவார்மனை நிலையைக்
கொஞ்சமாறும் குறித்தறியார் குருமண்டோ
ஆனதினால் முன்பின் னறியா திருக்கவவள்
வளமைத் துவத்தி சிவனா லிங்காவதென்ன
ஆர்க்குந் தெரியாமல் யாமிருக்கும் மாளிகையை
பார்க்குளிவள் யார்க்கும் பறைபோன்ட வென்சொலலாம்
விற்பனத் திலேசிறந்த வேந்தேயென் றேந்திழையாள்
சற்பனை பாவையிலே சாற்றினாள் மன்னனுக்கு
இந்தவிருந்தை யிவளாவனம் தாம்
வந்தாவிடுமென்று மதிக்கிறீர் மாதரசே
அப்பமொருவருக்குக் கொடர்ந்துவருமாலைதைத்
தவபலத்தினாலே சுடுத்திடவல்லாருமரோ
ஆர்க்கும் வருமின்பமும்ப மைரோயன்டவந்தினிலாத்
பார்க்குளொவருக்கும் படிந்துவிட்டாற்போய்விடுமோ
மகதத்துடிக்கவும்பி மொய்ந்தாரென்றுவருண்டோ
பேருவாகாவிலித்தப் பேதையன்றியாராதோ
காளிசெய்யுந் சமையம் வருத்தமதை
… யாற்றலாமென் றழின்னும்
கருப்பமாயிருக்கும் காரணத்தினால் முனமேல்
… பெண்ணேனையும் வேறாவென்றுமென்னரி
… தித் தங்கோயிவாரத வேண்டியவனாய்தமக்கு
… ன்றிவலைத் தேற்றினாள் கட்டிவத்தேய



ஆதலினால் நமக்கோ ராபத்துவாராது
பாதகமுமில்லையென்றான் பைந்தொடியுஞ்சம்மதித்தாள்
தாயில்லாவெங்களுக்கோர் தாயாயிருந்திடம்மா
நீயில்லாவிடு நிறையாதொருநாளும்
கைவேலைமாற்றிபென்னைக் காப்பாற்றிகொண்டிருக்கார
செய்வேலையே துணையோர் தெய்வம்போல்வைத்திருப்
ஆபாளேயென்றவ் கனேகவுபசாரமெல்லாம் (பேன்
வையாரச்சொல்லி மகிழ்ந்தாரிருவர்களும்
அந்தோசுடுநெருப்பை யள்ளிமடிசேலை
முந்தானையிலேமுடிந்துவைத் தாங்கொள்வாரதுபோல்
சண்டாளமுண்டையினை தாயென்றுதானினைத்து [கொ
கொண்டாடிக்கொண்டுடனே கூட்டிப்போய்வைத்திருந்
துன்னமுதலாமுணவை யாசேரென்னையன்றி
மின்னிவள்கையால் பொசிக்கவேண்டாமோர்நாளுமென்
றான், மாளிகைக்குக்கூட்டிப்போய் வைத்திருந்தார் பார்ப்
பினியை, வேளைவருமென்று வீகையும்பார்த்திருந்தா
ள், பாங்காய்ச்சமையலெல்லாம் பண்ணியிருவருக்குந்
திங்கானதில்லாமற் செய்பவள்போற்செய்துவந்தாள்
மன்னவனிவளன்னம் வளமாய்ச் சமைக்க தாலம்
கன்னிபவளன்றியிவள் கையிலன்னம்வாங்கியுண்ணான்
இந்தப்படியாயிவரிருக்குநாளையிலே
அந்தப்பழிகாரிசெய்த அநியாயமென்னசொல்லுவேன்
தரைகாவலனொருநாட் டயிலமிட்டுத்தான்முழுகி
விரைவாயுடல்துடைத்து மெய்யானபூசைசெய்து
போஜனசாலைதனிற் போயிருந்தானப்போது
வாசமலர்க்குழலாள் மற்றுமொரு கட்டிடத்தில்
ஆனசமையமதை யறிந்துகொண்டாள் பார்ப்பாத்தி
வந்தாளரசனிடம் மைந்தனேமங்கைநல்லாள்
கொந்தார்குழலூர்த்திக்கொண்டு வரச்செல்லுமின்னும்
மாதுவருமளவுக்கும் வாயடைத்திருந்தால்
சாதம் படைப்பேனான் சாப்பிடுவென்றுரைத்தாள்
மா… வாட்டுமென்றான் மன்னவனுந்தானுரைக்கப்

பங்கயக்கை மங்கைவந்து படைத்தபின்பு சாப்பிடலாம்
வாயுவுங்கொள்ளாமலிங்கே வைத்தாசமாறுவுக்
தாயுனக்குநான்கொடுப்பேன் சாப்பிடையாமென்றுரைத்
தாள், சங்கரனுமையைத் தனைமெடுத்தாம் ஞானமயாம்
மங்கையுடன் காவுறைந்தான் மாலென்றவரசனங்கோர்
விதிவலியையார்தான் விலக்கிவல்லாராதலினாற்
மதிமிகுந்தவேந்தனவன் வார்த்தைக்குச்சரிமதித்தான்
தங்கசமயமெனறு நவந்தாள் மடப்பவள்ளியில் [தான்
வல்லியிடைக்குள்ளொளித்து வைத்தநஞ்சு செப்பெடுத்
கரைத்தாளங்கோர் பாத்திரத்திற் காரமுள்ளதென்றவளைக்
குலைத்தாள்குடியென் றுடனே கொடுத்துவிட்டாள்
குடிகேடியாய்க் கொடுத்தவிஷபானத்தைக்
குடிகேடென்றென்றுணரா குடித்தான் புவனேந்திரன்
வாங்கிக்குடித்தான் மருகாசினிவிட்டதுபோல
இங்கரும்புமேல்வந்து முள்ளேறுபூட்டி
நெஞ்சடைத்துக்கொள்ள நினைவுதடுமாறிக்கண்
பஞ்சடைபதாலும் பசையற்றுத்தன்வயமக்
கண்ணுஞ்சுழலக் கருத்தழிதுமயங்கிப்
பெண்ணேயென்றோர் வார்த்தை பெருங்குரலதாய் கூவி
படுத்தான்றடிவேந்தன் மாயவிபார்ப்பனத்தி
முடித்தகுதமேன்மையென்று மறுகவிடாமலிங்கே
கணையாழி தன்னைக் கழற்றிக்கையிலிட்டாள்
இணையாவிபார்த்தாடமிங்கெங் இருந்தாள்பார்ப்பனத்தி
அந்தச்சமயமதிலன்று அரசன்மொழிகேட்டோடி
வந்துநின்றமர்ந்தாள் மடிந்தபுவனேந்திரனை
என்னடியப்பா இரக்கமற்றபோக்கென்று
பண்ணடியென்று பதைத்தாள் துடிதுடித்தாள்
மூக்கிலே கையைவைத்தாள் மூச்சுவரக்காணாள்
நாக்கில் குறிப்பார்த்தாள் நாடிபிடித்துப்பார்த்தாள்
போனதுவுயிரென்று புத்திபிறழ்ந்தயர்ந்தாள்
நானினியென்னசெய்வேனென்று நயங்களெல்லாமென்றுடன்
மூட்டிவிருந்தாய் முகத்திலறைந்துகொண்டாள்



கட்டியணைத்தாளரசன் கன்னத்திற்கன்னம்வைத்தாள்
கண்ணோமழையாய்வந்தரியான்வந்துசேருமுன்னே
கண்ணேவிழியாமற் கயிலாசஞ்சேர்ந்தீரோ
மனமும்வெறுப்பாச்சோ வாழ்ந்துவெறுத்தாச்சோ
தினமும்மெனக்கலந்த சிந்தையும்வேறாச்சோ
பூலோகரம்பையிந்திரப் பூவையினுஞ்சிறந்தாள்
மேலோகரம்பையென்று மேவிவரச்சென்றீரோ
ஐந்துதலைநாகத்தால் வதைந்தான்பட்டதெல்லாம்
வந்துவிலக்கியுய்ந்த மன்னவர்சிகாமணியே
பூவுலகையாண்டமட்டும்போதுமென்றுதாவரினந்துக்
தேவருலகத்தரசு செய்வதற்குச்சென்றீரோ
இந்நாள்சிறியன் இறப்பதறியாமல்
மந்திரியைத்தேடி மயங்கினீர்மன்னவனே
பொன்னுந்துரையே புரவலர்சிகாமணியே
மன்னர்பெருமானே மறந்தென்கைவிட்டீரோ
காயமாய்நீரிருக்கக் கண்ணேயொருநாளும்
மாயமாய்நானுனக்கு வந்தமனையென்ன
பொய்யானதேசம்விட்டுப் போகலையேயென்ஜீவன்
என்றுபுலம்பியிருந்தழுதாள் யேந்திழையாள்
ஒன்றுமறியாதவர்போ லுடனழுதாள்பார்ப்பாத்தி
அப்போதவளும் அழுகையினைத்தான்மாற்றிக்
கொப்போடுலாவும்கிளி கோதைவாய்பொத்தியின்னும்
மங்கையழுகுரலை மாற்றிக்கண்ணீர்துடைத்துக்
கொங்கைகுடைந்தவிழ்ந்த குழலையள்ளித்தான்முடித்து
மாதேயுனக்கு வருத்தமினிவேண்டாங்காண்
ஈதோவுனதழகுக் கிசைந்தவொருமாப்பிள்ளையைத்
தேடிதருவனுன் ஜெகத்திலுக்கெல்லாமரசாய்
வாடிக்கருத்து மயங்காதேயாலரசே
இந்தப்புருடன்போனாலினியுனக்குயோரெண்மடங்காய்
அந்தமுளநாயகனை யான்சேர்த்துவைத்திடுவேன்
அருந்ததியைப்போல அறிவுடையவளுக்கு
குறியின்னதென்றறியா யுற்றபோருவரில்லை

வழிக்குத் துணையாக வைத்தவனைத் தானும் தம்பிப்
பழிக்கேதுவாயிருந்த பட்சத்தைவிட்டுவிடு
சிந்தைமயங்காதே தேம்பியழுகாதே
வந்திடுவா னென்கூட வையகமெல்லாம் புகழ்ப்போன்
விஜயநகர்தான்கரும் வேந்தன் விஜயதரன்
அசையாமணிகட்டி யாடுமணிவாசலினுள்
கருப்புவில்லைப்பூட்டி வரும் காமனிறுங்கட்டமகன்
விருப்புடன் மேன்வைத்து மெலிந்து வழிபார்த்திருந்தா
ன், என்றுமனக்கவலை யிசைந்த மணவாளனங்கே
சென்றிடுவோ மல்லவென்று செப்புவாயாகிலுன்னை
விட்டுவிட்டுப்போயேனோ விருந்தாப்பயலே தம்பிக்
கெட்டுப்போகாதே இருக்குபுடித்தவள்போல்
வண்டிபுலம்புகிறு யென்வடிதாளிங்குவர
வேண்டியது முன் சமையல் வேலையென்றேயிருந்தாய்
காவலனைக்கொன்றுனையுங் கைப்பிடியாகப்பிடித்து
போவதற்கல்லவோ புத்தியுடன் வந்தேனென்
சேதிதெரியாதோ வென் சித்தம்போலாச்சு துன்னைப்
பூவலத்தில் தான்கொண்டுபோகாமற்போவேனோ, மாட்
டேனென்பாயாகி லுன்றன் மண்டையிலே கல்லெடுத்துப்
போட்டுன் னுயிரையுமிப்போதே தான்வாங்கிடுவேன்
பாரடியென்றுள் கடித்தாள் பல்லை நறநறென்றே
சேரழிவாள் செய்த துன்பஞ் செப்பவெவரால் முடியும்
மாயபடாலின்றியங்கே வருகிறுயோ விலையோ
கூறடியென்று சொல்லி கோபித்தாள் சண்டாளி
பாதகத்திசொன்ன பழமொழியெல்லாங்கேட்டு
மாதகத்திதொந்துடல் வாருள் நினைக்கலுற்றாள்
சண்டாளிசெய்த சதியென்றியேறுமில்லை
பண்டே நான்சொன்னதெல்லாம் பாராசன்கேட்கவில்லை
வந்தவனென் நாயகனை வஞ்சனையாற் கொன்றுவிட்டாள்
சந்தேகமில்லையினித் தவறியபின்னென்செயலாம்
மன்னவனைக்கொன்றெனக்குமாப்பிளையுந்தேடிவிட்டாள்
இன்னமுனைக்கொன்றிடுவே னென்றுகடுக்கடுத்திருந்தாள்



இப்போதிவள்விரோதமெப்படியாகச்சொல்
சொற்போல் நடக்கத் துணிந்ததுபோற்செய்வமென்று
மந்திரிபொன்கூட வந்தானவனிறந்து
சித்தம்புயிர்பிழைக்கச் சொரூபம்விட்டெடுத்திருந்தான்
என்றுதமக்கோர் தாளிசைந்த துண்டேபோனகணவன்
சென்றிடுவோம் நாமங்கே தெய்வபலமிருந்தால்
வருவாரென்றேயினி மன்னவனைத்தேடிவந்தால்
தேர்வேனவனையெங்கே சேர்த்துவிலகத்திரத்தால்
மந்திரிவந்தாலவனும் மன்னனுயிர்பிழைத்துத்
தந்திரமாய்செய்தவனைத் தானேபெழுப்பிடலாம்
அப்படிக்கில்லாதுவிட்டாலவிதனைமாய்த்திடலாம்
எப்படிக்கு மேல்பூமிக்கேகுவது காரியந்தான்
ஆனதினாலிந்த அரசழிவாள்சொற்படியே
போகுவது நல்லதென்று புத்தியினால் நிச்சயித்தாள்
சாய்ந்தகணவனையும் மார்போடெடுத்தணைத்துச்
சேர்த்தவொருபெட்டகத்திற் சேர்த்தெண்ணைதானூற்றி
வாடிபுடலம் வருங்காதிருக்கும்வண்ணம் (விட்டு
போடுஞ்சரக்கையெல்லாம் போட்டுவைத்துப் பத்திரமாய்
பூட்டியந்தப்பெட்டிதனைப் பொன்னகரிக்குள்ளே சேர்
த்து, மீட்டுங்கதவிற் றெறிப்பூட்டுப்பூட்டிவைத்தாள்
வைத்துவெளியில்வந்து மாபாவியைப்பார்த்துச்
சித்தங்கலங்கித் தியங்கிப்புவனேது சொல்வாள்
உன்னைவிடவெனக்கினி உதவிசெய்வாரார்பில்லை
அன்னைபோலென்னையினி யாதரிக்கவே ணுமம்மா
உன்வார்த்தைதன்னை யொருபோதும் தான்கடவேன்
என்வார்த்தைதட்டாதென்னைக்காப்பதுன்கடனும்
இந்தாள்வரையி லிவனுடனே நான்கூடித்
தன்னலே பட்ட மனச்சஞ்சலங்கள் மெத்தவுண்டு
உற்றுறவில்லாதொருவர் துணையுமின்றிச்
சற்றுமிலுமெனக்கோர் தயிரியஞ்செய்வாருமின்றி
கட்டாவிப்பாழிடத்திற் புகுந்துகொண்டிருந்தேன்

அம்மா நீவந்ததல்லவோ அவத்தையெல்லாம் நீக்கினவந்
தாய், ஆகையினால்நீ தானுரைத்தவிடம்போய்ச்சேர்வோ
ம், சேகாமாய்வாவென்று செப்பினாளம்மானை
ளாயென்றவளுரைத்த வார்த்தைதனைக்கேட்டவுடன்
கோவென்றழுங்குரல் கூட்டி முடிந்ததென்று
மனதுமிகமகிழ்ந்து மாளிகையினுட்புகுந்து
கனகரூபாவுங் கழித்தநகைகளையும்
இன்னமவள்மனதுக் கிச்சையுண்டானதெல்லாம்
பொன்னறைகட்குள்ளே புகுந்துபுகுத்தெடுத்து
புத்திமகிழ்ந்து புறப்பட்டாள்சண்டாளி
மைத்தொடியைப்பின்னடக்கிப்படியேறித்தானடந்தாள்
நடந்தார்வெகுதூரம் நாலைந்துகாதவழிகடந்த
கடந்தாரவள்விரலிற் கணையாழிகண்டவுடன்
வாவிப்புனலிலக வத்தாக்கரையேறி
மேவிக்கணையாழி விசேடத்தையுமறிந்தாள்
மாதரசைகூட்டி வழிநடந்தாள்பார்ப்பனத்தி
பாதையெல்லாங்கடந்து பதிகள்பலகடந்து
அந்தவிஜயநகர்க் கருகாகவந்தவுடன்
வந்தோர்சிலரை வரவழைத்தங்கேயுரைப்பாள்
போனாள்பிராமணத்தி புனல்வாவிக்குள்ளிருந்த
மானைக்கூட்டியிங்கே வந்தாளென்றோர்தொடியில்
வேந்தனுக்குநீர்போய் விளம்புவீரிச்சணத்தில்
மெய்வந்தமன்னனுமக்கு வரிசைகொடுக்குமென்றாள்
அந்தமொழிதன்னைக்கேட் டவர்கள்விரைவாயோடிச்
சிந்தைமகிழ்ந்துநின்று செப்பினார்மன்னனுக்கு
பெரும்பசியாளருக்கு விரும்பியன்னமிட்டதுபோல்
அருகுமுயிர்பிழைக்கத் தமிர்தவிழ்தஞ்செய்ததுபோல்
மன்னன்செவியில் மனமகிழ்ச்சியுண்டாக, சொன்னார்கள்
சோபனங்காண் சோபனங்காணென்றுசொல்லிச்
சொன்னமொழிகேட்டவுடன் தோள்கள்பூரித்ததனை[வே
மின்னுந்தொன்றுஞ் சொல்லுமவளெங்கேயெங்கேயென
வந்துசொன்னபேர்க்குடனே வரிசைமிகக்கொடுத்து



மந்திரியையங்கே வரவழைத்துத்தானுரைப்பான்
விருதுபலவுடனே மின்னாட்கெதிரேபோய்
கருதியழைத்துவரக் கட்டளையிட்டானரசன்
மந்திரியங்கேயெழுந்து வாத்தியமெல்லாமுழங்கச்
சிந்தைமகிழ்ந்துபல சேனைபடைநெருங்கக்
கொடிகள்சுருட்டி குடைகள்பலநெருங்கப்
பிடியானைபெண்பரிகள் பெண்சேனைசூழ்ந்துவர
ஊழியப்பெண்கள் ஒருகோடிபேர்கள்வரச்
சூழ்ந்தானுபதியாந் தோகையர்கண்முன்னடக்க
மங்கைக்கரசியிடம் வந்தெதிரேகண்டுகொண்டு
தங்கத்தினாலமைத்த தண்டிகையின்மேலேற்றி
சுற்றுந்திரைபோட்டுத் தோகையர்கள்சூழ்ந்துவரப்
பற்றிவருந்தானுபதிபெண்கள்முன்னடக்க
கொண்டுவந்துசேர்த்தார்கள் கோமானரண்மனையில்
தண்டிகைவிட்டிறங்கித் தவிர்ந்தோரரண்மனையில்
மின்னரசிதான்புகுந்து வீற்றிருந்தாளம்மானை
பொன்னரசிபேரழகைப் பூவையரெல்லாம்புகழ்ந்தார்
வேலைக்கமைந்தசில மெல்லியரையேற்படுத்திச்
சீலச்சமையலுக்குந் திட்டப்படுத்திவிட்டான்
செய்யுஞ்சிறப்பையெல்லாஞ் செய்தந்தச்சேயிழைக்கு
வையகத்துவேந்தன் மகிழ்ந்திருக்கும்வேளைதனில்
மானரசைக்கொண்டுவந்த வல்லபிராமணத்தி
தானேயரசன் சமுகத்தைவந்துகண்டாள்
மின்னாளைக்கண்டவுடன் வேந்தன்மனமகிழ்ந்து
சொன்னானேகந்துதியானவார்த்தையெல்லாம்
மங்கையங்கேசென்றதுவும் மாதரசைக்கண்டதுவும்
சங்கதிகளொன்றுந் தவறாமலேயுரைத்தாள்
வேந்தனதைக்கேட்டு மிகவும்மனமகிழ்ந்து
பாந்தமுடனவட்குப் பட்சமாய்வார்த்தைசொல்லி
கனகாபரணங் கழித்தபொன்னுடையவள்
மனதாசைதீர வரிசையெல்லாங்கொடுத்து
என்சீமையிற்பாதி யுரைத்தபடி தான்கொடுத்தேன்

மின்சேதிகளிருந்தாற் பேசென்றுதானுரைத்தான்
மன்னர்பெருமானேயென் மைந்தனிங்குவந்தவுடன்
உன்னருளாற்சொன்னபடி யுன்சிறைப்பாடுகொளவேண்
பார்த்திடவேயென்மகன்மேற் பக்ஷம்வைக்கவேணுமெ
ன்றான், தோத்திரங்கள்சொல்லியந்தத் துட்டனுமட்டை
வீடுசென்றான், அன்றிரவு சேரனடைந்துவிட்டான்மேற்
குறிக்கில், மன்றலந்தரான்விசய மன்னவனங்கேதுசெய்
தான், மாதாவைவீற்றிருக்கும் மாளிகைக்கேசெல்வந்து
கோதையர்க்குத்தான்வந்த குறிப்புரைத்துவிட்டா
தாயுருகுமன்னோபோய்ச் சாற்றினார்தையாளுக்கு (ன்
பேதையுமப்போது பிரியமுள்ளாள்சொற்கேட்டு
மன்னவனுங்கோர்புரத்தில் மணியாசனம்விரித்து
தன்னிருப்புக்கடே தனித்துத்திரைபோட்டு
மன்னவனையிங்கே வரவழைத்திவ்வாசனத்தில்
தங்கியிருக்கும்படிக்குச் சொல்லுமென்றாள்தாயர்க்கு
தாயருமப்படியே தேர்வேந்தனையழைத்து
மாதுசொன்னபடி வைத்தார்களாசனத்திலப்
பத்திருந்தமன்னன் வனிதைக்குள்ளேயிருந்த
மைத்தொடிமையைநோக்கிப் பகவான்சொல்வார்த்தை
அன்னமேமின்னார்க்கரசேபாக்குமவம்
இன்னமிரங்கிலையோ இடங்கொடுக்கமாட்டயோ
மாரன்கணைதாக்க வழியாகவென்னுளத்தில்
நீரும்புகுந்துகொண்டு நிதங்கரிக்கநீதியதோ
உள்ளபடியேயென் னுயிருசாகுவதை
மெள்ளத்திரையெடுத்து விட்டாலுமத்திடமாம்
காமனென்னுமிரைக் கைப்பற்றிக்கொள்ளுமன்னே
தாமதஞ்செய்யாது தழுவச்சமயமென்றான்
வேந்தனுரைத்தமொழி மெல்லிநல்லாளுங்கேட்டுத்
காத்திரமடக்கிக் கனிவானவார்த்தைசொல்வாள்
மன்னவனேயுமுடைய மனப்போல்நடவாமற்
பின்னொருவர்க்கிச்சைவைத்தோ பிரியமுடனிங்குவந்தே
வலைக்குளகப்பட்டுவிட்ட மான்கடந்துபோய்விடுமோ



நிலைக்கிணற்றுநீரைவெள்ளம் நேரேகொண்டோடிடுமோ
அழகுமணவாளனுமை யல்லாமல்வேறுண்டோ
பழகுவதும்மோடல்லாது பாரிலினியாருமில்லை
உமக்குத்தான்பாரியென்ப துண்மையிதற்கையமில்லை
தமைக்கலந்துநான்மருவுஞ் சமயமதைநானுரைப்பே
மன்னுக்கிசைந்தமணவாள னெனக்குக்கிடைத்தால் [ன
வினவுங்கெளரி விரதமிருப்பமென்று
அந்நாட்பிரார்த்தனைபொன் றாடியேனுஞ்செய்திருந்தே
இந்தானதுபோ லெனக்குநீர்தான்கிடைத்தீர் (ன்
ஆனதனால்தானாற்பத் தைந்துவரையவிரதந்
தானிருந்துபின்பு தழுவியுமைச்சேர்த்திடவே
இந்தவரம்நீ ரெனக்குத்தரவேண்டும்
அந்தவிரதத்துக் கமைந்ததெல்லாந்தான்வேண்டும்
மானநகருக்கோர்புறத்தில் மண்டபமொன்றுகட்டி
நானிருக்கவேணுமதில் நாட்டிலுள்ளோர்யாரேனுந்
எந்தவூர்வந்தாலும் என்றுமருதர்படைக்குஞ்
சத்திரங்கட்டியன்ன தானஞ்செய்யவேண்டும்
வந்தவர்க்கெல்லாம்பூரி மாறாமலேகொடுத்துச்
சிந்தைமகிழச் செய்யவேண்டும்மன்னவனே
என்றந்தமின்னா ளிசைத்ததெல்லாங்கேட்டரசன்
கன்றியிருந்தமனக் கலக்கந்தெளிவாகிச்
சேயிழையாள்சொன்னபடி செய்யவென்றுமந்திரிக்கு
நேயமுடனே நிகழ்த்தினனம்மானை
மந்திரியுஞ்சொன்ன வகைப்படியெல்லாமுடித்தான்
சுந்தமலரோதியந்த மின்னிமடம்புகுந்தாள்
சத்திரங்கட்டியன்ன தானம்நடத்திவந்தார்
நித்தியதானம்பூரி நிறைவேற்றிவந்தார்கள்
பூரிகொடுத்துவரும் புறக்காரியஸ்தர்களைக் (ன்
காரிகையங்கழைத்துக் கருத்தாயோர்வார்த்தைசொல்வா
இருந்துவந்தபேரி லிருவர்களிலொருவர் (ன்
வரித்ததுண்டோ வென்றவர்க்கு பேசிக்கொடுங்களந்த
பேர்த்தையுதுகேட்டவரும் பயந்திபுவ்வாறுமுகந்தை

பார்த்தாரவர்களைப்பற்றி யிங்கேவாறுமென்றான்
அப்படியேசொல்லி யவர்கள்கொடுத்துவந்தார்
எப்படியும்பார்ப்போமென்றிவள் விரதம்பூண்டிருந்தாள்
விஜயபுரமன்னவனும் மேவுந்தன்மந்திரிக்கு
இசையுங்கலியாணமதற் கேற்றமுயற்சிசெய்து
பதிவாழரசருக்கும் பார்க்கமணவோலைவிட்டு
விதவிதமாய்ப்பட்டணத்தை விளங்கவலங்கரிக்க
உத்தாரஞ்செய்தபடி யொப்பியேமந்திரியும்
எத்திசைக்குமோலைகளை மேவினனம்மானை
வேந்தனும்நாட்பார்த்து விரலெண்ணிக்கொண்டிருந்
தான், பாந்தமகன்வரவு பார்த்திருந்தாள்பார்ப்பாத்தி

மந்திரிகுமாரன் யாத்திரை போய்வருகுதல்.

இந்தவிதமாக விவரிருக்கமுன்போன
மந்திரியின்மைந்தன் வரலாறினியுரைப்பேன்
அப்புவியிற்காசிநதி யாத்திரைதான்செய்யவென்று
செய்புகடுக்கனிட்டுச் செங்காவித்துகடுத்தி
கழுத்திலுத்திராட்சக் கண்டியுந்தான்புனைந்து
பழுத்தபட்டுவெண்ணீற்றுப் பையும்மடியில்வைத்து
பார்த்திபன்மேல்வைத்திருக்கும் பட்சமறவாமல்
தீர்த்தங்களாடிச் சிவஸ்தலமெல்லாம்பணிந்து
காசிநகரடைந்து கங்கைநதிநீராடிப்
பூசுரரைக்கட்டமிட்டுப் புத்திசிகாமணியும்
சோதிடத்திலிதுவே துயர்நீங்குங்காலமென்று
மாதிடத்திற்றிரும்பி வந்தான்வழிநோக்கி
மன்னவனைநான்பிரிந்து வந்தவளநாட்டினுக்கே
இன்னமுநான்சென்றாலுங் கேதுவுந்தெரியுமென்று
வந்ததிசைநோக்கியந்த மந்திரியுந்தான்திரும்பிக்
காந்தமிருங்காசிநீர்க் காவடியுந்தோளேந்திக்
காடுகடந்து கனத்தமலைகடந்து
நாடுகடந்து நகரம்பலதேடி
சேர்ந்தான்விஜயநகர்ச் சேர்க்கையுள்ளதேசமதில்
ஓர்ந்தோர்ந்துவந்தாலங் குள்ளவிசேடமெல்லாந்



ன்னுடையசேதியொன்றுந் தட்டுபடாமையினால்
தின்னமறிவோமென் றெழுந்துநடந்துவந்தான்
மந்திரியுமங்கே வருகின்றவேளைதனில்
ரந்தத்திசைவழியு மிருந்துவருவோரெவரும்
ரானேவிஜயநகர் தனக்குப்போம்பாதைவழி
போனொருமுகமாய்ப் போனவரைத்தான்பார்த்தான்
பலோபலவழிவிட் டெல்லோருமோர்வழியாய்
ஆகாரமொன்றையெண்ணி யதிவிரைவாய்ச்செல்லுகிறீர்
நாமுமிவருடனே நண்ணிவிசேடமெல்லாந்
தாமேதெரியுமென்று சார்ந்தான்கூட்டமதில்
விரைவாகச்செல்லுகிறீர் விசேடமுண்டோவென்றுரைத்
தான், அவரிலிவனுக்கொருவனன்பாயெடுத்துரைப்பான்
புவியதனிலேசிறந்த பூலோகரம்பையெனும்
மின்னாளைக்கல்யாணம் விஜயதரன்செய்வதற்கு
இன்னாளிற்கொண்டுவந்தே யிருத்தியிருக்கின்றாராம்
அந்தமின்னாளோர்விரத மனுசரித்துக்கொண்டாளாம்
வந்தவரெல்லார்க்குமன்னன் வழங்கும்படியாயோர்
சத்திரமுங்கட்டியன்ன தானம்நடக்கிறதாம்
நித்தநித்தம்பூரி நிதியெவர்க்கும்நல்குவராம்
அந்தவிசேஷத்தை யறிவதற்குச்சத்திரத்தில்
வந்துபுசித்துபூரி வாங்குதற்குமாகவெண்ணிச்
செல்கின்றோங்காணெவருஞ் சேர்ந்துநீரெம்முடனே
நில்லாமல்வாருமென்று நிகழ்த்தினனம்மானை
அன்றவன்சொன்னமொழி யவ்வளவுந்தான்கேட்டான்
இன்றோர்புதுமையிதி லேதாமிருக்குமென்று
சந்தேகமாகியின்னந் தானறியவேணுமென்று
வந்தான்சிலதூரம் மாநகர்க்குச்சமீபமதாய்
அந்நகருக் கடுத்துவரும்பாதையினில்
வந்துசெல்லும்போதுசில வழிபோக்கரைப்பார்த்து
மேதினியோர்போற்றும் விஜயநகரந்தன்னிலே
ஏதும்விசேடமுண்டோ இயம்புமெனத்தானுரைப்பான்
விஜயநகர்வேந்தனொரு மின்னாளைக்கொண்டுவந்து





வசமாக்கவென்றுகல்வி மாடத்தில்வைத்தனராம்
மாறுவிருந்தவிடம் வாவிக்குணமண்டபமாம்
ஆனாலவனுக் காசனொருவனுண்டாம்
மன்னவனைவஞ்சித்து மாதைவெளியேற்றித்
தன்னுடைப்பார்ப்பனத்தி தனித்தழைத்துவந்தாளாம்
அந்தப்பிராமணத்திக் கழகுள்ளவோர்மகனும்
மைந்தனுக்குந்தாய்க்கும் வறுமையினாற்சண்டைவந்து
சட்டுவத்தினாலவனைத் தலையிலடித்தாளாம்
எட்டுவயதாமவனு மெழுந்தானக்கோபமதாய்
தேசத்தைவிட்டவனும் நெஞ்சம்வெறுப்பாகிக்
காசிக்குப்போவனென்று காசியவன்போனானும்
அந்தவிதங்காசிக் கவன்போனநாள்முதலாய்
இந்தவருடம்வரை யெட்டாச்சுதாம்வருடம்
வாசிக்கும்மாலைபுரி மார்பன்விஜயநகர்
போசித்துமுன்னொருவனுரைத்தவுரைப்படியே
அவனுக்குத்தன்சீமை யதிற்பாதிதந்தாராம்
நவமணியும்வஸ்திரமும் நாலுவகைநகையும்
வென்றியரசன்கொடுக்க விரும்பியவள்வாங்கி
என்றுவருமான்மகனொன் றிருக்கின்றனாமவனும்
சத்திரத்தில்வந்தவர்க்குச் சாப்பாடுசெய்தபின்பு
நித்தம்நித்தம்பூரி நிதிகொடுப்பாராமிதெல்லாம்
போனால்விளங்குமென்று புகன்றார்வழிபோக்கர்
ஆனால்விசேடமுள தறிவோமென்றேயமைச்சன்
வாவியென்றும்மன்னனென்றும் வாழ்த்தியதைத்தான்
ஆவிபதியங்கே யாலோசனைகள்செய்து [கேட்டு
அந்நகரத்துக்கு கடுத்துவரும்போதிலங்கே
வந்தான்விஜயநகர் வாழ்க்கையுடையானொருவன்
எவ்வூர்நீரையாவென் றிவனையவன்கேட்கவவன்
இவ்வூர்விஜயநகர் யாமிருப்பதென்றுரைத்தான்
அவ்வளவிலேயும்ராஜவாசில்வேந்தனுக்கோர்
பெண்ணாமுழுக்கொண்டுவந்த பிராமணத்திக்கந்தனி

வெந்தத்தெருவி லிருப்பதுவீடவட்கு
வந்தபெய்யரே யம் மைந்தர்களெத்தனைபேர்
காசிக்குப்போயிருக்குங் காதலன்மட்டுந்தானோ
பேசிலவளுங்கினமும்பிள்ளை பெண்கள்வே யுமுண்டோ
இருந்தாலப்பிள்ளைகள் பேரென்னவிதெல்லாமுமக்குத்
தெரிந்தா லுரையுமெனச் செப்புவானம்மானை
அந்தநகருக்குள் அரண்மனைக்குமேற்புறத்தில்
ஐந்தாவதுவீதி யக்கிரகாரமதில்
வீடொன்றிருப்பதுபேர் வெங்கட்டம்மாளெனவே
நாடெங்குநான்தெரியும் நாரியர்க்குநீருரைத்தால்
மகனொருவனல்லாமல் மாற்றான்பெண்ணொன்றுமில்லை
ஜகமதனில்வெங்குவென்று சாற்றுவார்கணவன்பேர்
அந்தநாட்காசிக் கவன்போனானின்னமிங்கு
வந்ததாயில்லையென்று வருந்தியவன்போறான்
அந்தலத்தான்சொன்னதெல்லா மமைவாயிவன்கேட்டு
சிந்தந்தனிலந்தச் செய்தியெல்லாமுள்ளடக்கி
பார்ப்பாத்திமைந்தனென்று பாலிக்கவளிடத்தில்
போய்ப்பார்த்தாலெல்லாம் புலனும்வெளியாகுமென்று
சீலமிருபத்தி சிகாமணியுந்தேர்ந்ததனக்
கோலநகர்வழியைக் கூடினானம்மானை
கூடிவழிநடந்து கோட்டையுங்கொத்தளமும்
மேடைகளுங்கண்டு விஜயநகருட்புகுந்தான
மேவினலந்த விஜயநகர்வீதியிலே
காவடியோடிவனைக் கண்ட விளங்காளையர்கள்
ஆரையாநீரென் றவனைவிசாரித்திடவுந்
தீரமுடனிவனுஞ் செப்புவான்கேட்டவர்க்கு
எனைகாண்த தயய்யரே யென்னை யறியீரோவென்.
அன்னைவெங்கட்டம்மாளை யறியாதபேருமுண்டோ
காசிக்குநான்போன கதைதெரியீரோ
பேசிடுவன்பேர்வெங்குவென்று பின்னுமறியீரோ
வெருட்டுமுவெட்டானதனால் மறந்தீரோவென்றனையும்
இருவருமென்மேற்பட்ச மிப்படியோவைத்திருந்தீர்.



அம்மான்கள்மேலெவன் லம்மாஞ்சியுந்தகமோ
தம்மோடுதேபாறுமன்ன தன்பார்களெல்லாந்தகமோ ௫௦
சொல்லுமையாவென் றா தரமுடனே கேட்டான்
நல்லதையாவுன்னமையறியா தாங்களறியா துவிட்டோம்
தாயருடனே நீர் சல்லியங்கள் செய்துகொண்டு
போயிதானாச்சுதல்லோ புருந்தவிடமறியோம்
வாருங்காணென்றார் மருவிக்கலந்தார்கள்
சேருந்திசைபோகத் தெரிந்தார்விசாரணைபால்
ஓடிச்சிலபேருரைத்தார் பார்ப்பாத்தியிடத்
தேடிச்சிலநாளாய்ச் செல்வனைக்காணாதிருந்தாய்
காசிக்குப்போனமகன் காவடியோடிங்குவந்தான்
யோசிக்கவேண்டாம் உன்னைவிசாரிக்கவென்றுரைத்தார்
வந்தான்மகனென்று மைந்தர்சிலர்சொன்னவுடன்
சிந்தாகுலந்தீர்ந்தாள் திடுக்கென்றெழுந்திருந்தாள்
எங்கேயென்றுமகனென்று நடந்தோடிவந்தவள்
அங்கேசிலபேர்களோடாரோவரானென்றுரைத்தார்
வந்தானைக்கண்டுசில மைந்தர்மகனுமவரப்பார்
அந்தாலோர்வரானவன் லம்மானைப்பார்த்திடென்றார்
கண்டானவனுமிந்தக் காரிகைதானென்றறிந்து
கொண்டானிவனும் குறிப்பறிந்துகொள்ளானோ
பின்னைவரும்வேட மதைப் பிரமன்றனிக்கான்பார்த்து
துள்ளிநடந்தோடிச் சுருக்காயருகில்வந்து
ஆவலுடனோடி யிவன்வருதல்பார்த்திவனுங்
காவடியையங்கொருவன் கையிலேதான்கொடுத்து
தாயார்பாதந்தனிலே சாஷ்டாங்கமாய்விழுந்தான்
ஆயாளவனை யணைத்திருகையாலெடுத்து
முகத்தோடுதன்னுடைய முகத்தையும்வைத்து முத்தமிட்டு
மகிழ்ந்தான்மனமுருகி விழிவிழியேநீர்பெருக
கையாற்றழுவிப்பட்டா கண்ணேயென்கண்மணியே
ஐயா அரசே யருமையுள்ளபுத்திரனே
யாத்திரைக்குச்சென்றாயோ அப்போதாவுன்முகத்தைப்
பார்த்திருக்கக்காணுமற் பரிதவித்தாநின்றேனே.

வந்தாயோவென் னுடைய மனஸ்தாபந் தீர்ப்பதற்கு
முந்தநாட்கண்டக்கு முழுதும்பலித்ததையா
சுகமாகவந்தெனது துக்கமெல்லாம்மாற்றிவிட்டாய்
மகனேயெனத்தழுவி மகிழ்ந்தாள் பிரமனந்தி
ஆயடியம்மாவுன் னருளினாற்காசிவரை
க்ஷேமமுடன்போய்வந்து சேர்ந்தேன்தெய்வச்செயலால்
சட்டுவத்தினாலென் றலையிலடித்ததினால்
இட்டம்வெறுப்பாய்ப்போய் நானின்னமும்தேடிவந்தே
ன், மாதாவுடைய மனஸ்தாபம்வந்ததென்றால்
தீதாகுமென்று திரும்பிவந்தேனுன்னிடத்தில்
இனிமேலுன் னுத்திரவை எப்பொழுதும்நான்கடவேன்
தனியேதான்சென்றாலுந் தாயாரேயுன்னருளால்
ஆபத்தொன்றில்லாமல் அநேகதியாடிப்
பாபத்தைதீர்ப்பதற்குப் பலமெல்லாந்தேடிவந்தேன்
அம்மாடிதம்முடைய அகத்துக்குநாம்போவோம்
சும்மாவாவென்றவனுந் தோளிற்சுமையெடுக்க
தாயும்மகனைத் தழுவிமனைக்கழைத்துப்
போயினார்வீட்டிற் புகுந்தார்கிளைகளுடன்
தாய்க்குந்தமர்களுக்குந் தான்கொணர்ந்ததீர்த்தமுடன்
வாய்க்கும்பிரசாதம் வழங்கியவர்பெற்றபின்பு
கூடிவந்தபேர்களெல்லாங் கூட்டங்கலைந்துதங்கள்
வீட்டுக்குச்சென்றார்கள் மேல்நடந்தவாறுசொல்வேன்
தாயுமகனுந் தனித்திருக்கும்வேளையிலே
தேயவன்னையைப்பார்த்து திகழ்ந்தாயன்மைந்தனுமே
முன்னாளில்நம்மகத்தில் முழுவறுமைதானுண்டோ
இன்னாளிற்செல்வமெல்லா மெங்குபெற்றாயென்றுரைக்க
அப்பாமகனே யாத்திரையாய்ப்போனபின்பு
மெய்வாடிச்சிந்தைநொந்து வெறுமையாய்நானிருந்தே
ன், அப்போதிங்கே நடந்தவதிசயங்களென்மகனே
ஒப்போதக்கூடாவிவ் வூராரும்நம்மரசன்
வேட்டைக்குப்போயுடனே மீண்டுவரும்போதிலங்கோர்
காட்டிலொருவாவியுள்ளே கண்டோர்கன்னிகையை



கண்வேந்தன் பெண்மீது காதல்கொண்டாலவள்
தொண்டுவேனென்று குளக்கரையில்நிற்கையிலே
அந்தமடமாதுமவனுடையநாயகனும்
அந்தமன்னவந்துநிற்கு மேற்பாடெல்லாந்தெரிந்து
வாவிக்குள்ளேகுதித்து மறைந்துவிட்டாள்நேரம்
மேவிக்குளத்திநின்ற வேந்தன்மனவாடி
வள்ளமுந்தோணிகளும் வலைப்புங்குளிகாரர்களும்
கொள்ளைகொள்ளையாகவந்துக் கோமான்வரவழைத்து
குளத்திலேபோட்டிழுத்தும் குளிகாரராற்குளித்தும்
களைத்தவர்கள்போனதன்றிக் கன்னியைக்காணாமல்
மன்னன்மனமேங்கியொரு வாரமட்டுமங்கிருந்து
பின்னும்பலவிதமாய்ப் பேதைதனைத்தேடியங்கே
காணப்படாமையாற் காவலனீள்குவந்தான்
மாணிழையைத்தேடி வரவழைத்தார்வந்தாலும்
அவருக்கென்சீமை யதிற்பாதியுங்கொடுப்பேன்
தவறிக்கையில்லையென்று சாற்றுவித்தான்வள்ளுவனும்
அந்தமொழிநான்கேட்டதற் கானுத்திசெய்து
தந்திரமாய்நஞ்சிகொண்டு சார்ந்தேனவ்வாவியிடந்
தூபாசிவைத்தழுதே துணர்ந்தந்தமன்னவன்பக்கத்தின்
அய்யா நீயாரென்றே னவனுரைவாங்கனையன்
போற்றியுன்னைக்காப்பாற்றிப் பூசிப்பேன்வாவென்று
தேற்றியென்னைகூட்டியங்கே சேர்ந்தானவ்வாவியுள்ளே
மையன்மண்டபத்தினுள்ளே மங்கையையுங்கொண்டுவா [illegible]
ன், தையலும்நானுமவள் தலைவனுடனே [illegible]
போனோமவ்வாவியுட்கீழ் பூமியுழி கண்ட [illegible]
தானையனேகபடி தனையுங்கடந்துசென்றோம்
ஏழடுக்குமாளிகையொன் றெதிரேயிருந்ததவ் [illegible]
வாழுமிடமதுபோல் மாநிலத்திலெங்குமில்லை
அவ்வீட்டிலேசமையற் காகவென்னைவைத்திருந்தார்
வெவ்விடநஞ்சாலேயவ் வேந்தனையான்கொன்று [illegible]
கோதையைதேற்றியிங்கே கொண்டுவந்தேனன்றையா
மேதினியவ்வேந்தனிடம் விருப்பமுடன்சேர்த்தேன்

பொன்னுடையுமதிக பூஷணமும்பொன்முடியும்
மன்னவன்கொடுத்தான் மாநிலத்திற்பாதியையும்
தருவேனென்றானுடனே தார்வேந்தேயென்மகனும்
வருவான்சிலநாளில் வந்தபின்புதாருமென்றேன்
அந்தப்படியரசு ஆட்டுமென்றுசொன்னான்
இந்தப்படிமகனே யிங்குநடந்தகதை
மின்னானவள்கௌரி விரதமுடிந்தபின்பு
மன்னவனேதான்கூடி வாழுவேனென்றுசொல்லி
கன்னிமாடத்திலந்தக் கன்னியிருக்கிறாள்
மன்னவனைச்சேருமுன்னம் வைத்தபிரார்த்தனையாம்
ஐந்துநாற்பதுநா ளவ்விரதமென்றுரைத்தாள்
இந்தத்தினந்தானோ இன்னமொருநாளுளதோ
வாயிதாமங்கையவள் வைத்தநாட்சென்றுரைத்தாள்
தாயுரைத்தவார்த்தையெல்லாந் தவறுமற்றுங்கேட்டான்
அன்னையேயுன்றனைப்போ லார்தான்செயப்போறார்
என்னைக்குறித்தல்லவோ வித்தனையுந்தேடிவைத்தாய்
பாவிமகளேசரிதான் பண்பாய்தண்ணீர்நிறைந்த
வாவிக்குளெப்படிதான் வழிகண்டுபோனீர்கள்
அதுதான்தெரியவில்லை யம்மாசொல்லென்றுரைத்தான்
இதுகேளேயோகுழந்தா யென்னசொல்வேனாச்சரியம்
நாகரத்தினம்போலும் நல்மாணரத்தினத்தைச்
சேதரமாய்ச்சேர்த்தார் சிறந்தகணையாழிசெய்து
கைவிரலிற்போட்டிருந்தான் காவலன்மோதிரத்தால்
எவ்விதநீர்கண்டாலு மெவர்க்கும்வழிகொடுக்கும்
அந்தக்கணையாழியையும் யான்கொண்டுவந்துவிட்டேன்
இந்தாயிருக்குதுபா ரென்றெடுத்துக்காட்டிவிட்டாள்
காட்டினாள்மோதிரத்தைக் கண்டானவனுடனே
கேட்டானெனக்கென்று கிழவியதற்கேதுசொல்வாள்
அப்பாகுழந்தாயென் னருமைமுன்னையன்றி
வையகத்தில்யார்க்கு வழங்கநான்வைத்திருக்கும்
மைந்தனேயுன்னையன்றி மக்களெனக்குமுண்டோ
இந்தக்கணையாழி யெதற்குமுபர்த்தனையா



[தாள்
சித்தமயங்காதே சிலநாட்கழித்துனக்குச்
சத்தியமாய்நான்கொடுப்பேன் தடையில்லையென்றுரைத்
நல்லதம்மாள்நீயெனக்கு நகையுந்திரவியமுந்
செல்வவளநாடுந் சேர்த்துவைத்தேனென்றுரைத்தாய்
இந்தக்கணையாழிதனை யெனக்குத்தாவென்றதற்குச்
சிந்தைவிருப்பமற்றே சிலநாட்செல்லட்டுமென்றாய்
மோதிரத்திலுள்ளாசை மொழிலம்மாவென்மீது
ஏதுநினைக்கவில்லை யிதுவோதாய்க்குள்ளவன்பு
பச்சையுள்ளநாள்நாழிப் பால்கறக்காதபசு
கொச்சைநாள்வந்தாற் குறுணிப்பாலோகறக்கும்
நானாசைப்பட்டவுடன் நல்கமனமில்லாநீ
தானாகப்பின்னாலே சாதிக்கவோபோறாய்
முன்போனகாசி மொழியில்பழுதாமில்லை
என்சேதியின்னமுனக் கேதுந்தெரியாதோ
நீதானேவீட்டில் நிலையாயிருந்திடம்மா
மாதாவேதான்போரேன் வைத்திருநீதேட்டையென்றான்
பாலன்மொழிநாராசம் பாய்ச்சினதுபோற்கேட்டு
காலவித்தியாசமின்னங் கடக்கவில்லைநமக்கு
மைந்தனுக்குப்புத்தியிந்த வண்ணமிருக்குமென்றாள்
எந்தவிதநாம்பிழைப்போ மின்னமிவன்போலே
போனாலும்போய்விடுவான் போலேயிருக்குதென்று
மானாலுமோதிரத்தை மன்னையிலேகொடுத்தா
சிறுபிள்ளைபுத்தியின்னந் தீரவில்லையோமகனே
சிறுபிள்ளைக்கோகொடுக்க வைத்திருந்தேனிந்தநகை
உனதுமனம்போற்கொடுத்தே னுன்னைநம்பிநானிருந்
தேன், இனிமேற்சரியா யிருந்துபிழையென்றுரைத்தாள்
வாங்கினானந்த மணிமோதிரமதனைத்
தாங்கினான்கையிலதைத் தன்விரலிற்பூண்டுகொண்டான்
அம்மாவினிச்சமய மாக்கினீர்போடவென்றான்
உம்மாலுமாகாதிங் கொருவேளைமட்டினுக்கும்
சத்திரத்தில்நான்புகுந்து சாப்பிட்டுவந்திடுவேன்
பத்திரமாய்வீட்டிற் படுத்திருங்காணென்றுசொல்லி

சொல்லத்தகும்வார்த்தையிசைந்து செநர்வியத்தபாபி
னிமை, மெல்லாவிருந்தி வெளியில்வந்தானம்மானை
சிராய்வெளியேறித் தெருவீதியைக்கடந்து
காரார்குழலணங்கின சந்நிதித்திற்போய்ச்சேர்ந்தான்
சார்ந்தோற்புரத்திற் றனியாகவேயிருந்து
தேர்ந்தகனேபுத்தி சொயணியுமல்லோரம்
னாவிமென்றனங்குமையபமண்டபமொன்றுள்ளதென்று
தேவியும்நாயகனுஞ் சேர்ந்திருந்தாரென்றுரைத்தான்
பந்தாளத்துள்ளிருக்கும் பகட்பொன்றுமேடையென்றாள்
கோதாகநாயகனைக் கொன்றேனென் றம்புகன்றாள்
ஆசையினுலிதையெல்லா மாலோவெப்போமாறும்
மோகமுடன்மன்னனொரு மொய்குழலைக்கண்டிருப்பான்
பூமைவசப்பட்டவனுஞ் சேர்ந்திருக்குமாளிகையில்
தேவியுமன்னவனுஞ் சேர்ந்திருக்குமாளிகையில்
கண்டாளிமன்னவனைச் சதிசெய்துகொன்றுவிட்டு
[illegible]ட்டார்குழலிதனை வாமாங்கியதாகும்
[illegible]ன்றுமினை மதிவோமெ[illegible]மையக்கி
[illegible]னோயனைத் தயிரியங்கொண்டு
சந்நிதித்திற்போய்புத்தா சாய்பிட்டிணையபாதிப்
புத்திசொயணியும் பூரிக்கொடுப்பாரிடப்போய்
இருந்தானவரு மிருவரிலேயொருவர்
பரிந்தாருண்டோவென்று பேசிதிதிகொடுத்தார்
கொடுத்தார்முகம்பார்த்துக் குறிப்பாய்த்தினைந்துநின்று
ன், பிடித்தாரவரிவனைப் பெருமாடிபாற்கொடுப்பாய்
ஆதரவாய்த்திருத்தி யவனுக்குச்சொன்னார்கள்
மாத்தானைப்பாரவிக் கைத்துவையுமென்றுசொன்னார்
அப்படியேயானாலிவ் வரயனைவைத்தீரோனார்கள்
இப்படியும்பார்ப்போமென் றிருந்தானேமந்திரியும்
மந்திரியிங்கேயிருக்க மாதரிவேர்துசெய்தாள்
அந்தமணிமாட மதிலேயாந்தனியிடத்தில்
மாதரியேசார்ந்த மாகத்தனித்திருந்து
காதிவொருத்தி தனையழைப்பிபாரவில்



வைத்தவனையங்கே வரவழைப்பாயென்றுசொல்ல
அந்தருணம்போயவனை யழைத்தெதிரேவிட்டுநின்றான்
நின்றவனையப்புரத்தில் நீயும்போவென்றுரைத்தான்
அன்றவனும்போனு னதற்குமேலாரணங்கு
முன்னாலே நின்றான் முகக்குறிதன்றாய்ப்பார்த்தாள்
இன்னானைமந்திரியா யிருக்கலாமென்றுணர்ந்தாள்
மங்கைமுகக்குறியும் மனக்குறியுந்தான்மதித்தே
இவ்வியொளால்தம்மரச னியல்வெளியாமென்றுணர்ந்தாள்
அந்தசமயத்தி லமைச்சன்முகம்நோக்கி
வந்தவர்நீயார்காண் வரலாறுசொல்லுமென்றான்
நானோர்பரதேசி நாட்டிலெங்குஞ்சஞ்சரித்து
தானேவந்தும்முடைய சந்நிதியில்அன்னமுண்டேன்
பூரிகொடுப்பார்களென்னை பொறுக்கென்றுபிடித்து
வாருமென்றுகூட்டிவந்து வைத்தார்களென்றுரைத்தான்
தேசாந்தரியானும் திரவியம்வாங்கும்போது
பேசாதிராமற் பரமித்துப்பார்த்ததென்ன
பிரிந்தாரிருவரிலோர் பேருண்டாவென்றதற்கு
தெரிந்தாரைப்போலே நினைத்துப்பார்த்ததென்ன
கூசாமற்சொல்லுமென்று கோதைநல்லாள்கேட்டவுடன்
தேசாந்தரியதற்குச் செப்புவானம்மானை
பூரிகொடுப்போர் புகலுமந்தவார்த்தையென்ன
காரியமோவென்று கருதினேனல்லாமல்
ஏதொன்றுநானறியே னென்றுவிளம்பியமைச்சன்
காதொன்றுங்கண்ணறுங் கடமிவன்பேசுகிறான்
மெல்லநயம்பேசியின்னம் வெளிபடுத்தவோணுமென்றே
அல்நீரொன்று மறிந்ததில்லையானாலும்
ஆதியிலும்முரே தமைச்சர்குலம்போலுமது
சோதியிக்குறிப்புத் தோன்றுதே துறநலாய்
மிக்கபரதேசி வேடம்புனைந்திருமக்குந்
தக்கதிதனோடொன்று தானினைக்கக்கூடவில்லை
உள்ளத்தைச்சொல்லுமென வுரைத்தவுடனேயமைச்சன்

மெள்ளமெள்ள வந்தான் வெளியிலிவன் வாக்காலே
இன்னம்வரட்டுமென வெண்ணிப்புவனே துரைப்பான்
மன்னர்குலக்கொழுந்தே வழுத்துமுங்கள் வார்த்தையினு
லேதோவோர்காரியந்தா னென்னிடத்திற் சந்தேகம் (ல்
நீர்தானினைக்கிறதாய் நினைக்கிறேனுனையினுல்
தங்களுடவாக்காலே தானேயச் சங்கதியை
இங்கெனக்குச்சொன்னாலே யெனதுவலாதுகளும்
ஒருவேளையச்செயலுந் தொல்லியிருக்கக்கூடும்
இருவோர்க்கு முடேபோ லேதுவிருக்கக்கூடும்
ஆனதனாலுங்கள்வர லாற்றையுரைத்தருளும்
மானனைமீரென்று வழுத்தினான் மந்திரியும்
அங்கவனோர் தன்னுளி லவிசிருவிலையிவன்
தங்களுந்துங்கொஞ்சங்கொஞ்சந்தானும்வெளியிடுகிரு
இவனேயவனாது மென்பதற்கோரையமில்லை
அவனுமிம்முத்தி யறைவதனுப்ரேதையில்லை
சொல்வேனுன் முந்தியென்று துணிந்தந்தத்தோகைதவ
லான், வல்லான் முகம்பார்த்து வழுத்துவானம்மானை
மன்னன்மகனொருவன் மந்திரிமகனொருவன்
அன்றோரிருவர்களும் அசுவமிரண்டேறி
ஆகாயவீதிவழி யாகவெல்லாப்பூவளமும்
வாகாகத்தான்பார்த்து வாரிதியெல்லாங்கடந்து
வந்தாரோர்பூங்கா வனத்திலேவந்திறங்கிச்
சந்தோஷமாயிந் தடாகமொன்றங்கேயிருக்கக்
கண்டார்படித்துறையைக் கரிவளையோடெனமிங்கே
புண்டாளுவல்லிப் புறத்திடலாமெனற்றவுடன்
மந்திரிதான்சென்றுகொண்டு வருகிறேனென்றுருமிங்கே
குந்தியிருமென்றவனோர் குதிரைமேற்சென்றுவிட்டான்
பின்னாந்தமன்னன் பிரிந்திருந்து சோலையிலே
தன்னந்தனியே தனித்திருக்கும்வேளையிலே
ஐந்துதலைநாகமொன்றவ் வரசன்றனைக்கடிக்க
வந்ததுகண்டவனை வாளாற்றுணித்துவிட்டான்
காலிவெட்டுப்பட்டதனைத் துங்கல்புயம்பிறைகாத்தனுந்



ஏவரதனஞ்செந்தினைதைச் சேர்த்தெடுத்துக்கொண்டரசர்
துக்குளத்திற்சென்றபின்னுண்டானகதைமுதலாய்
இக்கணத்திலிப்பதிசேர்ந் திருந்தகதையீராக
ஒன்றுந்தவறாம லுரைத்தாளமைச்சனுக்காய் 57
அன்றவரைமெதிர்பார்த் தவனிறந்ததும்புகன்றாள்
சொன்னதெல்லாங்கேட்டுத் துறையிறந்தானென்றவுடன்
தன்னையறியாதுகண்ணீர்த் தாரைவழிந்தோட
தோகையரசேநீர் துறையிறந்தானென்றுசொன்னீர்
தேகமிருப்பதுவோ சிதைவாகிப்போனதுவோ
மின்னரசேசொல்லுமென்று விரைவாயவன்கேட்க
மன்னவன்றேகத்தைப்பந்த மாளிகையிலேயென்னைப்
பந்தலிலேபோட்டு படிமனமிட்டு பத்திரமாய், வைத்திருக்
கின்றேனமைச்சன் வல்லபத்தைநோக்கியென்றாள்
என்றமொழிகேட்டவனு மிரங்கிநெடுமூச்சுவிட்டு
நின்றுவணங்கி நிகழ்த்துவானம்மானை
ஈன்றுளனையீர் நீரெதிர்பார்த்திருந்தவனும்
நான்றானப்பாவியெனநவின்று பின்னுந்தானுரைப்பான்
தாயேநீர்சொல்லிவந்த சங்கதியெல்லாஞ்சரிதான்
நாயேனவ்வாவியினில் ராஜனைவிட்டுவிட்டுப்
புகுந்தேன்பரியேறிப் போய்த்தங்கமாபுரியில்
தகுந்ததொருத்தியிடஞ் சாதங்கரிவாங்கி
வாநினைக்கும் போதிலங்கே வல்லிரவுவந்ததனால்
இரவுவிடிந்தவுடனேகுவோமென்றிருந்தேன்
விடிந்தவுடனெழுந்து விரைவாய்வழிகளெல்லாங்
கடந்துவந்தேன்பூங்காவிற் காவலனைக்காணவில்லை
வாவிக்கரையினிலும் வனத்திலேபூஞ்சோலையிலும்
கூவித்தேடித்திரிந்துங் கொற்றவனைக்காணுமல்
சித்தங்கலங்கியங்கே தேசிமட்டம்நின்றதைக்
கைத்தலத்திற்பற்றிக் கடுங்காடெல்லாங்கடந்து
தங்கநகரில்வந்து தங்கியொருநாளிருந்தேன்
அங்கேபரிகளையோ ராள்வசத்திலொப்புவித்தேன்
காயாசம்பூண்டுகொண்டேன் காசிநதிபாடிவந்தால்

ஆயாசந்தீருமென்றே யடைந்தேதக்காசிநதி
நீராடியங்கேயும் நினைத்தேனென் மன்னவனைக்
காராடுசோலைகளுங் காசியிருந்தேடிவந்தேன்
வந்தவழியிலெங்கள் வாலரெல்லாஞ்செவிபோர்
வித்தைகவித்தையபாரத்த விகமெல்லாங்கேட்டுணர்ந்
தேன், பார்ப்பாத்திசெய்தபழிமொழியுந்தான்கேட்டேன்
போப்பார்ப்போமென்று புகுந்தாவரும்வழியில்
அந்தபிராமணத்திக் கருமைமகனொருவன்
புத்திரெந்தபாசிக்குப் போனானென்றார்சிலபேர்
அந்தமகன்பெரு மாள்போனதாளுமவன்
சொந்தப்பெயரும்நன்றுப் சொல்பவாறுங்கேட்டறிந்
தேன், போவோமவளிடத்திற் போனாற்நடந்தகதை
யாவுந்தெரியுமென்றே யவள்மகனென்றுசொல்லி
காவறுபுங்கொண்டடத்தக் கன்னிமனைசேர்ந்தவனை
ஆவலுடன்றுமென்ற வுச்சரித்துக்கொண்டவுடன்
தன்மகனென்றெவ்வளவுஞ் சந்தேகமில்லாமல்
என்மகனேயென்றாள் நினைந்தாள் நடந்தெல்லாம்
கையில்விட்டமோதிரத்தைக் கருக்காகதான் காட்டிக்
கையில்விட்டுவந்தேன்நீர் காணுமென்றுகாட்டிநின்றான்,
பார்த்தாளம்மோதிரத்தைப்பார்த்துப்பனைந்தாளினைந்து
வேர்த்தாள்பெருமூர்ச்சு விட்டாள்கட்டாண்மையுள்ள
மந்திரியின்புத்திகலை மதித்தானைமகிழ்ந்தான்
சித்தையிலேபமெல்லாந் தீர்த்தான்பின்செப்பலுற்றான்
பொய்யாதவாசகனே புத்திசிகாமணியே
அய்யாவுன்சொல்லை யடைந்தேனைத்தாயிதான்
எனக்குமுயிர்கொடுத்தா பெண்ணுடையநாயகனுர்
தனக்குமுயிர்கொடுக்குஞ் சஞ்சீவியாகவந்தாய்
மன்னவனைத்தேடுமெனும் வாடிபெண்குநீயாகவந்தாய்
உன்வரவைத்தேடியன்றேயுயிர்நின்றதையாதிருந்தேன்
இவ்வூர்ராஜனுக்கு யாறுதைத்ததாட்களுக்குஞ்
செய்வாரவிங்கேறே இர்த்தவெளியிலிருந்தால்
தானையவனென்னை நாத்தழைக்கத்தான்வருவான்



வேசையிருவேயவனை விலகிவிட்டுப்போவதற்கு
தாமதமாயிருந்தாற் சதியந்துநேருமையா
நீயனைதெலென்னி நீதிர்ந்துவாயென்றுரைத்தாள்
அத்தாயம்மாவென் வாசனைகாண்பதன்றிச்
சுழிநீதான்போவேனோ சொல்லைக்கட்பேனோ [ம
இன்னர்வேந்தனெஸ்ரே டேதிக்குப்போய்செய்தாலும்
அன்னவனையாரொருவர் நானமட்டும்பார்த்திடுவேன்
இத்தச்சமயமதற் கிசைந்தசமயமல்ல
அத்தபுனல்வாவியதற்குநாம்போய்ச்சேர்ந்து
மன்னவனைக்காண மனந்துணிதமாருமம்மா
மின்னரசேயுங்கள் விருப்பமுமப்படியே [னாம்
இருக்குமென்றுதானினைந்தே னெப்படிபோவதெனக்கி
கருத்தைவெளிப்படுத்திக் காட்டுமம்மாவென்றுரைத்தா
ன், மந்திரியேயுன்னுடைய மனம்போலவென்மனமும்
இந்தப்படிபேசிய பதுவேதலமுமென்றாள்
இஷ்டமென்றபோதே யிருபேருமோர்மனதாய்க்
கஷ்டமெல்லாநீங்குதற்குக் காலமிதுவாகுமென்று
காவல்வைத்ததாயருங் கடைவாயிற்காப்பவரும்
மேவித்துயிலும்வண்ணம் வித்தைசயினலேமாயவித்
பாதியிரவிலந்தப் பாவையாருந்திரிந்து
தாதியருமந்தத் தலந்தாருங்காணாமல்
கன்னிமாடந்தைவிட்டுக் கலந்துவெளியேறி
அன்னவர்களவ்வூரகன்றுவழிநடந்து
பொழுதுவிடியுமுன்னே போய்த்தங்காபுரியில்
பழுதவாராயலொரு பசுங்காலிலோகிடத்தில்
மாதரசிதன்னைவைத்து மந்திரியவ்வூர்புகுந்து
கோதைபூவாணிச்சி கோலமெனதான்சேர்த்து
கூறுவதெல்லாமவட்குக் கூறியபின்னங்குநின்ற
ஏறுபரிகளிரண்டையுங்கைக்கொண்டகன்று
வந்துபூங்காவனத்திவ் வார்கொண்டசுவபதைக்
தந்திரமாய்ப்பினைத்து தாதார்குழலணங்கை
யனவேகிலேற்றி மந்திரியுந்தன்குதிரை

தனியேமந்திரத்தைச் சாற்றினான்காதனிலே
குதிரையிரண்டினுக்குங் கூறினான்மந்திரத்தை
கதிரோனுதயமதிற் ககனவழியாநடக்கப்
பூங்காவனமும் புன்கவாவியும்நோக்கி
அங்கேயர்சோலைக்கருகாகவந்திறங்கி
கன்னிபருத்தானுங் கதித்தபடிவிட்டிறங்கித்
தன்னுமரத்தடியிற் பரிகளைகட்டிவைத்து
மங்கையுத்தானுமந்த வாவிக்குள்வந்தவுடன்
அங்குபுனல்வாவி யவர்க்குவழிகொடுக்க
மந்திரியுங்கண்டு மகிழ்ந்தவாவியிலேறிப்
பைந்தொடியுந்தானும் படிவழியேசென்றார்கள்
இந்தப்படியுண்மை யிப்படியேயென்றுசொல்லி
அந்தப்படிகள்கடந் தடைந்தார்பொன்மாளிகையில்
ஆறெட்டுமாளிகையினழகுமெல்லாம்பார்த்தமைச்சன்
வருகின்றமங்கையிட னேழாம்பொன்மாளிகையில்
இன்னமணிமாளிகையு மிவ்வனங்குங்கண்டமன்னவன்
என்னைமட்டுமோமறப்பானென்றுமனத்தேமகிழ்ந்தான்
மாதரசும்மந்திரியும் மாளிகையினுட்புகுந்தார்
கோதையருமங்கேபோய் கொட்டடிக்குள்ளேபுகுந்து
மன்னவனைவைத்துப் பூட்டிவைத்தவறைதிறந்து
முன்னிருந்தபெட்டகத்தின் மூடிதனைத்திறந்து
காட்டினாள்மந்திரிக்குக் கண்டான்மதியமைச்சன்
மூட்டினான்வெந்துயரை மூட்டிவிழுந்தானவனும்
கையான்முகத்திற் கண்மாயமதைத்துக்கொண்டான்
ஐயாவேஐயாவோ அழகுபுவனேந்திரனே
உன்னைப்பிரிந்ததனா லுயிரின்னம்வைத்திருந்தேன்
என்னைப்பிரிந்துநீ யிருந்தவிடமாமோ
மன்னர்குலவிளக்கே மயமன்னர்போரேறே
தன்னுயிர்போன்மன்னுயிரைத்தாங்குஞ்செங்கோலரசே
பத்திக்களஞ்சியமே போதநிறைபொக்கிஷமே
வித்தைக்குத்தியமே வேதவேந்தர்கண்மணியே
மெய்யாயிறந்தாயோ விளையாட்டுச்செய்தாயோ



அப்பாவென்றின்ன மனேகமாய்த்தான்புலம்பிச்
சோர்ந்துவிழுந்து துணுக்கென்றெழுந்திருந்து
காந்திமனது கலங்கினான்மந்திரியும்
மந்திரிதன்சிந்தை மயங்குவதைதான்பார்த்துப்
பைந்தொடியுந்தேறுதலை பண்ணியவனுக்குரைப்பாள்
பொல்லாதகாலப் புரவலனைக்கொன்றது நீர்
எல்லாமறிந்திருந்து மேங்கினலென்னசெய்வேன்
ஆனபடியாச்சுதினி யாங்காரியமதனைத்
தானினைத்துசெய்யிலன்றோ சஞ்சலமுந்தீர்த்திடலாம்
மன்னனுயிர்பிழைக்கும் வகைதனைத்தேடி (பாரீர்
என்னையுயிருண்டாக்கென் றெடுத்துரைத்தாளேந்திழை
தந்தைமொழியாளுரையைத் தான்கேட்டுமந்திரிதன்
சித்தமதைத்தேற்றித் தெளிந்துபின்னேதுசெய்வான்
எண்ணெயிட்டபந்தனுக்கு ளிருந்தமன்னன்றேகமதை
வண்ணமணிப்பெட்டிபொன்றில் வையாபெடுத்தவை
த்து, வெந்நீரினாற்கழுவி வெண்ணிறள்ளித்தெளித்துப்
பன்னீர்தெளித்து பரிமளமுந்தான்பூசி
கைவசத்தில்வைத்திருந்த காசிதனிர்த்தமதை
மெய்முழுதுந்தெளித்து பின்னூர்முகம்பார்த்து
மானரசேசற்றே மறைவாகவிருந்து
நானழைத்தால்வாருமென்று நற்றுகைபோர்பாலனுப்பி

இராஜகுமாரனுக்கு மந்திரிகுமாரன்
உயிருண்டாக்குதல்.

மூடிகொண்டுபெட்டகத்தை மூடிபெதிரேயிருந்து
ஓடத்திரியுமனத்தை யொழுங்காய்வசப்படுத்தி
தப்பாதுயர்ந்தோர் தனக்குபதேசித்தபடி
செபித்தாலுயிர்பிழைக்கச் செய்யுமணிமந்திரத்தை
மந்திரத்தையுச்சரித்து மகாதேவர்பொற்பதத்திற்
சிந்தைதனையிருத்திச் செபித்தானொருசாமம்
சாமஞ்செபித்தபின்பு சடத்திலுயிருண்டாகும்
தேமங்கனைக்கறிந்து சீக்கிரம்பெட்டியினை
மூடிதனைத்திறந்து முகமதையவன்பார்க்கையிலே

யாடியுடல்கைகா லசைந்த துகானமன்னேரம்
பாங்கிலிருந்தமைச்சன் பார்த்திருக்கும்போதரசன்
தூங்கியெழுந்தவர்போற றனுங்கென்றெழுந்திருந்தா
ரித்திரைசெய்தார்போல் திருபனெழுந்திருந்து [ன்
புத்திசிகாமணியும் புதியமுகந்தான்பார்த்தான்
மண்டலத்தோர்வாழ்ந்து பொய்கை மன்னன்மகிழுகந்
தைக், கண்டகவிஞோர்மனம்போற் களித்தான்புவனேந்
திரன், மன்னனெழுந்தவுடன்மந்திரியைபோய்த்தழுவித்
தன்னந்தோடினன்னம்மையுந்துக் கட்டியணைந்தான்காண்
புத்திசிகாமணியே போதசிந்தாமணியே
இத்தனைநாள்வரைக்கு மெவ்விடத்திற்போயிருந்தாய்
இந்தக்கீழ்பூமிவழி யெப்படிநீகண்டுவந்தாய்
அந்தப்புனல்வாவிவழி யாருனக்குகாட்டினவர்
நாகந்தாழ்ந்தவழி தான்கண்டுவந்திருந்தேன்
மோகத்தாலுன்னை முழுதுமறந்துவிட்டேன்
தானுதாட்சென்றபின்பு நானுமுனை நினைந்தேன்
சோலையிற்போய்த்தேடியெங்குஞ் சுற்றிவந்து தானவிவ
வாடித்திரும்பியங்கே வந்திருந்தேன்மங்கையுடன் [லே
தேடிப்பெண்ணைவந்து சேர்வதெந்நாளென்றிருந்தேன்
நான்செய்தநல்வினையால் நாடியிங்குவந்தாய்
நான்செய்திருந்த தவமேதவமதுவோ
என்றுபலவாறு யிரங்கினான்மன்னவனும்
நின்றையாவிங்கே நடந்ததறியீர்போலும்
எல்லாம்விஸ்தாரமதா யினிப்பேசலாமரசே
நல்லார்பொல்லாரையகர் நடத்தைதனைக்கண்டிடலாம்
வேந்தனென்றமைச்சன் விளம்பியதெல்லாங்கேட்டு
வந்தமடமாது மனமகிழ்ந்திருந்தாள்
மறைவிலிருந்தமங்கை மன்னவனைப்பிறைந்தெழுந்த
முறையுமவ்வார்த்தை மொழிவதுங்காணநின்று
மந்திரியேயங்கேதான் வரலாமோவென்றுரைத்தாள்
அந்தமொழிகேட்டமைச்சனந்தவேளையுமென்று
மங்கையுடனேயெழுந்து மன்னனமுன்னேவந்து நின்று



அவ்வவளைக்கண்டவுடன் அணங்கேநீயின்னேரம்
எவ்விடத்திற்போயிருந்தா யென்னுடையமந்திரியும்
இவ்விடத்தில்வந்துவிட்டான்யான்செய்தபாக்கியங்காண்
கண்டாயோவென்றுரைத்த காவலன்சொற்கேட்டு
வண்டார்குழலிகண்ணீர் வழியநின்றுதானுரைப்பாள்
நல்லதையாமன்னவனே நானும்மாற்பட்டதுயர்
எல்லாமுறைப்பே னெழுந்திருந்து வாருமென்று
மன்னவனும்மங்கையரும் மந்திரியுமாய்ச்சேர்ந்து
பின்னோரிடத்திற் பிரியமுடன்வந்திருந்தார்
வந்திருக்கும்போதிலந்த மந்திரியைப்பார்த்தரசன்
இத்தனைநாளும்வரலா தெங்கேசொல்லென்றுரைத்தான்
பின்னுமேயும்மைப் பிரிந்ததைநானுரைப்பேன்
முன்னாலேதாங்கள் பட்டமுறையெல்லாங்கேளுமென்று
மந்திரியவ்வாறுரைக்க மன்னன்முகம்பார்த்துச்
சுந்தரமான்சொல்லத் துடங்கினாளம்மானை
பாரரசேயும்முடைய பார்ப்பாத்திசெய்துவைத்த
சிரழிவையெல்லாந் தெரிதுமறியாமல்
இருந்தபடியேயிருக்கிறீரென்றேநீர்
வருந்தலறியாதிருந்தீர் மன்னவனேயென்றுரைத்தாள்
அப்போதரச னறியேனென்றரிவையும்
எப்போதும்போலே யிருக்கிறேனென்றுரைத்தான்
உன்னையிட்டுநீர்முழுகி யிருந்திரேயப்பொழுது
பெண்ணைப்போல்வந்திருந்த பிராமணத்திபென்னசெய்
தாள், வின்னுமென்றாளப்போது வேந்தனுரைப்பானி
சந்தான், தொள்ளைப்பசியுடனே குழந்தாயிருப்பாளென்
றன்னம்படைப்பே னருந்துவாயென்றுரைத்தாள்
கன்னிவரட்டுமென்றேன் கன்னிவரச்செல்லுமின்னம்
வைத்தரசமாயிருக்கக் கண்டுமருந்திவிட்டேன்
குடித்தவுடனேமனத்தைக் குமட்டிக்குடல்புரட்டிக்
குடித்துபுழுப்போற்புரண்டு சோர்ந்துகிடந்துநொந்து
விருந்தமாய்க்கண்கழல மெய்வேர்த்துநெஞ்சடைக்க

வருந்தமாய்புத்தி மயங்கினேமாதரசே
அதுகாலந்தெரியுமங்கே யப்பால் நடந்தகதை
எதுவுந்தெரியா தெனக்கென்றால்பார்வேந்தன்
சண்டாளிசெய்த சதுர்க்கிருவேசாட்சியென்று
கண்டேன்விஷத்தைக் கரைந்தாள்போற்காணுதென்று (ன்
அப்போதானும்மை யருந்துவந்துபார்க்கையிலே
மெய்பாவிறந்து வெறுந்தேகமாயிருந்தீர்
கண்டுநான்சிந்தை கலங்கியலறும்போது
முண்டைச்சியென்னை முனிந்தாள்பரமறந்தி
நானும்பயந்து நமக்குவிதியிப்படியோ
தாவிருந்ததென்று தயங்கினேனப்பொழுதோர்
எண்ணமெனக்குவந்த தீந்தார்பிழைத்துவரப்
பண்ணும்வித்தையொன்றமைச்சன் படித்திருந்தானெ
ன்றொருநா, ளெனக்குநீர்சொல்லி யிருந்தீரல்லோவதை
நான், நினைத்தேனதனாலே நேயமுள்ளமந்திரியைக்
கண்டாலுங்காண்போமா காலமுமக்குயிரை
யுண்டாக்கவேண்டி யுடலிருக்கவேணுமென்று
வேந்தேதானும்முடைய மெய்யைப்பெண்ணெய்ப்பத்தி
லிட்டுச், சேர்ந்தேன்பூமிக்குளொன்று செப்பிரதுமுதலா
ய், மந்திரியாலன்னவுயிர் வைத்தெழுந்திருக்கப்
பைந்தொடியாள்சொல்லிப் பரதவித்தாளம்மானை
பட்டதுயரமெல்லாம் பாவைசொல்லத்தான்கேட்டுக்
கஷ்டமெல்லாமின்றோடே கழிந்ததென்றான்காவலவன்
அப்பாவுமக்கைபட்ட அபத்தெல்லாநினைத்தே
யப்போதிதற்கென் றருகிமனந்தளர்ந்தான்
மந்திரியும்மன்னவனை வாசலில்விட்டன்னமதைச்
சிந்தையுடன்கொண்டுவரச் சென்றதைமுதலாய்
பாதமலைசைக்கண்டந்த மங்கையுடன்வாசலில்வந்
தாதரவாய்ப்பட்டாளிகையிலடைந்ததையுஞ்
சொல்லிமுடித்தான் அயர்கடலில்மூழ்குமந்த
வல்லிஅசைப்பதற்காய் வந்தமதியமைச்சன்
வேந்தனதுகேட்டவுடன் மேத்தமனந்தயர்ந்து



சேர்ந்தமைந்தபுத்திசிகாமணியைப்பார்த்துரைப்பான்
என்னையுங்காப்பாற்றிவிட்டா யென்றால்வருந்துமிந்த
மின்னையுங்காப்பாற்றி யிருந்தபுகழ்நீயடைந்தாய்
மந்திரிமார்தங்குலத்தில் மாணிக்கம்போலுதித்தாய்
எந்தவுலகத்திலுமுன்னிசைவிளங்கச்செய்துவைத்தாய்
தாயாருக்குந்தந்தையர்க்குந் தவறாதுயிர்கொடுத்தாய்
நீயிருக்கும்போதுகுறை நேரிடுமோவென்றுரைத்தான்

புவனேந்திரன் தனதுவீரப்பாடு
சொல்லுதல்.

இந்தப்படியாக விவர்களொருமூவர்களுந்
தந்தமதுசெய்கையெல்லாந்தனித்தனியேதானுரைத்து
வந்ததுயரமெல்லாம் மன்னன்மகளொண்ணியென்னவி
சிந்தைவருந்திச் சினந்துரைப்பான்மந்திரிக்கு
நீதிநெறிமுறையை நெஞ்சினில்நினையாமல்
ஜாதியின்வீரமதைச் சற்றுமெண்ணிபாருமல்
என்னையிந்தமோசடிசெய் தென்னுயிர்க்கொப்பாயிருந்த
மின்னையுங்கைக்கொண்டுசென்ற விஜயநகர்க்காவலனை
கந்திமுனையாயிணங்கின் கட்டழகைப்பார்த்தகண்ணைத்
குத்திக்கலக்கியவன் தொண்டைநெறிக்கையும்வெட்டி
பருந்துக்குங்காக்கைகட்கும் பாரக்கழுகினுக்கும்
விருந்தாக்கிடமாக்கி வெற்றித்தாருஞ்சூட்டி
பட்டணத்தைச்சூறையிட்டு பாப்பாத்தியைப்பிடித்து
கட்டியடித்துமுனைக் கழுவிலேபோட்டுவைத்து
இத்தனைக்குக்காரணமா யிருந்தஅவன்மந்திரியைச்
சித்ரவதைபண்ணிச் செகபரசித்தஞ்செய்யாமல்
வதுமனவீரமில்லா தேமையர்போல்நானிருந்தால்
பேதைநுமென்னையொரு பேடியென்றுசொல்லாரோ
தாலபுரந்தரனுஞ் சவுகயவில்வேந்தனுக்குப்
பாலனெனநான்பிறந்தும் பகைக்கெளியனாவேனோ
ஒலிக்குங்கடலுலகி லொழியுமோவிந்தவசை
ஆதலினால்யானோ ராசன்மகனென்றிருந்தும்
பேதையைப்போலாவேனோ பேசென்றானம்மானை

வேந்தன்மகனுரைத்த விரக்குறிப்பையெல்லாம்
செந்தாயர்த்தபுத்தி சிகாமணிபுஞ்செப்பலுற்றான்
வரைசேர்புயந்தராசே மன்னர்மன்னர்போரேறே
உரைசேர நீருரைக்கு முண்மையேயாகுமையா
அந்தவிஜயபட்டி கடியேவன்றனடைந்து
பைந்தொடியாளங்கண்டு பழங்கதையெல்லாங்கேட்டு
நெஞ்சகந்தெளிந்தே னொளிர்ந்த திருக்கண்புருவம்
வஞ்சனையன்றவளை வாளுக்கிரையாக
எண்ணினேனப்பொழுதேயென்மனத்தோர்யோசனையும்
பண்ணினேனிந்தப் பாதகியையாம்கொல்லதின்றால்
பாரவேந்தன்கோபங்கொண்டு பாதலத்திலேயிடக்க
இருவிருண்டர்களிவைப்பா ரவ்விடமேயாஞ்செலுவோம்
ஏன்றா நகருதிபல்லோ எளியேனவனுயிரை
அன்றவளைவைத்தா வில்விட்டுமெய்த்துக்கண்டேன்
எனக்கேமனமோசை யிப்படிக்குவிட்டாளென்னிவ்
வனத்தேகவிழ்மக்கு மனப்பயமவாரோ
இங்கமெதிர்த்ததென்றும் பெருநரிதேர்நின்று தேமோ
எங்களரசேபுமக்கிங் கெதிர்த்தப்பூவியுமன்றோ
அப்புடையபாரியென்றே யுணர்ந்தாய்விஜயநகர்
செம்மலிதமோதலஞ்சஞ் செய்யநினைப்பாரோ
மண்டலத்திலிதப்பி மாந்தரெவராகிலும்
கண்டிக்கவேண்டுவது தருமமென்பராகில்
அடிபெண்மாதரசை யவன்காவலடைத்தார்
விடியாமுன்கொண்டுவந்து விவரமதையறிந்தால்
நாட்டரசர்களெல்லாம் நகைப்புக்கிடமாமே
வீட்டிலிருந்தாசறும் வெளியேவெட்கமுற்று
பேடியிலும்பேடியென்று போவரல்பார்சமனா
நாடிநானுசொல்வதிலோர் தயமில்லைமன்னவனே
வேந்தன் நமக்கு விடைகொடுத்தநாட்கணக்கை
யாய்ந்தால்நாளைந்தினத்தோ டானதொருவருடம்
காலமிடம்வலிமை கண்டுபலைமன்னவர்க்கு
சீலமுந்தோர்ந்தலவோ செயவேண்டும்போராசே



என்றுபலநீதி யிசைவரவெடுத்துரைத்து
வென்றியரசனெஞ்சில் விளைத்தகோபாக்கினியைத்
துன்னுந்தழலியச் சோனைமழைபெய்ததுபோல்
தன்னுரியசொற்களினுந் தண்ணீரினுலவித்தான்
மந்திரின்சொல்லையெல்லாம் மன்னன்மகன்கேட்டுச்
சிந்தையின்மேற்கொண்ட சினமடங்கித்தானிருந்தான்
அப்போதுமந்திரியும் அரசன்முகம்பார்த்துரைப்பான்
எப்போதும்போலே யிருப்பதினிக்கூடாது
நாடிக்கேவந்துவெகு நாளாகிவிட்டதினித்
தாமதஞ்செய்தாலுமது தந்தைமனஞ்சலியார்
தாயார்தமருந் தன்மனஞ்சலித்திடுவார்
ஆயாசப்பட்டிரும்பா ரமைச்சன்முதன்மந்திரியும்
மாதரசுங்கற்ப வதியாயிருக்கிறார்
ஆதலினால்நம்பதிக்கே யாஞ்சேரவேண்டுமையா
மன்னவனேயென்று மதித்துரைத்தான்மந்திரியும்
அன்னபடிபயண மாகவென்றான்மன்னவனும்
அந்தத்தருணமதி லழகுபூலோகரம்பை
முந்திச்சமையல்செய்ய முதன்மாளிகையில்வந்து
கொப்பரைவெந்நீராடிக் கூந்தலையுந்தானுலர்த்தி
பொற்புடவைகட்டிப் புனிதவெண்ணீரணிந்து
தன்னுரியபூசை தவறாமலேமுடித்து
அன்னங்கறிவகைக ளறுசுவையுந்தான்சமைத்தாள்
அத்தருணந்தன்னி லரசனும்மந்திரியுந்
தத்தமதுபூசைமுறை தவறாமலேமுடித்தார்
அன்னப்பொருநடையா ளன்னங்கறிபடைக்க
மன்னனும்மந்திரியும் மகிழ்ந்துண்டினைப்பாறிச்
சந்தனந்தாம்பூலந் தரித்தோரிடத்திருக்க
வந்தனந்தானுமுண்டு மனங்களித்தாள்மாதுநல்லாள்
மந்திரிதன்வேந்துரையான் மாளிகையெல்லாம்போய்
விந்தையெல்லாம்பார்த்தவர்க்கு வேண்டுங்கருவிகளும்
பொன்னுடையுஞ்சிறந்த பூஷணமுந்தாமெடுத்தான்
மின்னுளுமங்கவட்கு வேண்டியதெல்லாமெடுத்தாள்

அப்பாலமைச்சனைரகளையெல்லாங்கூட்டித்
தப்பாதிருக்கத் தனதுமுகரொன்றுரைத்தே
அரசனணிந்தகலனை யாழிமுகரொன்றும்வைத்தே
விரகுடனேயந்துபுலி வேடத்தையுமன்னையும்
வணங்கியழைத்து மணிபடியெல்லாங்கடந்தே
இணங்குகுளமுங்கடந்தா ரெய்திருஞ்சோலைதனில்
பூங்காவனத்திற் புகுந்தாராம்மூவர்களும்
பாங்காயங்கோர்மரத்திற் பாவைதனையிருத்தி
மரத்தின்கிளைகள்வெட்டி வாகாயோர்தேர்சமைத்துக்
கரத்தினாலல்லமையைக் காட்டினான்மந்திரியும்
மந்திரியாற்செய்துவைத்த மணித்தேரைப்பார்த்தரசன்
இந்திரவிமானமிதற் கீடல்லவென்றுரைத்தான்
செந்திருவைப்போலிருக்குஞ் சேயிழையைத்தேரில்
வைத்து, அந்தரத்தி லிகுவமிரண்டுங்கூட்டி
மன்னவனும்மந்திரியும் வாம்பரியின்மேலேறிச்
சென்றார்பரிச்செவியிற் சூட்சமந்திரத்தை
குதிரையிரண்டும்வழி கொண்டதாகாயமதில்
எதிரேரிச்சென்ற திரண்டுமந்தமேற்றிசையில்
செல்லும்வழியிலந்தத் தேசவளங்களெல்லாம்
மெல்லியரேபார்த்திடென்று வேந்தனுந்தான்காட்டி
சென்றாகடல்கடந்து தேசம்பலநடந்தார்
அன்றோர்பூஞ்சோலை யருகுகண்டுதானிறங்கி
பூமிதனிற்சிறந்த புரவிவிட்டுங்கீழிறங்கி
தேமழகியையுந் தேர்விட்டுகீழிறக்கி
சாலவிளைப்பாறிக் தான்போகவேணுமென்றோர்
ஆலவிருட்சத்தி னடியிலேபோயிருந்தார்
மந்திரிகையொருவி மன்னன்பார்க்கத்திருக்கப்
பைந்தொடிதன்மடியிற் படுத்தான்புலிராஜன்
மாதுமடிமீது மன்னன்றலைவைத்துக்
காதலுடன்படுத்துக் கண்டுயின்றாரம்மாலே
மன்னவனக்கண்டுயில மந்திரிபாராக்கொடுக்க
கன்னியந்தமன்னவன்மேற் கைவருடிக்கொண்டிருக்க



விஜயநகர வரலாறு

இந்தவிதமாக யிவர்களிங்கேயிருக்க
அந்தவிஜயநகர மடுத்ததைநான்புகல்வேன்
வரதபரதேசியென்னும் மந்திரியுமாதரசும்
அந்தநாளவ்விரவி லகன்றுவெளியேறியபின்
வேந்தர்கள்வேந்தன் விஜயநகராதிபதி
வந்திழையாள்சொற்படியே யெண்ணினான்நாளதனை
இன்றைதினத்தோடே வேந்திழையாள்சொல்லியநாட்
சென்றுவிட்டதென்று தெரிந்தந்தநாளிரவில்
ஆலோசித்தேயிருந்தா னன்றுவிடிந்தபின்பு
மாலோடரசன் மறுநாளுதயமதில்
கன்னிமாடத்திலந்தக் கன்னியிடம்வைத்திருந்த
மின்னிடையார்தாதியரை விரைவிலழையுமென்றான்
வேந்தன்மொழிகேட்டு விரைவிற்சிலரோடி
வந்திழைமார்மாடமதி லெய்துஞ்சமையமதில்
அங்கிருந்ததாதியர்கள் ஆயிழையாளவ்விரவில்
தங்கியிருந்தவிடம் தனிலிருக்கக்காணமல்
நெஞ்சந்திடுக்கிட்டு நினைவுந்தடுமாறி
யஞ்சியந்தமாளிகையி லறைகளெல்லாந்தேடி
எவ்விடத்துங்காணாமை லேங்கினார்தாதியர்கள்
அவ்விடத்திலேகாவ லாளிகளையுங்கேட்டார்
எல்லாருங்காணோமென் றியம்பினாரல்லாமல்
நல்லாளைக்கண்டமென்று நவின்றாரொருவரில்லை
வாசல்காப்போருமிங்கே வரக்காணோமென்றுசொன்னார்
பாசிழையாள்பட்சியைப்போற் பறந்துதான்போனாளோ
ஆரோவொருவன்வந்த னவளைப்பாராவில்வைத்தார்
தாரோதிபின்பவனைத் தனித்தழைத்துவார்த்தைசொன்
னான், அவனும்வெளியில்வந்த தாகவுந்தான்காணவில்
லை, எவன்மதன்போலே யிழிந்தான்பரதேசி
பரதேசிபோலெவனோ பாவனைசெய்துவந்து
வரிசேர்விழியாளை மயக்கிக்கொண்டோடினானோ
கைம்மயக்கோமைம்மயக்கோ கன்னிசெய்தவஞ்சகமோ

மெய்மயங்கிப்போனோம் விடியமட்டுந் தூங்கிவிட்டோம்
மன்னவன் செய்தண்டனைக்கு வசமாகிவிட்டோமே
என்னசெய்வோம் நாமினியென்றேங்கினார் தாதியர்கள்
பாங்கியர்களேங்கிப் பரிவித்து நிற்கையிலே
ஆங்கழைக்கவந்தோ ராசனுமைமயழைக்க
உத்தரவுசெய்தாரென் றேகினார் நேரம்
சித்தங்கலங்கித் திரும்பினார் தாதியர்கள்
வேந்தன்சமுகமதை மெலவியலார்வந்து கண்டு
பார்த்தமுடனேவணங்கிப் பக்கத்தொதுங்கி நின்றார்
போற்றி நின்ற தாதியரைப் பூமன்னன் பார்த்துரைப்பான்
நேற்றுவரைமங்கைசொன்ன நிருதிராளுள்ள தினி
மன்றலர்த்தமார்பன் வழுத்தினனம்மானை
தரைவேந்தன்சொன்ன மொழிகேட்டு தாதியர்கள்
உரைவாருழறி யுடலம்நடு நடுங்கி
கைகட்டிவாய்பொத்திக் கருத்து மிகக்கலங்கி
மைகொட்டுங்கண்ணார் வழுத்துவார் மன்னனுக்கு
போர்வேந்தரெல்லாம் புகழும்வெற்றிவேல்வேந்தே
பார்வேந்தே சொல்லப் பயமாயிருக்குதென்றார்
ஏதடி தாதியரே ஏதும்விசேடமுண்டோ
மாதரசியேதும் வகைமோசஞ்செய்ததுண்டோ
அஞ்சாமற்சொல்லு மதிசயங்களுண்டானால்
வஞ்சியரேயொன்று மறையாமலென்றுரைத்தான்
வார்த்தைதனைக்கேட்டு மனதுதயிரியமாய்ப்
பார்த்திபனே நேற்றோர் பரதேசியங்குவந்தான்
சத்திரத்திலன்னமுண்டான் றன்னையத்தக்காரியஸ்தர்
பத்திரமாய்க்கொண்டுவந்து பாராவில்வைத்துவைத்தார்
மங்கைநல்லாளோரிடத்தில் வந்துநின்று பாராவிற்
றங்கியிருந்தவனை தானழையுமென்றுரைத்தாள்
நான்போயழைத்துவந்து நல்லாளெதிராகவிட்டேன்
மான்போல்வாள்சற்றேநீ வாசலிறபோயிறென்றாள் (றேம்
சொற்போல்வெளியில்வந்தேன் சூழ்ந்திருந்தோ மெல்லோ

சிற்போல்நுதலிசெவ் வேடத்தரித்தவனை
மூன்னேநிறுத்தி மொழிந்தாள் சிலவார்த்தை
அன்னேரம்வந்தவனு மஞ்சிமடங்கிநின்று
சொன்னானவனுரைத்த சொல்லுங்கெதிர்மொழிகள்
நூன்னல்வெளியிலடை ஜாடையாய் நான்பார்த்தேன்
பேச்சுகளின்சாரம் பிரித்தறியக்கூடவில்லை
ஓய்ச்சலொழிவன்றி யுரையாடிக்கொண்டிருந்தார்
நடுராத்திரிவரைக்கும் நாங்கள்விழித்திருந்தோம் (ம்
படுவான்செய்மோச மென்னவோ மறந்துதூங்கிவிட்டோ
தன்னியிருப்பிடத்தைக் காலையிலேபோய்ப்பார்த்தோம்
மன்னவனேயவ்விடத்தில் மங்கைதனைக்காணவில்லை
வந்தபரதேசியையும் மங்கையையுந்தேடினதில்
எந்தவிடங்களினு மில்லாமையினாலே
பாராவிலுள்ளவரைப் பலவிதமாய்க்கேட்டதிலும்
ஆரேனுமந்தவழி யாகவரக்காணமென்றார்
சேயிழையும்வந்த பரதேசியுமங்கிருந்து
மாயமாய்ப்போன வழியுந்தெரியவில்லை
இந்தப்புதுமையைப்போ லெங்குநான்கண்டதில்லை
எந்தைபெருமானேயென் றிசைத்துநின்றாளோர் தாதி
கேட்டானரசன் கிளர்ந்துபெருமூச்சுவிட்டான்
நாட்டாருங்கேட்டார் நகைப்பாரெனநகைத்தான்
எண்ணியவெண்ணமெல்லா மீடேற்றமாகலையே
பண்ணுமுயற்சியெல்லாம் பாழாய்முடிந்ததுவே
பரதேசிப்பையலிந்தப்பாவையைக்கொண்டோடிப்போனான்
சரசமிஞ்சிக்கசிவிற்கை தான்போட்டாற்போலாச்சே
நாட்டரசர்க்கெல்லாம் நகைப்புக்கிடமாச்சே
கேட்டபேரெல்லோர்க்குங் கேலிக்கிடமாச்சே
நன்றாயிருந்ததுகாண் நமதிராஜாங்கமுறை
என்றேதிக்கோபித் திருக்குமந்தவேளையிலே
சேனாபதியுஞ் சிலகாரியஸ்தர்களும்
தானாபதிகளுடன் சாமாதிகளும்வந்தார்

மந்திரியும்வந்து வணங்கியொருபாலிருந்தான்
சிந்தைதெரிந்தல்லோருஞ் சித்திரம்போலேயிருந்தார்
அந்தப்பொழுதரசன் அமைச்சன்முகம்பார்த்துரைப்
பான், மந்திரியேகேட்டீரோ மங்கைசெய்தவஞ்சகத்தை
வந்தானும்நேற்றொருவன் மங்கையிடஞ்சென்றானாந்
தந்தாயவளுந் தனித்துவைத்துப்பேசினளாம்
பாதியிரவுமட்டும் பரதேசிபேசினதைத்
தாதிகளுங்கண்டாராந் தாங்கள்துயின்றாராம்
பொழுதுவிடிந்தபின்பு போனவனைப்பார்த்தாராம்
முழுதும்பொய்யோ நிசமே மொய்குழலைக்காணாராய்
எங்குங்காணாமலதை எனக்குரைக்கவந்தாராம்
இங்கிந்தச்சங்கதிபோ லெவ்விடத்துங்கேட்டதுண்டோ
கன்னிமாடத்திலந்தக் காரிகைக்குக்காவல்வைத்தும்
என்னுத்தரவையன்றி யெவராயிருந்தாலும்
உள்ளேவிடவருக் குத்தரவுங்கொடுத்தார்
தள்ளாவிருந்தெனினுந் தடுத்துவிடவேண்டுமல்லோ
உமக்குநான்செய்துவைத்தவுத்தரவொன்றுந் தடையோ
நமக்குநீர்செய்துவைத்த சங்கதியுமொன்றாச்சே
இந்தவிதமெல்லா மிருக்கட்டுஞ்சத்திரத்தில்
வந்தவனைப்பாராவில் வைப்பதற்குக்காரணமென்
வைத்தவனாரவனை வரவழையுமென் றுரைத்தான்
அத்தருணம்மந்திரியு மவனைவரவழைத்தான்
வந்தவனைப்பார்த்தமைச்சன் வந்தபரதேசியைநீ
எந்தவகைக்காக விருத்திவைத்தாய்பாராவில்
சொல்லென்றபோதவனுஞ் சொல்வான்நடந்தவிதம்
வல்லிமின்னாளெங்களுக்கோர் வழக்கிசொன்னாளென்ன
வெனில்,நேருடனேசத்திரத்தில்நித்தமன்னமுண்பவர்க்
குப், பூரிகொடுத்துவரும் போதிருவர்க்குமொருவர்
பிரித்தவருண்டோவென்று பேசிக்கொடுங்களதை.
தெரிந்தவருமங்கே திகைத்துமுகம்பார்த்தால்
அவரைபிடித்திங் கழைப்புமென்றாளவ்வார்த்தை
தவறாமலப்படியே சாற்கொண்டெடுத்துவந்தோம்



நேற்றைய தினமுமவள் நிகழ்த்தியசொற்படியே
சாற்றிக்கொடுத்துவருஞ் சமயத்திலங்கொருவனை
நெஞ்சந்திகைத்துநின்று நிமிர்ந்தன்முகம்பார்த்தவனை
வஞ்சியுரைப்படியே மற்றவனைநான்பிடித்துக்
கொண்டுபோய்விட்டவட்குக் கூறினேனப்பொழுதே
வண்டுபோற்கண்ணியங்கே வைத்திடுபாராவிலென்றாள்
அந்தப்படியேதா னவனைப்பாராவில்வைத்தேன்
பிந்திநடந்த பிழையறியேனென்றுரைத்தான்
அந்தவுரைகேட்டரச னவர்முகம்பார்த்தேதுரைப்பான்
வந்தவனிவ்வூரானோ மற்றொருதேசத்தானோ
அடையாளத்தாலவனை யாராவுரைத்திடலாம்
உடையால்நடையா லுணர்ந்துரையுமென்றுரைத்தான்
சபையாரைநோக்கி யரசனுரைத்திடலும்
சபையிலிருந்தவர்கள் தனித்தனியேயோர்வார்த்தைசொல்
வார், காசிக்குப்போயொருவன் காவடிகொண்டிங்குவந்தா
ன், யோசிக்கும்போதவனையொழியவேறில்லையென்றோர்
பாதிசைமைகாரி பார்ப்பாத்திபுத்திரனோ
மாதரிமாரிபுந்தானேற்று வந்தானென்றார்சிலபேர்
ஆறுவன்காசியாத்திரைபோய்யெட்டாண்டு
தாறுகும்வந்தது விசாரியுமென்றார்சிலபேர்
இந்தப்படியா யிருந்தவர்களெல்லோரும்
அந்தப்பிராமணன்மே லவமானஞ்சொன்னார்கள்
சொன்னதெல்லாங்கேட்டரசன் துரிதமாய்ப்பார்ப்பாத்தி
தன்னையழையுமென்று சாற்றினனம்மானை.
தூதுவர்களோடித் துரையழைத்தாருன்னையென்று
கோதைபார்ப்பாத்தியிடங் கூறியழைத்துவந்தார்
வந்தவளையாத்திரைக்குன் மகன்போனானோவென் றுரைத்தார்
வந்தானோவின்னம் வரவில்லையோசொல்லென்றான்
வேந்தேயென்மைந்தன் வெகுநாளாய்ப்போயிருந்து
யாத்திரமுடன்னேற்றுப்பகல்வந்தானென் றுரைத்தாள்
அவனைநாம்பார்ப்போ மழைப்பாயெனவுரைக்கக்

கவனாருடன்வந்தமகன் காவடியைத்தோளில்வைத்து
சாப்பிட்டுதான்வருவேன் சத்திரத்திலென்றுசென்றான்
கூப்பிட்டுதபறுகற் கொண்டினைத்தேடுகிறேன்
எவ்விடத்திற்போனானோ யானறியேனென்றுரைத்தான்
அவ்விடத்திலேநடந்த வதிசயத்தைதானறியாள்
மன்னனதைக்கேட்டு மதித்தான்சபையிலுள்ளோர்
சொன்னதுவும்பார்ப்பனத்தி சொல்லுஞ்சரியாச்சே
நல்லதிருக்கட்டுமங்கே நடந்ததெல்லாங்கேட்டாயோ
சொல்லென்றான்யானறியேன்றுதொன்றுமென்றுரைத்தா
மன்னவாயுள் [illegible] கையுங்குச்சொல்லியல்லோ (ன்
பெண்ணனைதக்கட்டித்திப் பிழைசெய்தாயென்றுரைத்தா
ன், அய்யா நானொன்றும் அறியேனென்ன வுமது
செய்யானேயென்று தியங்கிபுகழ்த்தானவனும்
வந்தான்பரதேசி வடாதபதிக்குச்சென்றான்
சந்தேகமில்லாமற் சத்திரத்திலுண்ணவந்தான்
என்றுலகறிய, மிவன்மகனேயல்லாமற்
பின்றுணைவன்பெற்றவள் மெய்சொல்வாளோ
என்கானுரைத்தா, னெல்லவருமப்படியே
தான்கானுதென்றார் தரையரசன்கோபமுற்றான்
சிங்கத்தின்வாயிரையைச் சிறுபூனைக்கொண்டதுபோல்
பொங்குபுலிவாயிரையைப் புன்னரிகைக்கொண்டதுபோ
ஆனையின்வாய்க்கரும்பில் அறுப்பைவைத்ததுபோல் [ல்
பூனையின்வாய்மீனைப் புல்லெலிவாய்கவ்வுதல்போல்
வன்கருடன்வாயரவை மச்சங்கைக்கொண்டதுபோல்
என்காவலிலிருந்த வேந்திழையைப்பார்ப்பனத்தி
மைந்தன்கைக்கொண்டுசெல்ல வல்லமையுமுண்டாச்சே
இந்தத்துரோகமிவனாயன்றியா வரிதேப்பார்
உள்ளபடிசொல்லிவிடென் றவனையாய்க்கேட்டானும்
கன்னிதிலனுஞ்சுவையில்லை கட்டோடேசொல்லானே
கொன்றுவிடத்தான் பெண்மையிலே கட்டிவிட்டான்மைந்த
னிடம், [illegible] செய்த [illegible] சம்பாத்தியோ



விஜயநகரத்துராஜர் பிராமணத்தியைத் தண்டித்தல்.

மன்னவனிந்த வகைமோசஞ்செய்கரைனா
சுண்ணாம்பறையில்வைத்து சுட்டுவிடுமென்றுரைத்தான்
மாறுபடுத்திவந்த வஞ்சகப்பிராமணத்தி
கழுவுக்கேற்ற கோமுட்டிபோலானா
சிந்தைகொதித்தரசன் செப்புமொழிகேட்டுடனே
வந்தகொலைபாரிகளை மந்திரியும்பார்த்துரைப்பான்
கட்டிவைத்தசுண்ணாம்புக் காளவாய்தன்னிலிந்த
மட்டிமூண்டையைக்கொடுபோய் வைத்துவிடுமென்று
ரைத்தான், கொலைகாரியாமிவளைக் கொன்றுவிடுமென்ற
வுடன், தலையாரிகளவளைத் தான்பிடித்துச்சென்றார்கள்
வழிகூட்டிப்போம்பொழுது, மாநகரிலுள்ளோர்கள்
பழிகாரிசெல்லும், பரபரப்பைப்பாருமென்பார்
செய்தவினைசெய்தவரைச் சேருமேயல்லாமல்
எய்துமோமற்றோரிடத்திலேயென்றுரைப்பார்
அன்றொருமன்னவனை யமைடிப்பதாய்த்துணிந்து
கொன்றகொலையிவளைக் கொல்லாதேயென்றுரைப்பார்
இப்படிப்பவ்வூரிலுள்ளோ ரெல்லோருந்தான்பழிக்கக்
கைப்பிடிப்பாகப்பிடித்துக் காளவாய்சேர்ந்தார்கள்
கொலைபாளிகளவளைக் கொண்டுபோய்த்தானிருத்தி
மலையாமலுள்ளபடி வஞ்சகத்தைசொல்லிவிடு
சொல்லிவிட்டால்வேந்தனிடஞ் சொல்லுஞ்சிபாரிசினால்
மெல்லவிலக்கியுனை விட்டிடுவோமென்றுரைத்தார்
உரையுரையென்றோயா துரைத்ததும்பிராமணத்தி
பிரமைகொண்டார்போலவென்றும் பேசாமல்நின்றுவிட்
டாள், விள்ளத்தகுந்ததெல்லாம் விளம்பியும்பிராமணத்
தள்ளத்தனையுமிணங்கினளில்லையென்று (ஞ
வேந்தனுரைப்படியே பின்னவளைத்தான்பிடித்து
வாய்ந்தசுண்ணாம்பறையில் வைத்துவிட்டாரம்மானை
அன்றேதண்டிப்பானரசனென்றந்தெய்வமதை
நின்றேதண்டிக்குமென்று நிகழ்த்துமொழிமெய்யாச்சு

போனான் பிராமணத்தி புரவலனைக்கொன்றபழி
யேனோவிதியென்றிசையாரொருவரில்லை
வேந்தன்விஜயதரன் மின்னாள்சொல்வஞ்சகனை
ஆய்ந்தாய்ந்து நிந்தைபழித்து மதிமயங்கி
மின்னாரிசொன்ன விதமுடித்தவுடன்
மன்னவனை முடிக்கவெண்ணியந்நாள்
வேந்தருக்கெல்லாமோலை விட்டிருந்தகாலமதை
யாய்ந்துலகிலுள்ள வரசரெல்லாமன்னகரில்
வந்திருந்தார்மங்கை வரலாறுங்கேட்டுமனம்
நொந்திருந்தாரென்று நாவலுமொருகேட்டாசன்
நன்றாயிருந்ததல்லோ நாமந்தயாதரைக்
குன்றுமணமுடித்துக் கொள்ளலாமென்றநெஞ்சில்
எண்ணியிருந்ததுவும் வந்திழையாள்மாமோசம்
பண்ணியதுமிந்தப் பயித்தியக்காரத்தனத்தை
யாரார்கேட்டு பழித்தற்கிடமான
காரணமுமென்று கருதியவமானமிஞ்சி
இதுகபழிப்புக் கிடமாகநாமிருந்து
சிந்தைக்களித்தாக செய்திங்குவாழ்வதிலும்
பெண்ணாசையால்விளைந்த பெரும்பழியெல்லாந்திர
மண்ணாசைநீக்கி வனம்போய்த்தவம்புரிந்து
சித்தந்திருந்திச் சிவனடியைசேர்வதுவே
உத்தமமாருமென வுள்ளத்திலேமதித்து
மைந்தனுக்குத்தன்னுடைய மகுடத்தனைசூட்டி
சிந்தைவெருந்தவனுஞ் சேர்ந்தான்விஜயதரன்
அந்தவூரசுகவி யானைமதுபார்க்கவங்கே
வந்திருந்தவேந்தருந்தம் மாநகர்போய்ச்சேர்ந்தார்கள்
அந்நாள்விஜயநகரதனில்நடந்தகதை, சொன்னே
னினிமறந்திற்றாயிதுயன்னென்கதைசொல்வேன்

அண்டரண்டபட்சிகள் சொல்லுதல்.

லமரத்தடியி லாசனந்தபெண்மடியின் அ
மேலேதலையைவைத்து விழிதுயிலும்வேளையிலே
குத்திரனைத்தொட்டு தடவுமுடியுடைய



அந்தமரத்தி லமைந்தவொருகொம்பதனில்
இருந்ததண்டரண்டபட்சி யிரண்டங்கேஜோடாகப்
பொருந்துகொம்பிலேயிருக்கும் போதிலாண்பட்சியனை
பெண்பட்சிதான்பார்த்துப் பேசுஞ்சிலவார்த்தை
பண்புற்றநாயகமே பரவைகட்கெல்லாமரசே
இந்தமரத்தடியி லிருக்கின்றபேர்களிங்கு
வந்தவரலாற்றை வழுத்துவீரென்றுரைக்கப்
பறவையுரைக்குமந்தப் பாரவேந்தனூர்பெயரும்
இறைவன்பெயரு மியலமைச்சன்றன்பெயரும்
மன்னன்மகன்பெயரும் மந்திரிமைந்தன்பெயரும்
அன்னவர்கள்பொன்னகர் விட்டகன்றுவந்ததாகியதாய்
அந்தமரத்தடியி லமர்ந்திருந்ததிருக
வந்தகதையெல்லாம் வகைவிபரமாயுரைக்கப்
பேடைபரவையதைப் பிரியமுடனேகேட்டு
வாடியுருகி மனதுமிகவிரங்கி
அய்யோவிவர்களிந்த வாபத்திலேயாழ்ந்த
மெய்யாகவேதன் விதித்தவிதிதானோ
இத்தனை துன்ப மிவரைபோலெவர்படுவார்
அத்தனையுந்தெய்வபலத்தாலேகடந்துவந்தார்
நல்லதிருக்கட்டுமங்கே நண்ணியபிராமணத்தி
பொல்லாதபாவியென்று புகன்றீரொருவார்த்தை
வந்தபிராமணத்தி வண்டார்குழலணங்கை
அந்தவிஜயநகர்க் கவள்சேர்ந்திடாதிருந்தால்
மன்னனிருப்பிடத்தை மந்திரியெங்கேகாண்பான்
தன்னிகரியவனுயிரைக் கண்டுபிடிப்பதற்கே
ஆதலினால்மன்னவனுக் கவள்போலுபகாரி
பூதலத்திற்கிட்டாதெப் போதுமெனவெண்ணுகிறேன்
என்றந்தப்பேடை யியம்புமொழிகேட்டு
நன்றிந்தவார்த்தையென்று நகைத்ததுகாணம்மானை
அப்பாலும்பெண்பறவைக் காண்பறவைதானுரைக்கும்
இப்போதிவர்கள்பட்ட விடைஞ்சலெல்லாமேதமட்டு
இனிமேலுந்தந்திவருக் கிரண்டுவருமென்றுரைக்கத்





கனிவாய்ப்பெண்பாவை காதலைதான்கேட்கும்
இத்தனை துன்பமியர்க் கெய்திப் துபோதாதோ
மெத்தவு மண்டினனமென்றீர் - விளம்புமதைபென்று
ணரக்க, அந்தவிடஞ்சலைபுர் யாளுனைப்பேன் நீகேட்பாய்
மைந்தனிருவரும் மங்கையும்ச்சோலைவிட்டு
செல்லும்பொழுதிலிவர் திருநகர்ச்சமீபமதில்
அல்லும்பகலும் அனைவர்களுஞ்செல்வழியில்
ஒற்றைக்கால்மண்டபமொன் றண்டைதற்கூடியிவர்கள்
பற்றிப்போம்போதிலது படிரென்றிடிந்துவிழும்
இடிந்துவிழுந்திவரை பேசமாய்மடிவிடும்
மடிந்துவிடக்கூடுதுவர் மாதரசேயின்னமுங்கேள்
இந்தவாபத்திலுக்கு மிவர்தப்புவார்களெனில்
சொந்தநகர்போய்ச்சேர்ந் துனைமகனும்மங்கையரும்
இன்பமாய்வாழ்ந்து இவிருக்கும்நாளையிலே
துன்பமாபொன் றுவந்த சூழுமது வென்னவென்றால்
மன்னவனைவிட்டந்த மந்திரிபோனபின்பு
மின்னுமலர்சோலையிலே வேந்தனிருக்கும்போது
வந்ததொரு நாகமதை மன்னன்வெட்டினாலவே
ஐந்துதலைநாகமதற் கருணிப்பிள்ளைபோர்புதல்வன்
நாகலோகந்தனிலே நாடியிருப்பானவன்பேர்
வேகக்கருடனையும் வெல்லுங்கார்க்கோடகனும்
தந்தைதனையிந்தத் தரையசான் வெட்டினனை
அந்தக்கார்க்கோட னறிந்து சினந்துனைப்பான் [டான்
என்றகப்பன்தன் னுயிரை யிறைவன்மகன்கோன் றவிட்
கொன்றவனுயிரைப் போய்க்கடித்து நான்குடிப்பேன்
பழிக்குப்பழிவாய்க்கிடுவேன் பாரென்று கார்க்கோடன்
விழிக்கனல்கள்கொப்புளிக்க விண்டிருக்கின்றனவனும்
வேந்தனிவன்மங்கையுடன் மேவியரண்மனையில்
வாய்ந்ததொரு பஞ்சத்தின்மேற்படுத்து
நித்திரைசெய்யும்போது நெருங்கியந்தக்கார்க்கோடன்
கொத்திவிடத்தானைக் கொன்றுவிடப்போமுன்

இத்தாக்கியத்தை யெவ்வெளி முன்சொன்னாலும்
சந்தேகமில்லாமலவர் சமைந்திடுவோர்கள்ளாக;
இதுகாவிவர் தாமா மென்றண்டரண்டபட்சி
மதியா னுரைக்கவந்த வார்த்தையெல்லாங்கேட்டபேடை
ஆனவிதுபோல மாச்சரியங்கண்டதில்லை
மானாவிபங்களிப்பசைல் வார்த்தையுங்கேட்டதில்லை
கண்டதனைச்சொன்னவர்கள் கல்லாச்சனமானோரென்றீர்
உண்டோ ராவிபோசனத்தாற் குபாயமொன்றுநான்கேட்க
அதற்கு விமோசனமுண்டது நான்சொல்லிடுவேன்
எதற்குமருந்தொன் றிருக்காதோவைத்தியமையே
தனையாளும்வேந்தனுக்கோர் தலைபிள்ளையான்குழந்தை
கனையாமநெஞ்சமுருகக் கண்ணீரும்வாராமல
பெற்றபிதாவுமந்த பிள்ளைக்குத்தாயாரும்
உற்றுருஞ்சம்மதித்தவ் வொருமகவைக்கொண்டுவந்து
தந்தையுந்தாயாருந் தலைப்புறமுங்காற்புறமும்
மைந்தனைத்தாம்பிடித்து வாளாலவன்கழுத்தை
வெட்டிப்பலிகொடுத்தால் விட்டுவிடுங்கண்ணுருவம்
அட்டியில்லைமற்றொரு மருந்துசொன்னாற்சுபமில்லை
யென்றதட்சி யுரைத்ததெல்லாங்கேட்டபெடை
மன்றுநின்ற பெரியோர்களையும் நான்கேட்டதில்லையெனப்
பேதையிரண்டும் பலவிதமாய்ப்பேசியங்கே
சிறகைவிரித்துப்பறந்தே யிரைபெறச்செல்றதுகாண்
அண்டரண்டபட்சி யுரைத்தவுத்தரவார்த்தையெல்லாம்
மண்டபத்திலேயிருந்த மந்திரியும்பூதாகம்
சற்பன்னபானதைக்கஞ்ந்த தான்கற்றோர்தலைவனும்
விற்பனத்தோடதனை விவரமாய்க்கேட்டிருந்தார்
மந்திரியுமவ்வையாரும் மனதிற்கலக்கமுற்று
[illegible] லதைவெளியிற்பேசவில்லை
[illegible] திருவனையறியான்
அத்தருணந்தனிற்றிசைவிட் டாசனமெழுந்திருந்தான்
[illegible]
மந்திரிபுத்திரன்றோ தேரிற்கட்டி [illegible]



மந்திரியுந்தேர்பூட்ட மங்கையைத்தேர்மேலேற்றிச்
சித்தைமகிழ்ந்தவருந் தேசிகளின்மீதேறி
பூமிதனில்நடத்திப் போனார்கள்பொன்னகர்க்குத்
தாமதமில்லாமலவர் நடந்தேகிப்போகையிலே
கண்டரன்வழியிலொருநகைக் காலுள்ளமண்டபத்தை
அண்டரண்டபட்சியங்கே யுறைந்ததைக்கேட்டிருந்தோர்
சாட்சிகண்டோமென்றமைச்சன் ராவேந்தேயரசாயப்
பாய்ச்சலின்முன்சொன்னோமிசு பாதையிலிப்போநாம்
போய், மேவுபரிக்காதுகளில் விருந்தையிலைச்சொல்லியி
க்கே, தாவியிந்தமண்டபத்தைத்தாண்டுவதுபார்ப்போமெ
ன்றான், பரிக்கிசைந்தவிருந்தைப லியாமற்போய்விடுமோ
இருக்குமென்றுசொல்லியந்த துரைமகனுஞ்சம்மதித்
தான், தாண்டுபரிச்செவியிற்சொன்னார்கள்விருந்தையினைத்
தாண்டுபரிமண்டபத்தைத் தாண்டுகற்காய்மேலேறிச்
செல்லுமந்தமண்டபத்தின் றாவிக்குநேராகச்
செல்லும்பொழுது டிடுமென்றுகேட்டதங்கே
பார்த்தார்கீழாகவந்தப் பாழ்மண்டபமிடிந்து
வேர்தானடிபற்று வீழ்ந்ததுவிடக்கண்டார்கள்
பட்சியுரைத்ததைப் படியிதுவென்றேதிசையும்
அட்சணமேமந்திரியு மறிந்துகொண்டாரம்மானை
இதென்னவாச்சரிய மிதனால்நமக்குமிங்கோர்
தீதுவாராமலெந்தத் தெய்வமோசெய்ததென்று
தேயங்களாக நிகழ்த்திச்சிலநாட்
போயங்கேகண்டார்கள் புவனேந்திரநகரை
அங்கேநகருக்கடுத்தகோட்டைத்திடலவர்
தங்கியிருந்தார்கள்சிலர் தமையறைத்தான்மந்திரியும்
வந்தார்வணங்கிநின்றார் மன்னன்மகனென்றறிந்தார்
சந்தோஷமாகிநின்றார் தங்கண்முகம்பார்த்து
மாநகரிற்சென்று மகாராஜனிடத்தில்
போனவுன்றன்மைந்தன் புவனேந்திரனுடனே
புத்திசிகாமணியும் புறநகரில்வந்திருந்தார்
இத்தருணந்தன்னி லெனவுரையுமென்றதும்

அவர்கள் விரைந்தோடி யரசன் சமுகத்திற்
கவலையுடன் சென்று கய்கள் கைகட்டி வாய்புதைத்து
ஆண்டவனே தங்க ளருமைத் திருமகனும்
ஆண்டவமைச்சன்மகன் புத்திசிகாமணியும்
வந்தார்களிந்த மலைநகர்க்குக்கீழ்புறத்தில்
வந்தாருன்மைந்தனுமோ ரேந்திழையுமென் றுரைத்தார்
வந்தார்களென்மைந்தரென்ற வார்த்தைசெவிபுகவே
சந்தோஷமிஞ்சிச் சரீரம்புளகமுற்றான்
மாடுங்கயிர்க்கு மழைதிரண்டுபெய்ததுபோல்
தேடும்பசலிடத்தில் திரியமன்னரைச்சேர்ந்ததுபோல்
கண்போனவர்க்கிரண்டு கண்கொடுக்கவந்ததுபோல்
விண்போன தன்னுயிரை மீட்டுக்கொடுத்ததுபோல்
சென்றோர்கள்மைந்தர் சுகமாய்வந்தார்களென்று
மன்றலாடிற்று வரிசைப்படைகொடுத்து
இத்தனைநகரிப்படைத்து தேகம்புளகமாய்
மந்திரிபதியிங்கே வரவழைப்பீரென் றுரைத்தான்
உரைத்தமொழிகேட்டவுடனோடினா ரவர்கள்
அரைக்கணத்துக்குள்ளே யழைத்துவந்தார்மந்திரியை
வந்தவனைக்கண்டு மன்னன் மந்திரியைதான்பார்த்து
புத்திமகிழ்ந்து புகல்வான்புரவலனும்
தேசவனம்பார்க்கச் சென்றமைந்தர்வந்தனராம்
நேசப்பாசுடன்போய் நீரழைத்துவாருமென்றான்
அமைச்சனதுகேட்டகத்தில் மிகமகிழ்ந்தான்
இமைக்குமுன்னே பவுசெல்லாம் வரவழைத்தான்
பட்டத்தரசனுமோர் பட்டத்தரசியுடன்
இஷ்டமுடனிருந்த நாரெண்பதாயுங்கேட்டறிந்தேன்
தங்கத்திருவிலை சமைத்துமணிபதித்த
சிங்காசனத்தண்டிகையுஞ் சேர்த்துக்கொண்டங்குசென்று (ன்
வேந்தன்புதல்வனுக்கு வீற்றிருக்குமண்டபத்தில்
சேர்ந்துபுவனேந்திரனைக் கண்டவிட்டான்மந்திரியும்
மந்திரிமைந்தன்வந்து வணங்கினான்றந்தைதனை
அந்தச்சமயத்தில் [illegible]



எல்லோரும்வந்தங் கெதிரேவணங்கிநின்றார்
சொல்வாரமைச்சனந்தத் துரைமகனைத்தான்பார்த்து
இன்றுவரையாச்சோ யிதமாத்திரும்பவென்று
சொன்னானதைகேட்டுச் சொல்வோம்தன்னைன்றுரைத்
மகாராசனுமது மாதாவும்பாவர்களும் (அம
சுகமோவென்றங்க தானைமகனுந்தான்கேட்டான்
தாங்கள்வரக்காணாத் தளர்ச்சியொன்றேயல்லாமல்
ஈங்குசுகக்குறைவுங் கேடுமொன்றுமில்லையென்றான்
மாநகர்க்குச்செல்ல வனுமதிபெற்றகரியும்
பாவைதனையழைத்தா னம்பாரத்துடனே
பொன்குருமார்பன் புவனேந்திரனங்கே
சொன்னாபரணமணித் தாசாலங்கரித்து
முன்னடித்தண்டிகையில் முதலைகுழலையேற்றுவித்தும்
பின்னாலும்முன்னாலும் பெண்கள்படைசூழவிட்டு
வாள்வீரர்தம்மைமுன்னும் வல்லையக்காரர்பின்னுந்
தோள்வீரர்சிவிகைசுற்றிலுஞ்சூழவிட்டு
அம்பாரியானையின்மே லரசுதனையேற்றிக்
கும்பாகச்சேனையெல்லாங் கூடவரவிடுத்துத்
தன்மகனைபோரானை தனிலவுதாமேற்றி
மன்மதனைப்போலவர்கள் வரபார்த்துளமகிழ்ந்து
தானும்பரியேறித் தன்னுடனேகூடவந்தோர்
ஆனைநாற்பத்தொன்ப தானவமைச்சர்களும்
வாகனங்களேறிவர மற்றோருஞ்சூழ்ந்துவரச்
சேனைமாய்ச்சேனையெல்லாந் திரண்டுபடைசூழ
மன்னர்துரைமக்கள்சிலர் வாகனத்திலேறிவர
முன்னும்பின்னும்வீரர் முனைவாள்களேந்திவர
ஆனையெல்லாங்கூடிவர அசுவங்களாடிவர
மானனையார்கூடி வரிசைநடமாடிவர
மேளமுழங்க மிருதங்கத்தான்முழங்க
காளமுழங்கக் கனபேரிகைமுழங்க
வாரிமுழங்குதல்போல் வாத்தியமெலாமுழங்கத்
தேரின்மிசையேறிச் சிலநேசராஜர்வரத்

தாலவட்டமாலவட்டஞ் சத்திரவட்டந்தாண்டிவரக்
கோலவட்டவெண்குடைகள் கொடிகளெடுத்துவர
இன்னம்பலவிருது மெய்விட்டதுசூழ்ந்துவர
மின்னுஞ்சுடர்விரிக்கும் வெண்சாமரைவீச
குழலையழக்கங்கேட்டுக் கொண்டல்பதறித்துமறப்
பலவலங்காரத்துடனே பட்டணத்திலுட்புகுந்தார்
பட்டணத்திலுட்புகுந்து பவனிவந்தார்வீதிசுற்றி
எட்டிஎட்டிப்பார்த்தார்களேந்திழையாரெல்லோரும்
காமனோவென்பாருங் கதிர்வேலவன்றனக்கு
மாமனோவல்லவன் மருமகனோவென்பாரும்
மன்மதனென்றுரைப்பவற்கு வடிவில்லையேயென்பாரும்
பொன்மாலென்றுரைவனும் புயவண்ணனென்பாரும்
ஆறுமுகத்தானிவனென் றுரைவனுக்காறுதலை
யாறுமுகமாயிருக்கணு மிருக்குமென்பாரும்
புவனேந்திரனிவனே புத்திசிகாமணியும்
அவனேயென்பாருமவனல்லவடியென்பாரும்
தேசவளம்பார்க்கச் சென்றவர்வந்தாரெனவே
ஆசையுடன்சொல்வாரும் ஆமாமாவென்பாரும்
தண்டிகையிலேறியொரு தையல்வந்தாளென்பாரும்
எண்டிசைமன்னருக்குள் யார்மகளோவென்பாரும்
கலியாணஞ்செய்ததென்றுங் காவலன்போகாமையினாற்
சலியாரோபெண்கொடுப்பார் சரியாமோவென்பாரும்
மன்னருக்கெல்லாமிதுவும் வழங்கந்தானென்பாருஞ்
சொன்னதையேமற்றவர்க்குச் சொல்லிவருவாரும்
மாலைகொடுத்தவந்த மன்னவனேயெங்களுக்கும்
மாலைகொடுத்து மருவாயோவென்பாரும்
கைவளைசும்மா கழன்றுருளிவிழவே
செய்வளையாவென்று பொரிதான்செய்வாரும்
நீலவிழிசுருட்டி நொந்துருகப்பார்ப்பாரும்
மாலைமலர்சூடி மதிலெட்டிப்பார்ப்பாரும்
நூலிடைதள்ளாட நாடிவருவாரும்
காலில்விடுஞ்சிலம்பைக் கையில்விட்டுச்செல்வாரும்



கையிலிடும்வளையைக் காலிலிட்டுச்செல்லுவாரும்
கொய்யுமலர்ச்செடியை கொங்கையைத்தூக்காட்டுவாரும்
இன்னம்பலவிதமா யேந்திழையாரெல்லோரும்
மன்னன்வடிவுகண்டு மயங்கப்பவனிவந்தான்
இராஜகுமாரனும் மந்திரிகுமாரனும் பட்டணம்வந்து
சேர்ந்து இராஜாவைக் கண்டுகொள்ளுதல்
தெருவீதிசுற்றிவந்து செம்பொன்னரண்மனையின்
மருவுமணிமுகப்பு வாசலின்வந்துநின்று
பட்டமுடனுலாத்தி திருட்டிசுற்றத்தானேங்கி
மட்டவிழுந்தாரான் மதயானைவிட்டிறங்கி
தண்டிகையைப்பெண்களுடன் றாயார்மனைக்கனுப்பி
மண்டலத்துராஜனிடம் வந்தான்புவனேந்திரன்
மின்றுமுடிவேந்தன் வீற்றிருக்கும்மண்டபத்தில்
கன்னன்மதன்போலுங் காவலன்மைந்தன்வந்தான்
வந்துபுவனேந்திரன் மணியாசனத்திருக்குந்
தந்தையைக்கண்டவுடன் சாஷ்டாங்கமாய்ப்பணிந்தான்
மன்னனுடனே வணங்கிய தன்மைந்தனையுந்
தன்னிருகையாலே தழுவியெடுத்தணைத்து
பக்கத்திலவைத்துமுகம் பார்த்துமனமகிழ்ந்து
மெய்யுட்புளக மிகுந்திருக்கும்வேளையிலே
புத்திசிகாமணியும் புவிராஜன்பொற்பதத்தில்
பத்தியுடன்வீழ்ந்து பணிந்தங்கெழுந்திருந்தான்
நின்றவனைப்பார்த்து நிருபன்மனமகிழ்ந்து
தன்புயனைக்கையாலே தழுவியங்கோர்பாலிருத்தி
மனதுமகிழ்வாயிருந்த மைந்தர்வரக்காணாமல்
தனதுமனத்துள்ளே தரித்திருந்த துன்பமெல்லாம்
சந்தரகிரிவேந்தன் றருணைதகோந்தன்
வித்தையும்பூமகளும் விரும்புஞ்செப்புயத்தான்
பொய்மைவளநாடு புரக்குமிராசசிங்கம்
வையகமெங்கெங்கும் மலைமேல்விளக்குபோற்
றோன்றும்பெரும்புகழான் சொல்லியகப்பெத்தனையுந்
தான்றீர்த்துப்பாவாணர் தங்குவிபோலோடியதே

மைந்தனைக்கோட்டவுடன் மனத்துயரெல்லாம்நீங்கிச்
சிந்தைமகிழ்ந்திருந்தான் றேர்வேந்தனம்மானை
அந்தருணமந்திரிகளனைவோருமுவந்திருந்தார்
புத்திசிகாமணியைப் புவனேந்திரன்றனையும்
மின்னுமுகம்பார்த்திவ்வூர் விட்டகன்றதான்முதலாய்
இந்தநாள்வரையிலும்நீ ரெந்தெந்தநாடுசென்றீர்
சென்றதுவுமவ்விடத்திற் றேர்ந்தவரலாறுகளும்
ஒன்றுந்தவறு மனைத்துமிங்களென்றுரைத்தான்
பூபாலன்சொன்னதெல்லாம் புவனேந்திரன்கேட்டுப்
பார்வையினால்மந்திரியின் பாலன்முகம்பார்த்தான்
பார்த்தகுறிப்பறிந்து பார்த்திபனைத்தான்பார்த்து
சீர்த்தபுத்திசிகாமணியுந்தானுரைப்பான்
படியேழையும்புரக்கும் பார்த்திபனேநின்புதல்வன்
விடையாலடியேன்செய் விண்ணப்பங்கேளுமையா
தங்கள்விடைபெற்றுத் தரணியெல்லாம்நாங்கள்சுற்றி
இங்குவந்ததுசெய்தியெல்லாம் யான்சொல்லக்கேளுமென்
றும், மன்னன்மகனாரும் மந்திரியுமாய்ப்பிறகு
பொன்னகரைநீங்கியங்கே புகுந்தகதைமுதலாய்
மைந்தன்பிரிந்ததுவும் மாதரசைதோய்ந்ததுவும்
பித்தியவனிறந்த பேச்சுமந்தவேளையிலும்
தான்வந்துசேர்ந்தாகச் றனக்குயிருண்டாக்கியதும்
மான்வந்தகன்னியுடன் மாநகர்க்குவந்ததுவும்
மண்டபத்தைத்தான்கட்டுவித்ததுவுமீறு
விண்டந்தமன்னனுக்கு விளம்பினானம்மானை
அண்டாண்டபட்சிசொன்ன வந்தரங்கவார்த்தையுட்பட
மண்டலத்துவேந்தனுக்கு வழுத்தாமலேயுரைத்தான்
புத்திசிகாமணிதான் புகன்றதையெல்லாங்கேட்டுச்
சித்தங்கலங்கித் தெளிந்தான்சிலவேந்தன்
இருந்தவர்களெல்லாம் பிரமிப்படைந்தார்
அருந்துயரந்தானிவர்போ லாரேசகித்திடுவார்
இத்தனைதுன்பமையோ விவர்க்குவரலாமோ
அத்தனையும்புத்தியினா லல்லவோவிலக்கிவைத்தார்



என்றுபலசொல்லி யிரங்கிநல்லவருந்
துன்றியபேரெல்லாந் துதித்தார்கள்மைந்தர்களை
அப்போதரசனமைச்சன்மகனைத்தழுவி
இப்போதிதுநான்வயிற்றி லென்மகன்றான்பிறந்தான்
அப்போதொருபா அமைச்சர்குலக்கொழுந்தே
வாய்வருமெப்பொருளும் வாய்ப்பாரோமன்னர்க்கு
எல்மந்திரிசெய்தவமே யுனைக்குமேலானதவம்
மன்னவர்க்குமைச்சன் மகன்சாத்துவாறுமுண்டோ
தனையபெயர்காத்தார்களிப்புவியிலென்றுரைப்பேன்
எனவுரைபாராட்டித் தருமனியன்றுமென்று
இறைவனுரைத்தமொழி யிருந்ததெல்லாங்கேட்டு
முனைநானைசன் மொழிந்தவைகளேமொழிந்தார்
புத்திமகிழ்ந்து புவனேந்திரனுடனே
அந்தபுரத்துக்கரசனெழுந்துசென்றான்
தான்புத்திசொன்னதிலும் நானுறாமலுங்கத்
கவன்புத்திகொண்டு தரைவேந்தன்புத்திரனை
தன்னுயிருக்கோர்கருத்தைச் சற்றுதிரைபாமன்
மன்னுயிரேதன்னுயிராய் மதித்திங்கேகாப்பாற்றி
கொண்டுவந்துசேர்த்தான் குழந்தையினையுக்கித்தி
கண்டுதமக்கென் றுணர்ந்தான்முதலமைச்சன்
முன்னானமனைக்குள் மெய்க்குழலாள்குறித்துவரப்
பொன்னனுதிவிளையின் மேற்பூலோகரம்பையைச்சென்று
குந்திசிலபோய் முடிவேந்தன்பத்தினிக்குள்
மைந்தன்புவனேந்திரன் வந்தானானதுவுமடைய
மன்னவீபூலோகரம்பை வருமிதுவொன்றுமுரைத்தார்
விசாலியவள்மகிழ்ந்து வீற்றிருந்தாளன்னேரம்
வந்தாள்பூலோகரம்பை வணங்கினாள்மாமியரை
அந்தட்சணமவளை யணைத்தெடுத்தாள்மாபோடே
மார்போடெடுத்தணைத்து வாழ்த்தியாசிர்வதித்தாள்
பார்வேந்தன்பத்தினியாள் பார்த்தாள்மருமகளை
கட்டித்தழுவிக் கழுத்தோடு மேலணைத்தாள்

கட்டழகிபோனதைக் கண்டுகளித்திருந்தாள்
அந்தச்சமயத்தில் அரசனுந்தன்புத்திரனும்
வந்தகுதிரைப்பரித்தா மருமகளோர்பால்மறைந்தாள்
பாலனங்கேவந்து பணிந்தான்றாயார்பதத்தை
மாவுடனேமைந்தனைத்தன் மார்போடணைத்தாள்
உச்சிமுகந்தாளுடனுட்டபுளகாங்கிதமுற்றாள்
பட்சமுடன்மகனைப் பார்த்தாள்களிப்படைந்தாள்
அந்நேரமந்த அரசனங்கே வந்திருந்தான்
பின்னுள்மகனுடன்போய் வேந்தனைப்பணிந்திருந்தாள்
இருக்கும்பொழுதங்கே யிருந்தசிநேகிதியர்கள்
பொருக்கென்றெழுந்தமைந்தப் பூலோகாம்பையைனை
மாமன்னர்பாதம் வணங்குமம்மாவென்றார்கள்
தாமவார்பூங்குழலாள் தலைகவிழ்ந்தோர்பாலொதுங்கி
சென்றுவணங்கினள் தன்சிலைவேந்தன்வாழ்த்தினான்
மன்றற்குழலாள்போய் மறைந்தொருபக்கத்தில்நின்றாள்
பட்டத்தரசிமுகம் பார்த்தரசன்பேசலுற்றான்
மட்டவிழுந்தார்குழலீர் மைந்தன்வரலாற்றையெல்லாம்
கேட்டுநோமன்னைபாவே கேட்டாற்சகிப்பீரோ
நாட்டிலிந்தச்சங்கதிபோல் நான்கேட்டதில்லையென்று
நடந்தகதையெல்லாம் நவின்றார்நரபாலன்
மடந்தைதருமபதியும் வருந்தமுந்தந்தோதைரமாய்
இருந்தாளப்பாலவர்களெல்லாருமன்னமுண்டு
இருந்துதாம்பூலமிட்டுச் சித்தமகிழ்ந்தார்கள்
மந்திரிமைந்தனங்கே மன்னன்சபையைவிட்டுச்
சொந்தமனைபுகுந்து தொழுதான்றாயார்பாதத்தை
தாயார்மகனைத் தழுவியெடுத்தணைத்து
வாராவாழ்த்தி மகிழ்வுடனேயிருந்தாள்
போய்வந்தசெய்தியெல்லாம் புத்திசிகாமணியின்
வாயுரையாற்கேட்டிருந்தாள் மந்திரியின்தாயாரும்
இந்தபடியேயிவரிருக்குநாளிலே
விந்தைக்கதையினி வழுத்துவேனம்மானை



மந்திரிகுமாரன் ராஜகுமாரன் பத்தினியைக்காத்து
ஆபத்து விலக்குதல்

அந்தப்புரத்தி லரசன்மகன்றானிருக்க
அந்தப்புரஞ்சேரு மாண்பனைக்குளேபுகுந்து
சிங்காரமனையும் புவனேந்திரன்றனையும்
மாலோடங்கேசேர்ந்து வாழ்ந்திருக்கச்செய்தானரசன்
துன்பமெல்லாந்தீர்த்தந் தோகையுடனவனும்
இன்பமுடனேவாழ்ந்திருக்குமந்தநாளிலே
பூவைமாரமேலிருந்த அன்றொருபட்சிசொன்ன
சிலமொழியப் புத்தி செகமறியுந்தாவிநின்று
மன்னன்மகன்வாழு மாளிகையினுள்ளேயும்
தன்னையொருவர்களுந் தானறியாதபடி
இரவுவேடியபட்டு மிருந்ததையமானவிஸ்பர
ஒருவாளையுமேந்திக்கு மறைந்திருந்தான்
இருக்கையிலே வெளியிலிருக்குமவ்வேளையிலே
அரவமதுவந்ததுவே அனல்சொலவிடங்கக்கிற்று
மஞ்சத்தின்மேலேறி மங்கையுமன்னவனுடன்
கொஞ்சங்களித்திருந்து நித்திரைசெய்யும்போது
பாதாளந்தன்னிருந்து பாருங்குன்னிலேறி
தானிதன்கடிக்கு மனைத்தான்கொடிப்பதற்கு
வந்தான்காணக்கோடைந்த மஞ்சமேற்கட்டிலின்மேல்
நின்றாய்கடிக்குதந் தனையப்பார்த்தேயரவம் (படம்)
அங்குவருகின்றபோது அதனையறைந்துதாவெண்டுகொள
செங்கைவாள்கொண்டுவெட்டிச் சிதைத்தானப்பாம்பு
தனை, வெட்டினபாம்பின்றுண்டங்கள் விழுந்ததுகீழே
வந்தகுருதி சொட்டிடக்கடொரு துளிபதக்கதானதி
கொங்கையின்மேல்வீழ்ந்தகுருதியைப் பார்த்தான்
இதற்கெதுக்கென்செயலா மென்றுசிந்தையுடன்
சேர்க்கதுவிட்டாலும் சிந்தைதீரமதா, தேய்த்துவிட
வாய்க்குள்ளாலிட்டுமவள்பயமின்னம்தீர்த்திடுமே
துணையாமனைவிகொங்கைதனைத்தான் தொட்டுமெடுக்கலாமோ
லே, விரைவிலெடுக்காவிடி லாம்விடமதுதேர்த்து



71

விதிம், ஆபத்தாக்குப்பாவமில்லை ஆகையினாலிதனைச்
சோபத்தையுண்டாக்குமுன்னே நடைத்தவிடவேண்டு
மென்று, மெள்ளத்தன் சுண்டுவிரல் நகத்தாலேயெடுத்து
துள்ளக்கீழேவிழுந்த துண்டமதைமந்திரியும்
கைவாளாற்சேர்த்து மேல் கட்டிலின்மேற்றொடையிலே
கைவாள்விழியுடைய மாதுவிழித்தாளுடனே
பார்த்தாள் தன்மார்பினிலே பட்டரத்தங்கைநகத்தாற்
சேர்த்தெடுத்தாக்கண்டிய தாதுசெங்கைவாள்வாயிரத்தம்
பட்டிருக்குங்குறியும் பாம்பின்றுண்டுக்கிளைமேற்
கட்டிலின்மேற்போட்டமைச்சன் கருத்துடனேநிற்பது
வும், எண்ணினாள் பட்சிசொன்னதெல்லாமவ்வேந்திழை
யாள், துண்ணென்றெழுந்தாள் துதித்தாளம்மந்திரியை
ஐயா நீயிங்குவந்த ஆபத்தைத்தீர்த்தாயெனவே
மையாலணைந்தவளைக் கட்டித்தழுவிநின்றாள்
வந்தவாபத்தைத்தீர்த்த மந்திரிவிலங்குபதைச்
சுந்தரத்தோள்வேந்தன்மகன் தோன்றுதுதாங்கினவன்
அந்தச்சமயமதி லங்கேவிழித்திருந்து
மந்திரியைத்தன்னுடைய மனைவிதழுவிநிற்கப்
பார்த்தானரசனந்தப் பாவையிம்மந்திரியைச்
சேர்ந்துதழுவுகையைத் தேன்மொழியும்விட்டுநிற்க
இப்படியாமந்திரியி னியற்கையெனமதித்து
மைப்படியுங்கண்ணாள் மனந்துணிவுந்தானணைந்து
கொண்டுமனைவிட்டரசன் குமாரன்வெளியிலொரு
மண்டபத்திற்குவர மந்திரியும்பின்பில்வர
வந்ததொருமந்திரியை மன்னவன்பார்த்தென்னுடைய
அந்தப்புரமானபள்ளியறைக்குமஞ்சாமல்
இந்தநடுராத்திரியி லிங்குவந்தவேந்திழையாள்
சந்தமலர்க்கையாலே தழுவநின்றபடியா
இப்படியாபத்தியுனக் கிருந்ததெனக்கேட்டான்
ஒப்பில்லாமந்திரியு முன்விதிதானெனவே
கேடபத்தாற்கேட்டதற்குக் கோதில்லாபட்சிசொன்ன
சாபத்தையெல்லாமங்கே சார்ந்த ஆபத்ததனை

சற்றுஞ்சொல்லாமலவன் றலைகவிழ்ந்து நிற்கையிலே
கொற்றவனுங்குற்றக் குறிப்பெனவேதான் மதித்து
இப்படிப்பட்டவென்னை மெதுமுதல் நீகொண்டிருந்தா
லப்படிக்கிவ்வண்ணமுன் றகந்திருக்குமோவாயில்
அன்றுபிரமனைத்தியா விறந்துபோனவென்னை
இன்றும் பிழைத்திருக்க வேல்செய் திடவேண்டும்
நீங்களிப்போதுகொண்ட நினைவிற்குநானிருந்தால்
இங்கோர்தடையாயிருக்கு மல்லோவென்றுசொல்லி
மன்னன்மகன்கேட்க மற்றதற்குமந்திரியும்
முன்னைமகண்டரண்டபட்சி மொழிந்தசாபத்தையெண்ணி
தமூலினதுமெய்யென்றுந் தானங்கேவந்ததுமாய்
பழுதென்றுங்குற்றமுந்தப் பாதொப்புங்கொண்டவன்
போ, நேராகத்தானுரைத்து நின்றான் றலைகவிழ்ந்து
பார்வேந்தன்மைந்தனவன் பகர்ந்தமொழிகேட்டு
கோபமுற்றுப்பாராக் கொடும்பவரைக்கூவிமனை
தபமுடனேநடந்த சங்கதியெல்லாமுரைத்து
அத்தினத்திராவில்மட்டு மமைச்சனைப்பாராவசத்தில்
வைத்திருக்கும்படிக்கு மறுநாளுதயமதில்
வேந்தன்சமுகத்தில் விரைவாகக்கொண்டுசென்று
பந்தமுடனேயிவன்செய் பாதகமெல்லாமுரைத்து
தீர்க்கவிசாரித்தவனைத் தெண்டிக்கவேணுமென்று
மார்க்கமுடனேசொல்லி வாருமென்றான்மன்னவனும்
அந்தவுரைகேட்டவர்கள் மிகப்பயந்து
சிந்தைகலங்கியந்த செல்வன்றனையழைத்து
பாராவிலேயவர்கள் பத்திரமாய்வைத்திருக்க
தீரதகோபமின்னுஞ் சிந்தைகொதிக்கமுடி
புத்திசிகாமணியாம் புவனன்விசாரணைக்குச்
சித்தப்படுத்தச் சிலைவேந்தன்மைந்தனங்கே
என்றுரைவான்பலவிதமா வேந்திரையாகக்குறித்து
மன்னனிவன்கற்பின் மதிப்புடையாளொன்றிருந்தோர்
தாகக்கதைவிட்டெனக்கு நாயகன்நீயாருமென்றான்
மோகம்வாலிங்கே மூயம்கொண்மந்திரியை



யென்னுடையபத்தினியா யிருந்துமிவ்வாறுசெய்தாற்
பின்னுமிவன்மேல்தான் பிரியம்வைக்கநீதியுண்டோ
இத்தட்சணமிவனை பெண்கரத்திலேபிடித்த
மந்திரவாளுக்கிரையாய் வைத்துவிடவேணுமென்றும்
மாதர்களைச்சிறிய மைந்தரைநிராயுதரைத்
தூதர்களையாருந் துதிக்கும்மறையோரை
நல்லதபசிகளை ஞானவாசாரியரைக்
கொல்லுவதுநீதியென்று கூறார்பெரியோர்கள்
ஆகலினாலிந்த வணங்கைநான்கொல்லுவதாற்
பாதகமுந்தீராப் பழியும்வந்துநேருமென்றும்
மங்கையுங்கற்ப வதியாயிருப்பதினால்
இந்தமந்திரியை இறைவன்விசாரிப்பதினால்
முடிவாகுஞ்சங்கதிகள் முற்றுந்தெரிந்தபின்பு
கொடிபோலிடையாளைக் குறித்துயோசிப்பமென்றும்
இந்தவிதந்தன்மனைவி யிடத்திலேசந்தேகம்
வந்துபலவிதமாய் மதித்துமனைபோய்ச்சேர்ந்தான்
பாராவில்வைத்திருந்த பாலனைக்காவலர்கள்
நேராய்விடிந்தபின்பு நீவாவெனவழைத்துக்
கொண்டுபோய்மன்னன் கொலுமுகத்தின்முன்புவிட்டுத்
தெண்டனிட்டுவேந்தன் றிருமுகத்தைத்தான்பார்த்து
புவனேந்திரன்றமக்குப் புகன்றதையெல்லாந்தெளிவாய்
அவனேரிநின்றுரைத்துவிட்டாரம்மானை

### மந்திரிகுமாரனை ராஜா விசாரணை செய்குதல்

மன்னனதைக்கேட்டு மனதுதிடுக்கிடவே
என்னதான்சொன்னீரிதுமகாநேத்தியென்று
மூக்கில்விரல்வைத்து முகூர்த்தமொருகால்வரையில்
தீர்க்கயோசித்திருந்து செப்புவான்மன்னவனும்
வாவையாவென்னுடைய மந்திரியின்புத்திரனே
பாவையாலுன்மேற் பழிவந்தகாரியமேன்
இந்தப்போர்நீயெடுக்க வேதுவேறேதுமுண்டோ
முந்தப்போய்பெற்றதெல்லாம் முதலோடிழந்தாயோ

வைத்தீர்த்துவிட்ட வகைமோசம் வாரோதோ
த்தியேசிச்செய்வதனை தெந்திசிந்தியப்பாராளும்
வாயோரென்றுரையைவிச் சொல்லாத்தொல்லுலகில்
தேர்த்தலைவேருக்கி நீத்தனைக்காலத்தினையோ
மோசப்படுத்தவிக்க முறைமைமெய்ச்சொன்னோரா
அல்லதுநீதானுமன் னறிவுமயக்கினையோ
பொல்லாதகாலமதனால் புத்தியபயேருக்கினதோ
சொல்லியாயுள்ளபடி சோதனைய்தாறுமாய்
யெல்லாம்விசாரித் திடுவேன்பயப்படவேண்டாம்
என்றரச னிதையெல்லாங்கேட்டவனும்
இன்மைசெய்தநேர்க்கலோ திங்குவரும்பாவிவர்க்கு
தன்னைச்செய்யத்தின்னமைவக்தால் ராமதற்கென்செயலாம்
நடந்ததையெல்லாமுறைத்தால் நாமுடனேதப்பவோம்
விடத்தைமிகத்தொடுத்தோமாயும் யோசனைக்குநின்று
னவந்தால்வரட்டும் வருமின்றுநிலைமையெலாம்
கொந்தாவதென்னவென்று நான்மனமயிலேயுத்து
மான்திரத்தர் கண்டத்தைவாரமத்தப்புறத்திற் (பி
றுன்குற்றஞ்செய்தவன்போற் றலையைக்கவிழ்த்துமன்ன
வேந்தன்மொழிக்கு விடையொன்றுஞ்சொல்லாமல்
ஒய்ந்தாரணைமெய் லாமைபோலக்குநின்றான்
ஒன்றும்பேசாமலை யுள்ளாந்தடுமாறி
நின்றநிலையைத் திருபன்மதித்தநீத்தான்
செய்யாதசெய்கையிவன் செய்தானிட்டானுகவிஞல்
மெய்யானதைக்கூறித்து விளம்பாமலாமல்
நின்றான்வாய்பேசாமல் நீயிப்படியிவனை
நன்றாகக்கண்டுக்கு நாம்விசாரிப்பமென்று
இத்தேரமட்டு மிதமாய்நாம்கேட்டதினும்
உன்றன்நடத்தியிருக்கு முண்மையென்றுஞ்சொல்லாம
எதாகிலுந்தெரியா வேணுமோ சீயிருந்தால்
மாதாவேமேலிச்சைவைத்த மயரஸியாகாயோ
நல்லதடாதம்பியுன் நடத்தையுமிப்படியோ
வல்லிமேலிச்சைதனை வைத்தாயோ வயக்கலையோ



தேற்றிரவிலென்புதல்வ னின்மனையிற்சென்றதுவுங்
கோற்றொடியுமெய்தழுவக் கொண்டுநின்றதுவுஞ்
செய்யாதகாரியத்தைச் செய்துகன்வல்லமையாற்
பொய்யாக்கலாமெனவோ புத்தியிலேநினைத்தாய்
செப்படிவித்தையைப்போற் செய்தோநடத்திவைத்தாய்
இப்படிச்செய்வாயென் றெனக்குத்தெரியாதே
மன்னன்றிருமுனைவி மந்திரிக்குமற்றவர்க்கும்
உன்னையென்றேசொல்லு மருமறைநாலாய்ந்திலையோ
எல்லாம்படித்திருந்து மிரைமாட்டிதோத்திருந்தாய்
கல்லாருஞ்சொல்லாதே காரியமோநீசெயலாம்
என்னடாவின்னமுனக் கேன்வாய்திறக்கவில்லை
பின்னையார்பக்கலுண்மை பேசவிருக்கின்றாய்
என்றுபலவிதமா யிருவிழியுந்தீப்பறக்க
வென்றுதடுஇன்று விளம்பினன்பார்வேந்தன்
மன்னன்சினந்து வழுதியதெல்லாங்கேட்டுப்
பின்னுமத்தப்பட்டுச்சொன்ன பெருஞ்சபமுநினைந்து
இருதலைக்கொள்ளிக்குள் ளெறும்புபோலேதியங்கி
ஒருதலைக்குநிற்கின்று முண்மைசொல்லென்றனதுஞ்
பொய்யுரையாமற் புலனும்வெளியாகாமல்
வையகத்தரசன் மகனம்மனைக்கண்டபடி
இன்றுதாஞ்சொல்வோமின் னெப்படியுமாகுதென்று
நின்றுவாய்ப்பொத்தி நிகழ்த்துவானையாநான்
பொழுதுபட்டபின்வந்தப் புரத்துக்குபோனதுவுந்
தழுவியதுமுண்மையென்று சாற்றினனம்மானை
சும்மாயிவன்மீது சொல்வானேநம்புதல்வன்
அம்மாவினம்மைச் சாராதும்விசாரித்துவெளி
செய்வோமெனத்துணிந்து ஜீவன்போனாலுமொரு
பொய்பேசாமத்திரிகளைப் போயழைத்துவாருமென்றான்
நின்றோர்களோடி நிருபனுமையழைத்தான்
என்றுடனமைச்ச ரெல்லாருமங்குவந்தார்
சேர்ந்தார்சபையோருந் தேர்வேந்தனையணுகிச்

சார்ந்தாரவரவர்க்குத் தக்கவிடஞ்சார்ந்திருந்தார்
அந்நேரமன்னனவர்கள்முகம்பார்த்துச்
சொன்னானடந்ததெல்லாந் தெரிந்தாரெல்லோரும்
வினையுமறியாதவரோ வீணானகாரியத்தைத்
தினையுந்தினைப்பாரோ செய்யத்துணிவாரோ
செய்யத்தகாதசெய்கை செய்தாலுயிர்க்குறுதி
செய்யப்படுமென்று சிறிதுந்தெரியாதவரோ
இந்நாள்வரையிவனுக் கில்லாதபுத்தியிவன்
தன்னாலேவந்ததுவோ தருவித்துச்செய்தாரோ
பலநாளும்பாசாங்கு பண்ணித்தான்வந்தானோ
இலைபாயிலிந்தவென்ன மிடைகட்டிவந்ததுவோ
கலைச்செயலோ கருத்துமயங்கினதோ
இத்தகைமந்திரிகள் செய்கையைக்கைவிட்டாரோ
நெறியானதைமறந்து நிலைமைதவறினாரோ
வெறிதான்பிடித்தாரோ வினையோவிதிப்படியோ
சொல்லுதற்கொண்ணாத அனாடத்தைக்காணினரோ
அல்லவோதெய்வமன்றி யாரறியக்கூடியதை
தம்மரசன்மைந்தனவன்தன்மையெல்லாங்கண்டிருந்து
சும்மாவவனதாறு சொல்வான்பொய்சொல்வாரோ
இத்தகவிதம்மந்திரிமா ரிருந்தவர்களெல்லாரும்
சத்தமனதாப்படியே தவித்தவியேசொன்னார்கள்
வார்த்தையெல்லாங்கேட்டரசன் மந்திரிமாரையெல்லாம்
பார்த்திவனையின்னம் பலநாள்விசாரணைபால்
உண்மைவிசாரித்துரைக்கச்செயவேண்டும்
மென்மையிலேபெரி விளையாட்டுக்காட்டுகிறான்
ஆனதனால்நீங்க ளனைவருநாளொன்றிவனுக்குத்
தானொருவராய்த்தம்மு சமுகத்தின்முன்னிருந்து
யோசித்தவனையின்ன நுண்மைவிசாரித்திரண்டு
மாசத்துக்குள்முடிவு வழுத்துமமைச்சர்களே
இவனுமதற்குளுண்மை யேதுஞ்சொல்லாதுவிட்டால்
தவறுதியென்மரண தண்டனைக்குள்ளாவதென்று
ஏத்தவேவர்க்கு விடைகொடுத்தான்மற்றவருஞ்



சார்ந்துமறுநாண்முதல் விசாரணைசெய்துவந்தார்
இப்படிவிசாரணைக்க ளவர்தொடங்குநாண்முன்றில்
மைப்படியுங்கண்ணாளாம் மாதுலோகாம்பை
இராஜகுமாரனுக்குக் குழந்தைபிறந்தது
ஆகியிருந்தகர்ப்ப மதுமாதப்பக்காகிச்
சோகமிருந்து சுபமானவோர் தினத்திற்
பெற்றாளோராண்குழந்தை பெருந்துயரெல்லாந்தீரப்
பொற்றாரணிமார்பன் புவனேந்திரன்றனக்குக்
குழந்தைபிறந்ததென்று கோவேந்தன்றான்கேட்டுத்
தழைந்தமனமகிழ்ந்து தானமெல்லாந்தான்கொடுத்து
சாதகமாதி சடங்குகளெல்லாம்நிறைத்து
மேதினியால்வேந்தன் விசாரணையிலேதொடங்க
அங்கேநாளொவ்வொன்றும் கமைச்சர்களுமொவ்வொரு (வர்
